கல்கி



KALKI
2.3.86
ரூ.1.50.

இந்த இதழில்......

மேட்டூரில் ஒரு ஸிலிகான் புரட்சி!

—ஸ்பெஷல் ரிப்போர்ட்



நீலமுடி கருகரு;
கண்கள் புறுபுறு;
பையன் துறுதுறு;
உடல்வாகு கொழு கொழு.

மைதிலி என்னைக் காதலியில் குட்டி மைதிலியாய் வந்து தூள் கிளப்புகிற சிலம்பரசனுக்கு வயது இரண்டு. ஜாடை: அம்மா.

டி. ராஜேந்தர் சொன்னார்: "எனக்கு வேண்டியபடி அவனைக்கஷ்டப்படுத்திநடிக்க வைக்காமல், அவன் போக்கிலேயே அவனுக்குப் பிடித்தமானவைகளைச் செய்ய வைத்து, அதைப் படமாக்கி, நான் உபயோகித்துக் கொண்டேன். ஐந்து நாள் சிலம்பரசன் சம்பந்தமான காட்சிகளை, சுமார் ஏழாயிரம் அடிக்குப் படமாக்கினேன். ஆனாலும் படத்தின் நீளத்தைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தால் சுமார் 150 அடிக்கு மட்டுமே சிலம்பரசன் வரும் சீன்களைப் படத்தில் காட்டும்படியாகிவிட்டது. அதில் எனக்கு வருத்தம்தான்."

"மற்றவர்கள் படங்களிலும்உங்கள் மகனை நடிக்க விடுவீர்களா?"

"நோ! சினிமா எனக்குத்தான் தொழில்! என் பிள்ளைக்கு இல்லை!"

இப்போது ஓவர் டு சிலம்பரசன்:

"உன் பேர் என்ன?"

"சிம்பு."

"அப்பா பேர் என்ன?"

"ராஜேந்."

"அம்மா பேர் என்ன?"

"உஷா."

"பாப்பா பேர் என்ன?"

"சக்கியா." (தமிழ் இலக்கியா—சிலம்பரசனின் தங்கை.)

"விளையாடுவியா?"

"ஓ! கிக்கெட்! கிக்கெட்!"

(ஆடிக் காட்டுகிறான்.)



குட்டி மைதிலியுடன் ஒரு மழலைப் பேட்டி

"அப்பா கூட எதுல டாடா போவே?"

"ர்.ர்....ர்..... மாருதி. (ஸ்பஷ்டமாய்ச் சொல்கிறான் ஆக்ஷனுடன்).

"அப்பா சினிமால என்ன பண்ணுவார்?"

"டாடி.... ஸ்கூட்டர்.... டர்ர்ர்.... குண்டா அங்கிள். டிஷூம்.... டிஷூம்...." (சண்டை போட்டுக் காட்டுகிறான்.)

"டான்ஸ் ஆடு பார்க்கலாம்."


எள்ளளவு தயக்கமும் இன்றி ஏதோ டியூனை ஹம் செய்தபடி, உடனே டான்ஸ் ஆட ஆரம்பிக்கிறான்.

— மௌஷ்மி

• ஆர். வி. ரமணி.



அடர்ந்த காட்டுப் பகுதியில் எங்கோ ஒரு மலை முகட்டில் ஓர் இராணுவ முகாம். பாதுகாப்பு ஏற்பாடுதான். அவர்களுக்குத் தேவை மின்சாரம். இந்த மாதிரி இடங்களுக்கெல்லாம் மின்சாரக் கம்பிகளை இழுத்துக் கொண்டு போக முடியாது. டீஸல் ஜெனரேட்டரை மட்டுமின்றி அதில் எரிபொருளாகப் பயன்பட டீஸலையும் முதுகில் சுமந்து செல்வதென்பதும் கொடுமையான அனுபவம். அப்படியானால் வேறு என்ன செய்வது?



இன்னும் ஒரு குக்கிராமம். மின்சாரம் என்றால் என்னவென்றே தெரியாத பல கிராமங்கள் தமிழகத்துக்கு வெளியே இந்தியாவில் நிறையவே இருக்கின்றன. அங்கெல்லாம், மின்சாரக் கம்பிகளை இழுத்துச் சென்று இணைப்பு ஏற்படுத்தி..... எந்தக் காலத்தில் இரவு நேர வெளிச்சம் வரப் போகிறதோ! பொழுது போனால் இருட்டு, இருட்டு, வெறும் இருட்டுத்தான். அவர்களுக்கு இரவில் ஒரு விளக்கு எரிந்தாலும்

மேட்டூரில்


கூடப் போதும்! முடியுமா?

ஆழ்கடலில் எண்ணெய் எடுக்கிற பணியில் ஈடுபடுகிறார்கள். மலையுச்சியில் நுண் அலைத் (Micro Wave) தூண்கள் நிற்கின்றன. இங்கெல்லாம் மின்சாரத்தை மூட்டை கட்டியா கொண்டு போக முடியும்? மாற்று ஏற்பாடு ஏதேனும் வேண்டாமா?

இதற்கெல்லாம் விடையாக இப்போது வரப்பிரசாதமாகக் கிடைத்துள்ள ஒரு பொருள்தான் ஸிலிகான் என்கிற தனிமம்.

ஒரு விளக்குக் கம்பம். அதன் தலையில் பெரிய சட்டம். சட்டத்தில் இணைக்கப்பட்ட நூறு சூரிய ஸெல்கள். இவை பகல் முழுவதும் காய்கிற சூரிய ஒளியை அப்படியே வாங்கி மின் ஆற்றலாக மாற்றுகிற ஏவலாட்கள், சூரிய ஒளியை மின்சக்தியாக மாற்றி பாட்டரிகளில் சேமித்து விடுகிற அமைப்பு இது. சூரியன் மறைந்தவுடன் விசேஷ அமைப்பின் உதவியால்தானே இயங்கி, ஒரு ட்யூப் லைட்டை எரியச் செய்கிறது.

இந்த சூரிய ஸெல்களுக்குப் பெயர் 'போட்டோ வோல்டேய்க் ஸெல்' போட்டோ என்றால் நாம் உடனே புகைப் படத்தை



ஒரு ஸிலிக்கான் புரட்சி

எண்ணுவோம். அந்தக் கிரேக்கச் சொல்லின் பொருள் ஒளி என்பதுதான். காமிராவில் ஒளி ஊடுருவித்தானே புகைப்படம் கிடைக்கிறது? இன்றைக்குச் சூரிய ஒளியை மின்னாற்றலாக மாற்றித்தருகிற இந்தஃபோட்டோ ஸெல்கள் எதிர்காலத்தில் கார்களை ஓட்டக் கூடிய அளவுக்குக்கூட மாற்று எரி பொருளாகப் பயன்படும்.

இந்த மந்திர ஜால ஸெல்லுக்குத் தாய் என்று சொல்லக் கூடிய பொருள் ஸிலிகான். இது மிகவும் சாதாரணமான ஒரு விஷயம். பூமியின் மேல் பரப்பில், மண்ணில், நான்கில் ஒரு பங்கு என்கிற விகிதத்தில் தாராளமாகக் கிடைக்கிற ஒரு பொருள் இது.

தாராளம் என்பது, பொருள் கிடைக்கின்ற அளவை மட்டும்தான் குறிப்பிடுவது. ஆனால் மண்ணிலிருந்து இதைப் பிரித்து எடுப்பது என்பது மிகவும் சிரம சாத்தியமான வேலை. ஸிலிகான் என்பது இரும்புத் தூள் மாதிரி மண்ணில்கலந்துகிடக்கிறஒன்றில்லை. தேவையான ரசாயன மாற்றங்களைச் செய்த பின்னரே இது கண்ணுக்குத் தென்படும்.

இந்தப் பகுப்பு முறையின் நுணுக்கங்களைக் கற்றுத் தரும்படி மேற்கத்திய நிறுவனங்களை அணுகினார்கள் நம்முடைய மேட்டூர் கெமிக்கல்ஸ் நிறுவனத்தார். "ஆனால் அந்தச் செயல்முறையைக் கற்றுத் தருவதற்கு அவர்கள் சன்மானமாகக் கேட்ட தொகைக்குச் சூரியனையும் பூமியையுமே விலைக்கு வாங்கி விடலாம்'' என்கிறார் மேற்படி நிறுவனத்தில் பணியாற்றிய ஆர். வி. ரமணி. இன்றைக்கு இவர் மேட்கெம் ஸிலிகான் லிமிடெட் நிறுவனத்தின் டைரக்டர்.

'அப்படியா சேதி! பார்த்துவிடலாம் ஒரு கை' என்று மேட்டூர் விஞ்ஞானிகளே ஆராய்ச்சியைத் தொடங்கினார்கள். மிகவும் சுவையான ஒரு பணியாரத்தை எப்படிச் செய்வது என்று கற்றுத் தர முரண்டு பண்ணுகிற மாமியார்த்தனம். 'நீ என்ன சொல்லித் தருவது? இதோ நானே செய்து காட்டுகிறேன், பார்!' என்று வீராப்புக் காட்டுகிற மருமகளின் சாமர்த்தியம்!

முழுக்க முழுக்க இந்திய மூளை, இந்தியக் கருவிகள், இந்திய மூலதனம் என்று செலவிட்டு, இராப்பகலாய் ஆராய்ந்து, முதன் முதலில் ஒரு ஸிலிகான் குழந்தையைப் பெற்றெடுத்தார்கள். அந்தப் பிரசவ வேதனை இரண்டு முழு நாட்கள் நீடித்தது. பேறு கால மருத்துவம் பார்த்த குழுவின் தலைவர் ஆர்.வி. ரமணி. உடன் உழைத்தவர்கள், பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகத்தைச் சேர்ந்தடாக்டர் ஜி. சூரியன், (பொருத்தமான பெயர்தான்!), டாக்டர் ஏ. ஆர். வாசுதேவமூர்த்தி மற்றும் உதவிப் பொறியாளர் டி. சேஷசாயி இவர்கள்தான்.

1978 ம் ஆண்டில் தை மாதத்தின் தொடக்கம். பிறந்த ஸிலிகான் குழந்தையின் உயரம் பதினைந்து சென்டி மீட்டர். எடை நூறு கிராம்.

இன்றைக்குமேட்டூர்கெமிக்கல்ஸிலிருந்து பிரிந்து இந்தமேட்கெம்ஸிலிகான்லிமிடெட். தனி நிறுவனமாகச் செயல்படுகிறது. இப்போது நூற்றைம்பது கிலோ அளவில் ஸிலிகான் தண்டு உருவாகிறது! பெரும் அளவில் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தவும், ஈட்டித் தரவும் கட்டியம் கூறுகிற மேட்கெம் ஸிலிகான் தற்போதுதான் முழு அளவிலான உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது.

பிரதமர் ராஜீவின் பார்வை மட்டும் படாமலிருந்திருக்குமானால் இந்த ஸிலிகான் கனவும் குப்பைக் கூடையை எட்டிப் பார்த்திருக்கக் கூடும்.

அரசுத் துறையில் பரோடாவில் 200 டன் பாலி ஸிலிகான் தொழிற்சாலை ஒன்றை அந்நியத் தொழில் நுட்ப உதவியோடு நிறுவுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு வந்தன. இந்தத் திட்டத்திற்கு நூறு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. இந்தத் திட்டம் வெளியிடப்பட்ட போது நாடு முழுவதிலிருந்தும் விஷய ஞான முன்னவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பினர்கள். காரணம் மேட்கெம் நிறுவனம் ஏற்கெனவே இந்தத்துறையில் குறுநடை போடத் தொடங்கியிருந்ததுதான். மேட்கெம் தயாரிப்பின் வெற்றி வாய்ப்புக்கள், குறைவான விலை, தர உயர்வு எல்லாம் அலசப்பட்டன. அரைக் காசு அந்நியச் செலாவணியை விணடிக்காமல், அரசுத் துறை இத்திட்டத்தில் முதலீடு செய்வதாக இருந்த தொகையில் கால் பங்கு செலவில், முழுக்க முழுக்க இந்தியத் தொழில் நுட்ப அறிவையே பயன்படுத்தி 25 டன் பாலி ஸிலிகான் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு மேட்கெம் ஏற்பாடுகள் செய்திருந்தது.

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இதைக் கவனித்தார். அரசுத்துறைதிட்டத்தைநிறுத்தி வைத்து மேட்கெம் நிறுவனத்துக்கு ஓர் ஆண்டு அவகாசம் தந்து; தன்னுடைய திறனை அது வெளிப்படுத்த வாய்ப்பளித்தார். அந்த ஓராண்டுக் காலம் நிறைவடைய இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன என்ற நிலையில் ஸிலிகான் தயாரிப்பில் மேட்கெம் வெற்றியடைந்துவிட்டது. அது மட்டுமின்றி அதன் தயாரிப்பு இந்திய வெளிநாட்டு நிறுவனங்கள் ஏற்கக் கூடிய அளவில் தரமுள்ளதாகவும் இருக்கிறது.

ஸிலிகானைப் பிரித்து எடுப்பது சிரமமான வேலை என்று முன்னால் சொன்னோம். பிரித்தெடுப்பதுமட்டும்வேலையில்லை. அதைத் தூய்மைச் சிறப்புடையதாகவும் ஆக்க வேண்டும். 'எவ்வளவு தூய்மை?' என்பதை விளக்கிச் சொன்னால் உங்களுக்குக் கொஞ்சம் தலையைச் சுற்றலாம். சுற்றட்டுமே! கவனியுங்கள்.

ஆயிரம் கோடியில் ஒரு பகுதி தூய்மை கெட்டிருந்தால் ஒழிகிறது என்று அனுமதிப்பார்கள்!

ரமணியின் வார்த்தைகளில் சொல்வதானால்; ''ஆயிரம் கோடி தூய உள்ளங்கள்

அப்பா கலைஞர், மகன்...

'இந்திய சினிமாவின் தந்தை!' என அழைக்கப்படுபவர் தாதா சாகிப் பல்கே என்பவர்தான்! அதனால்தான், ஆண்டுதோறும் இவர் பெயரில் 'தாதா சாகிப் பல்கே விருது' என்று மத்திய அரசு ஒரு 'அவார்டு' கூட தருகிறது!

இப்படிப்பட்ட 'தாதா சாகிப் பல்கே'யின் ஒரே மகன், என்ன செய்து கொண்டிருக்கிறார் தெரியுமா? இன்று பிழைக்க வழியின்றிப் பம்பாய் நகரத் தெருக்களில் ஊதுவத்தி விற்றுப் பிழைக்கிறார்!

— சம்பத்குமாரி.

ஆதாரம்: 'காரவான்.'



உள்ள ஒரு உலகில் ஒரேயொரு கெட்ட மனிதன் இருந்தால் எப்படியோ, அப்படி!''

சாதாரண மேல் மண்ணில் ஸிலிகானுடன் பிராணவாயுவும், பலவகையான மற்ற உலோகப் பொருள்களும் கலந்து இருக்கின்றன. மொத்த மண்ணையும் ஃபெர்ரோ ஸிலிகான் என்கிற கலப்பு உலோகமாக முதலில் மாற்றுகிறார்கள். இது இரும்பும் ஸிலிகானும் கலந்த கலப்பு உலோகம்.

அப்புறம், பெர்ரோ ஸிலிகானை, திரவ வடிவத்தில், 'ஸிலிகான் டெட்ரோகுளோரைடு' என்று மாற்றுகிறார்கள். பார்ப்பதற்கு வெறும் தண்ணீர் மாதிரியே இது இருக்கும். இதில் பாஸ்பரஸ், டைடானியம், போரான் போன்ற பல பொருள்கள் கலந்திருக்கும். வடி கட்டும் முறையில் எல்லாப் பொருள்களையும் ஒதுக்கிவிட்டு ஸிலிகான் டெட்ரோகுளோரைடைச் சுத்தமாக எடுக்கிறார்கள்.

அதன் பிறகு கட்டுப்படுத்தப்பட்ட வெப்ப நிலையில் மேற்படி கலவையுடன் ஹைட்ரஜன் கூடுகிறது. அங்கே ஒரு சூடான மின்சார இழையும் (filament) இருக்கிறது. இந்த முறையில், ஹைட்ரஜன், குளோரினை மட்டும் தன்னோடு எடுத்துக் கொண்டு ஸிலிகானை 'அம்போ' என்று தனியே விட்டுவிடுகிறது. ஸிலிகான் மின் இழையைச் சுற்றிப் படர்ந்து பருமனாகிறது. ஸிலிகான் படிகங்கள் மெல்ல மெல்ல வளர்ந்து ஒற்றைத் தண்டாக 'பாலி கிரிஸ்டலின்' என்னும் பொருளாக உருவாகிறது.

மறுபடியும் இதை உருக்கி, இன்னும் தூய்மையான ஒரு சூழ்நிலையில் ஆர்கன் வாயுவுடன் சேர்க்கும்போது, உருளை வடிவத்தில் ஒற்றைப் படிகமாக சுத்தமான ஸிலிகான் குழந்தை பிறக்கிறது.

இந்த ஸிலிகான் உருளையை, மெலிதான செதில்களாகச் (wafer) செதுக்குகிறார்கள். கறுப்பு நிறத்தில் வட்ட வட்டமான அப்பளங்கள் மாதிரிதான். பின்னர் இது ஒரு பக்கம் மெருகு ஊட்டப்பட்டு 'முகம் பார்க்கும்' பளபளப்பு பெறுகிறது.

இந்தக் கறுப்பு அப்பளம்தான் — எல்லா நவீனச் சாதனைகளுக்கும் அடிப்படை. விண்வெளியுகத்தில்பிறந்தபயனுள்ள குழந்தை. இந்த ஸிலிகான் தகடுகளில் குண்டூசித் தலை அளவினதான டிரான்ஸிஸ்டர்களை ஆயிரக்கணக்கில் பதிவு செய்ய முடியும். நுட்பமான இந்த டிரான்ஸிஸ்டர்களை கம்ப்யூட்டர்கள் 'அச்சிடு'கின்றன.

கட்டுரை ஆரம்பத்தில்பார்த்த'போட்டோ வால்டேய்க் ஸெல்' இந்தக் கறுப்பு அப்பளப் பளபளப்பில்தான் உருவாகிறது. ஆக எல்லா விதமான எலெக்ட்ரானிக் சமாசாரங்களுக்கும் தேவையான இந்த ஸிலிகான் தகடுகளை உற்பத்தி செய்வதின் மூலம் அதுவும் இந்திய விஞ்ஞானத்திறமையோடு, இந்தியமூலதனத்திலேயே உருவாக்கிக் காட்டியுள்ளதின் மூலம் மெட்கெம் ஸிலிகான் நிறுவனம் மகத்தான சாதனையைப் புரிந்துள்ளது.

டி.வி., ரேடியோ, டேப்ரிகார்டர், கம்ப்யூட்டர் இன்னும் அளப்பரிய பொருள்களில் உபயோகமாவது தவிர, இப்போது சூரியனையே கட்டி இழுத்து வந்து வேலை வாங்கத் தொடங்கியாகிவிட்டது.


ஒரு ஃபோட்டோ வால்டேய்க் ஸெல் 0.5 வாட் மின்சாரம் தரும். இதுபோல் நூறு ஸெல்கள் விலை மூவாயிரம் ரூபாய் ஆகிறது. 50 வாட் ஆயிற்று. இருபது வருஷங்கள் இந்தக் கருவி களைப்பில்லாமல் உழைக்கும். பாட்டரிக்குமட்டும் அவ்வப்போது கவனிப்பு இருந்தால் போதும். தாராளமாக ஒரு ட்யூப் லைட்டோ, டி.வி.யோ இயங்கும்.

கிராமப்புற விவசாயியை மழை கைவிடுகிற நேரத்தில் பம்ப் ஸெட்டுக்கள்தான் துணை. இந்தச் சூரிய மின்சாரம் அவனுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதம்.

ஒரு வினா எழுப்பினேம். ''இவ்வளவு சுலபமான மின் ஆற்றல் பெறுவதில் மேல் நாடுகள் ஏன் பரபரப்பாக ஈடுபடவில்லை?''

''அவர்களுக்குச் சூரிய வெளிச்சம் என்பது அவ்வளவு சுலபத்தில் கிடைக்கிற ஒன்றில்லையே! இந்தியா மாதிரி வெப்பம் மிகுந்த பிரதேசங்களில் காய்ந்து வீணாகிற சூரிய சக்திதான் இந்தக் கருவிகளுக்கான மூலதனம். அந்த அளவில் நாம் மிகவும் கொடுத்து வைத்தவர்கள்'' என்கிறார் ரமணி

— சுப்ர. பாலன்.



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள். சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

"என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்"...

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப்படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் காலகட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

இத்தனை வருடங்களாக, சானிடரி பாதுகாப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேலைதான்!

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு... போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு. இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடி துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்.


தவிரவும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ் 10 உள்ள பேக்கில்

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/6746/R/TAM


எரிபொருள்
விலைவாசி
உயர்வுப்
பிரச்னை


சமூகப்
பிரமுகர்கள்
ஜி.பி.சமரசம்
தொண்டமான் திட்டம்
ராஜீவ் முயற்சி
பண்டாரி யோசனை


நல்ல காலம் பொறக்குது!
இன்னும் யோகம்
செய்யணும்!...
21-ம் நூற்றாண்டில்
நல்ல காலம்
பொறக்குது!



கல்கி

1986 மார்ச் 2
மலர் 44 இதழ் 31
குரோதன மாசி 18



கருத்துச் சுதந்திரத்தின் உச்சநிலை!

'கருத்துச் சுதந்திரத்தின் உச்சநிலை என்ன?' என்று கேட்டால், 'ஜே. கிருஷ்ணமூர்த்தி'-என்று ஒரே வார்த்தையில் பதிலளித்துவிடலாம்!

இந்தியாவிலிருந்து மேல்நாடுகளுக்குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் தத்துவார்த்தமான நூல்கள் எழுதியும் பெரும் புகழ் பெற்றவர்களுள் ஜே.கே.க்கு ஈடாக வேறு ஒருவரையும் கூற இயலாது. ஹக்ஸ்லி போன்ற மாபெரும் சிந்தனையாளர்கள் முதல் சாமானிய மக்கள்வரை பல்லாயிரக்கணக்கானவர்கள் அவர் பேச்சுக்களைக் கேட்கக் குழுமினார்கள். செல்வந்தர்கள் பலர் அவருக்கு அல்லது அவரது இயக்கத்துக்கு என்று தங்களது கணக்கிலடங்காத சொத்துக்களை எல்லாம் எழுதி வைத்தார்கள். ஆனால் செல்வமும் பெரும் புகழும் தம்மைப் பாதிக்க ஜே. கே. கடைசிவரை அனுமதிக்கவில்லை! தமக்கு வழங்கப்பட்ட சொத்துக்களையெல்லாம் அப்படியே திருப்பித் தந்துவிட்டார்! கடைசி வரை மிக எளிமையாக வாழ்க்கை நடத்தினார்.

712 நூல்களை எழுதியுள்ளார் ஜே. கிருஷ்ணமூர்த்தி. பதினைந்தாவது வயதில் அவர் எழுதிய முதல் புத்தகமே 27 மொழிகளில் பெயர்க்கப்பட்டு 40 பதிப்புக்கள் விற்பனையாயின. 16வது வயதில் முதல் சொற்பொழிவு நிகழ்த்தி, கடந்த 75 ஆண்டுகளாகத் தமது பேருரைகளால் கேட்பவர்களைப் பிரமிக்க வைத்து அண்மையில் மறைந்து போன ஜே.கே. உலகமே போற்றும்விதமாக என்ன சொன்னார்?

அவர் என்ன சொன்னார் என்பதைவிட என்ன சொல்லவில்லை என்பதைப் பட்டியலிடுவது எளிது என்று கருதிய ஹக்ஸ்லி, ஜே. கே.யின் நூல் ஒன்றுக்கு எழுதிய முன்னுரையில் கூறுகிறார்: 'அவர் குருட்டு நம்பிக்கைகளை வளர்க்கவில்லை; கொள்கைகளைப் பட்டியலிடவில்லை; ரெடிமேட் லட்சியங்களை உருவாக்கித் தரவில்லை; தலைவனாகத் தன்னைத் திணிக்கவில்லை; தன்னை முன்னுதாரணமாக்கவில்லை; ஆன்மீக மார்க்கத்தைப் போதிக்கவில்லை.....'

இதையெல்லாம் ஜே. கே. சொல்லவில்லை, செய்யவில்லை என்றால் வேறு எதைத் தான் கூறினார்? அவரது அடிப்படைக் கருத்து ஒன்றே. ஒவ்வொருவருக்கும் வழிகாட்ட அவரவர் உள்ளத்தில் தீபம் ஒளிர வேண்டும் என்பதுதான் அது. நாமே சுயமாகச் சிந்தித்து சத்தியத்தை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று விரும்பினார் அவர். ஒருவர் சொல்வதைக் கேட்கவோ அல்லது இன்னொருவர் காட்டிய மார்க்கத்தைப் பின்பற்றவோ அல்லது வேறொருவர் வகுத்த கொள்கைப்படி நாம் நடக்கவோ அவசியமில்லை. ஏன், ஜே.கே.யின் சிந்தனைகளேகூட ஒரு மதமாக அல்லது மார்க்கமாக உருவாகிவிடலாம்; அதை அனுமதிக்கக் கூடாது என்ற நோக்கில்தான் தமக்கு வாரிசு என்று யாரும் கிடையாது என்றும் தமது நூல்களுக்கும், சிந்தனைகளுக்கும் யாரும் வியாக்கியானங்கள் எழுதக் கூடாது என்றும் கூறிச் சென்றிருக்கிறார் ஜே. கே.

சத்தியம் என்பது அவரவர் உள்ளங்களில் உணரப்பட வேண்டியது என்று கருதிய ஜே. கே., அந்த சத்திய ஒளியைத் தூண்டுவதற்காகவே பேசினார், எழுதினார். ஐக்கிய நாடுகள் சபையில் ஒருமுறை, 'வெவ்வேறு நாடுகள் ஒன்றாக ஐக்கியமாகி இருக்க முடியுமா, அந்த ஐக்கியத்தை ஒரு சபை உறுதிப்படுத்த இயலுமா?' என்று வினா எழுப்பினார். விஞ்ஞானிகள் கூட்டத்தில், 'கம்ப்யூட்டர்களும் களிப்பூட்டும் தொழில்களும் உலகை ஆக்ரமிக்க அனுமதித்த பின் மனித மூளை என்னவாகப் போகிறது?' என்று கேள்வி கேட்டார். ஆசிரியர்களும் பெற்றோர்களும் கூடியிருந்த அவையில், 'கொடுமை என்பது பல ரூபங்களை உடையது; பரீட்சை என்பதைவிடப் பயங்கர உருவத்தை அது எடுத்ததுண்டா?' என்றார். அறிவாளிகள் திரண்டிருந்த சபையில், 'அறிவு அன்பின் எதிரி' என்று சொன்னார்.

ஜே. கிருஷ்ணமூர்த்தியின் யோசனைப்படி சுயமாகச் சிந்தித்துச் சத்தியத்தை உணர்வதும் அதன் மூலம் நிபந்தனை ஏதுமற்ற பரிபூரண சுதந்திரத்தை அனுபவிக்கப் பழகுவதும் இன்றைய மூளைச் சலவை அரசியலில் நம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா.—பாரதியார்.

பல்லாவரத்துப் பரமேசுவரன்

மீனம்பாக்கம் உள்நாட்டு விமான நிலையத்துக்கு நேர் எதிரே உள்ள கிளைப் பாதையில் திரும்பினால் ரயில் பாதை குறுக்கிடும். அதைத்தாண்டி வலது பக்கம்திரும்பிச் சிறிது தூரம் சென்றால் திருசூலம் என்று அழைக்கப்படுகிறஓர் அழகிய ஈசன் கோயிலை அடையலாம். நெடுஞ்சாலையிலிருந்து பாதை பிரியும் இடத்தில் பக்தர்களுக்கு வசதியாக 'திரி சூலம்' என்று பெயர்ப் பலகை இருக்கிறது. அதன் மீது மிகக் கரிசனத்தோடு யாரோ புண்ணியவான் சுவரொட்டியை ஒட்டி வைத்திருக்கிறார்! நல்ல தெய்வ கைங்கரியம்!

தூங்கானை விமானம் என்ற கஜப்ருஷ்ட விமான வடிவில் கருவறை அமைந்திருப்பதைக் கொண்டும், கல்வெட்டு ஆராய்ச்சியிலிருந்தும் சோழர் காலத்துத் திருப்பணி என்று உறுதியாகக் கூறுகிறார்கள். பத்து அரசர்களின் பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகிறதாம். திரிசூலம் கோவில் கல்வெட்டுக்களில் சில சென்னை மாநகரின் வேறு சில கோவில்களில் காணப்படுவதாகவும் ஒரு கட்டுரையிலிருந்து தெரிய வருகிறது! இது எப்படி நேர்ந்ததோ! இந்தக் கற்கள் மட்டும்பேசுமானால்எத்தனை சுவாரஸ்யமான சரித்திர சம்பவங்கள் தெரிய வரும்! ஒரு காலத்தில் இந்தக் கோவில் உன்னத நிலையில் இருந்திருக்க வேண்டும். அன்னியர் படையெடுப்பினாலோ இயற்கை உற்பாதத்தினாலோ கோவில் சிதிலமடைந்திருக்க வேண்டும். சமீப காலம் வரையில் இந்த அழகிய கோவில் இருந்த இடந் தெரியாமல் மலைகளினிடையே மறைந்திருந்தது.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் சிவத் தொண்டரான சிவபாத ஹ்ருதயா என்பவர் இந்தக் கோவிலைத் தற்செயலாகக் கண்டார். திருசூலநாதரின் தொண்டில் ஈடுபாடு கொண்டு சுவாமி சிவானந்தா அவர்களின் பரிபூரண ஆசியுடன் கோவிலின் மேன்மைக்கு உழைத்தார். 1972 ஆம் ஆண்டு திருக்குட நந்நீராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்தக் கோவிலின் தக்கார் திரு டி.ஜே. மணி மிகுந்த சிரத்தையோடு விழாக்களை நடத்த ஏற்பாடு செய்கிறார் என்றும், திருப்பணிக் குழுவினரின் பரிபூரண ஒத்துழைப்பு இருக்கிறது என்றும் ஒரு தொண்டர் கூறியதைக் கேட்க சந்தோஷமாக இருந்தது. குறைவற்ற பக்தியுடனும், நிறைவான திரவியங்களுடனும் சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் சனிப் பெயர்ச்சி சமயம் இங்கு நடந்த நவக்கிரஹ ஹோமத்தை நேரில் காணும் பாக்கியம் பெற்றிருந்த எனக்கு அத்தொண்டர் கூறியது வெறும் புகழ்ச்சி அல்ல வென்று உணர முடிந்தது.

அன்றுதரிசித்ததிரிசூலநாதரையும்,திரிபுர சுந்தரி அன்னையையும் மறுபடியும் தரிசிக்க ஆவல் மிகுந்த உள்ளத்துடன் சமீபத்தில் ஒரு நாள் சென்றோம். இருள் சூழும் நேரமாகி விட்டது.

கோவிலை அடைந்ததும் ஒரு பெண்மணி ''பிரசாதம்'' என்று சொல்லிப் பாய சம் கொடுத்தார். ''இப்போதுதான் ஸஹஸ்ர நாமம் முடிந்தது'' என்று சொன்னார். அடடா! இன்னும் கொஞ்ச நேரம் முன்னால் வராமல் போனோமே என்று தோன்றியது! சுவாமி தரிசனம்கூடச் செய்யவில்லை, அதற்குள் தித்திக்கத் தித்திக்கப் பாயசத்தை அருளிய கருணையை ஒரு நந்நிமித்தமாகக் கொண்டு மகிழ்ந்து கொண்டே பிரும்ம புரீசுவரனைத் தரிசனம் செய்தோம்.

பிரும்ம தேவர் பூஜித்த இடமாதலால் இந்த ஊருக்குப் பிரும்மபுரி என்று பெயராம். ''திருச்சுரமுடையார்'' என்பது கல்வெட்டுக்களில் காணப்படும் பெயர்.

சுரம் என்ற சொல்லுக்குக் காடு, பாலை நிலம் என்று பல அர்த்தங்கள் இருப்பதோடு குறுகிய கடினமான பாதை என்றும் ஒரு பொருள் இருக்கிறதென்றுஅகராதியிலிருந்து தெரிய வருகிறது! திருச்சுரம் மூன்று மலைகளினிடையே அமைந்திருப்பதால் இங்கே வரும் பாதை கடினமானதாக இருந்திருக்கலாம். வாழ்க்கை என்ற கடினமான பாதையையே கடப்பதற்கு உதவும் மார்க்கபந்துவாயிற்றே. அப்படிப் பொருள் கொண்டால்கூடப் பொருத்தமாகவே இருக்கிறது.

திருச்சுரமுடையானைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குப் பாதை கரடு முரடாக இருக்கிறதே என்று வருந்தினார் திரு ஒய். குப்புசாமி. கோவிலுக்கு எல்லாரும் வந்து தரிசனம் செய்ய வேண்டும்என்ற ஆசையால்

திருசூலநாதரின் கோவிலுக்குத் தமது சொந்தச் செலவில் நல்ல பாதை அமைத்துக் கொடுத்தார்.

ஈசனுடைய சரியான பெயர் திரிசூல நாதரா திருசூலநாதரா அல்லது திருச்சுரம் என்பதுதான் திருசூலம் என்று மருவியதா என்று யோசித்துக் கொண்டே தேங்காய்ப் பழங்களை அர்ச்சகரிடம் கொடுத்தோம். "கூடையில் நிறைய கற்பூரம் இருக்கிறது. எல்லா சந்நிதிகளிலும் தீபாராதனை செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டோம்.


சிவந்த செம்பினாலான பெரிய நாகாபரணம் சாத்தப்பட்டிருக்கிறது! வழக்கமாகச் சிவன் கோயில் கருவறையில் போக சக்தி அம்மன் செப்புப் படிவமாக இருப்பதைத்தான் பார்க்கிறோம். இங்கோ ஈசன் அருகிலேயே உமையம்மை நின்ற கோலத்தில் சிலை வடிவாகவே இருக்கிறார். இதற்கு விளக்கமும் கிடைத்தது! அன்னியர் படையெடுப்புக் காலத்தில் அம்மனுடைய கையில் பின்னம் ஏற்பட்டுவிட்டதாம். அதனால் அந்தச் சந்நிதியில் புதிய சிலையை ஸ்தாபித்தார்களாம். பகவானே அர்ச்சகர் கனவில் தோன்றி, பின்னமடைந்த தேவி தன்னருகிலேயே இருக்க வேண்டுமென்று கூறினதாகவும், அதனால்தான் பாகம்பிரியாளாகத் தேவி ஈசனுக்கருகிலேயே இருப்பதாகவும் கர்ண பரம்பரைச் செய்தி. அம்மையப்பனை அங்கு நிலவிய ஆழ்ந்த அமைதியில் திளைத்துக் கொண்டே தரிசனம் செய்தோம். ஆனால் அர்ச்சகர் சட்டுப்புட்டென்று அர்ச்சனையை முடித்துவிட்டது ஏமாற்றமாக இருந்தது.

கோவிலுக்கு வரும் அன்பர்கள் திருப்தியடையும்படி பூஜை செய்வது அர்ச்சகர்களுடைய கடமை. மக்களுடைய மனத்தைப் பகவான்பால் ஈர்த்து நாட்டில் நன்னெறியும், இறை உணர்வும் தழைக்கச் செய்யும் சமூக சேவையைச் செய்யும் தொண்டர்கள் அவர்கள். ஈசனுக்குப் பணி செய்வதை ஒரு பேறாகக் கருதி வறுமையோடு போராடிக் கொண்டு செய்து வருகிறார்கள்; இதற்காக அர்ச்சகர்களை நாம் பெரிதும் போற்றிக் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அவர்களும் அதற்குப் பாத்திரமாக விளங்கி. சிரத்தையோடு பணியாற்றினால் நமது மதிப்பில் மேலும் உயர்வார்கள். கோவிலைப் பற்றிச் சிறிது ஆர்வம் காட்டினாலும் ஒவ்வொரு சந்நிதியின் விசேஷத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டும். 'இன்ன புத்தகத்தில் எல்லா விவரமும் இருக்கிறது படித்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னால் ஆர்வம் குன்றிவிடுகிறது. கண்களால் பார்த்துக் கொண்டே விவரங்கள் தெரிந்து கொள்வது பக்தர்களுக்கு ஓர் இனிய அனுபவம். அந்த அனுபவத்தை அவர்கள் பெறும்படி செய்ய வேண்டாமா?

விபூதியைத் தரித்துக் கொண்டு பிராகாரத்தில் வலம் வந்தபோது கோஷ்டத்தில் சில அரிய சிற்ப வடிவங்களைப் பார்த்தோம்.

நாக யக்ஞ பூஷதரம்
நாதலயா நந்த கரம்

என்று முத்துசுவாமி தீக்ஷிதர் கண நாய





பாரதி புதையல் போட்டி

வானதி பதிப்பகத்துடன் இணைந்து கல்கி நடத்தும் இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான கூப்பன் கிடைக்கவில்லை என்று பலர் எழுதிக் கருத்துத் தெரிவித்திருக்கிறபடியால் போட்டி முடிவு தேதியை ஏப்ரல் 14ம் தேதிக்கு முடிவாக ஒத்தி வைத்திருக்கிறோம். இதற்குமேல் ஒத்தி வைக்க இயலாது. 'பாரதி புதையல் பெருந்திரட்டு' என்ற நூலின் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ள இந்தப் போட்டி பற்றிய விவரங்கள் அறியவும் கூப்பன்களைப் பெறவும் நூலைப் பெறவும், "வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை – 17" என்ற விலாசத்துக்கு எழுதவும். அல்லது நேரில் சென்றும் பெறலாம்.

— ஆசிரியர்

களைப் பாடியிருக்கிறாரே, அந்தக் கணபதியை இங்கே காணலாம். நாகத்தையே பூணூலாக அணிந்து கொண்டிருக்கிறார். வீராஸன தக்ஷிணா மூர்த்தியும் வித்தியாசமான கோலம்.

கருவறையின் பின்புறத்தில் உள்ள லிங்கோத்பவ மூர்த்தியில் ஒரு கதையே அடங்கியிருக்கிறது. பிரும்மா பறவையாகவும், திருமால் வராகமாகவும் உருவெடுத்து ஜோதி வடிவமான ஈசனின் அடிமுடியைத் தேடினார்கள் அல்லவா? வழக்கமாக வராகம் கீழேயும், பறவை மேல் நோக்கிப் போவது போலவும் காணப்படும். இந்த மூர்த்தியில் பறவையான பிரும்மா கீழ் நோக்கி வருகிறார். தாழம்பூவையும் உடன் அழைத்து வருகிறார்.

பிரும்ம தேவர் தாழம்பூவை அழைத்து வந்து ஈசனின் முடியிலிருந்து எடுத்து வந்ததாகப் பொய் சொன்ன பாபம் தீரவே இங்கு சிவ பூஜை செய்தார் என்று தல வரலாறு இருந்திருக்கலாம். இந்தச் சிற்பமும் பிரும்மதேவர் சிவ பூஜை செய்வது போன்ற இன்னொரு சிற்பமும் இந்த வரலாற்றை ஊர்ஜிதம் செய்கின்றன.

ஸ்ரீநிவாஸப் பெருமாளும் எழுந்தருளியிருக்கிறார். அதனால் திருசூலத்தைத் திரிமூர்த்தி தலமாகவே கருதலாம். முருகப் பெருமான் மணக்கோலத்தில் மயில்வாகனத்தில் அறுமுகனாகக் காட்சி தருவதோடு, குமரனாக முத்துக் குமார சுவாமியாகவும் காட்சி தருகிறார். ஆறுமுகன் சூரபதுமனைச் சேவலும் மயிலுமாக்கிவிட்டுத் திருத்தணிக்குச் சென்றபோது இங்குள்ள மலையிலும் தங்கினாராம். குன்று தோறாடும் கன்று அல்லவா? இதற்குச் சான்றாக மயில், தணிகை இருக்கும் திக்கு நோக்கியிருக்கிறது.

திருவொற்றியூர், திருவான்மியூர் தலங்களைப்போலவே இங்கும் அன்னைக்குத் திரிபுர சுந்தரி என்பது திருநாமம். 'திருபுரசுந்தரி' என்று எழுதியிருக்கிறார்கள். மூவுலகிலும் காணாத அழகி என்ற பொருளாக இருந்தால் திரிபுரசுந்தரி என்பதே சரி.

மங்களமான சிவப்பு நிறச் சேலையும், தாடங்கமும் அணிந்து திருமுக மண்டலத்தில் குறுநகை மிளிர அக்ஷ மாலையும் தாமரையும் ஏந்தி நிற்கிறாள் அன்னை. நீண்ட காசு மாலை மின்னலைப் போல மிளிர்கிறது. குங்குமார்ச்சனை செய்தார் குருக்கள். இங்கும் துரிதமாக அர்ச்சனையை முடித்துவிட்டார்.

ஓதுவார் அபிராமி அந்தாதி பாடி முடிக்கும்போது தீபாராதனை நடந்தது. ஞான ஒளியைத் தரும் அன்னையைக் கற்பூரப் பிழம்பின் ஒளியில் தரிசித்தோம். எதிரே நின்று காட்சி தருவது போலக் களை ததும்பும் தோற்றம்.


இந்தக் கோவிலுக்கு ஞானசம்பந்தப் பெருமான் வந்து பதிகம் பாடியிருக்கலாமென்று கூறுகிறார்கள். பதிகம் கிடைக்காத குறையைத் திருமுருக கிருபானந்த வாரியார் நீக்கியிருக்கிறார். திரிசூலத் திருப்பதிகம் பாடிக் கொடுத்திருக்கிறார்.

''திரு வளருந் திரிசூலத்தலத்தெம்மானைச்
சேர்வார்கள் செல்வமெலாஞ் சேர்வார்
தாமே''

என்று பாடுகிறார் வாரியார்.

சிவராத்திரி புண்ணிய காலம் வருகிறது. சிவநேயச் செல்வர்கள் திரளாகச் சென்று திரிசூலநாதரின் அடி வணங்கி, திரிபுரசுந்தரியின் வடிவழகைக் கண்டு மகிழ்ந்து பேரருளில் திளைக்கலாமே!

அட்டையில்:
சுனிதா — அனிதா.
வண்ணப்படம்: யோகா.



கங்கைக் கரையில் ஓர் அற்புதம்!

திரிவேணி சங்கமம் அல்லது 'ப்ரயாக்' என்கிற அலஹாபாத் நகரப் பகுதி கங்கையின் வெண்மையான வேகமும் யமுனையின் அமைதியான நீலமும் இணைகிற காட்சி. இது காலம் காலமாக நாம் அறிந்த சிறப்பு. அடி இழையாக சரஸ்வதி நதியும் கண்ணுக்குப் புலப்படாமல் இங்கே இணைவதாக நம்பிக்கை.

இந்தப் பகுதியில் இப்போது மயன் அமைத்த மாளிகை போல், ஓர் அற்புத அரண்மனை போல், ஏராளமான பொருட் செலவில் கம்பீரமாக எழுந்துள்ளது திருக்கோவில் ஒன்று. தென்னகப் பாணியில் இதற்குக் கோபுரம் அமைந்துள்ளது.

காஞ்சிப் பெரியவர்களின் அருளாணையினால் மட்டுமின்றி நேரடி மேற்பார்வையின் கீழும் உருவாகியுள்ள இதன் சரித்திரத்தை அறிய ஆதி சங்கரர் காலத்துக்கே நாம் போக வேண்டும்!

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் குமரில பட்டரை சந்தித்தது இங்கேதான். அந்த மகானை சங்கரர் சந்தித்த இடத்தை இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தேடிக் கண்டு பிடித்தார் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள். அந்தச் சந்திப்புக்கு ஒரு நினைவுச் சின்னம் இந்தப் பூமியில் மலர வேண்டும் என்று பரமாச்சார்யாள் அன்று நினைத்தார்கள். இன்று நிறைவேறிவிட்டது. ஸ்ரீ சங்கர விமான மண்டபம் கம்பீர எழிலுடன் உயர்ந்திருக்கிறது.

மூன்று மாடிகளில் சந்நிதிகள் என்பது ஒரு புதுமை. முதல் தளத்தில் காமாக்ஷியம்மனின் அருள் பாலிப்புத் திருக்கோலம். அடுத்த தளத்தில் மகாவிஷ்ணுவின் திருக்கோலம். மேல் தளத்தில் சிவலிங்கத் திருவுருவம். அதற்கும் மேலே தென்னகப் பாணியிலான ராஜ கோபுரம்.

இவ்வளவு அமைப்பும் பிரும்மாண்டமான கான்கிரீட் தூண்களின் மேல்! கங்கை வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிற அளவைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பான உயரத்தில் கட்டுமானம் நிற்கிறது.

பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் சென்று பார்த்தபோது வேலைகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு தளத்திலும் மேற்புறச் சுவர்களில் இராமாயணக் காட்சிகளும், திருவிளையாடல் காட்சிகளும் சங்கரவிஜயக் காட்சிகளும் வண்ண வண்ணச் சிற்பங்களாக, ஓவியங்களாக மிளிர்கின்றன. ஒவ்வொரு தளத்திலும் பல்வேறு தெய்வங்களின் சிறுசிறு திருவுருவங்கள்.

பிரயாகைப் பகுதியில் எந்த இடத்திலிருந்து பார்த்தாலும், "இதோ நான் இருக்கிறேன்" என்று அருள் பாலித்துக் கொண்டு கம்பீரமாக நிற்கும் இந்தத் திருக்கோவில் அந்த அளவில் திருச்சி மலைக் கோட்டையை நினைவுபடுத்துகிறது.

நாம் சென்றிருந்த நேரம் மாகமேளா உற்சவக்காலம். பணம், வசதி என்று யோசியாமல் பக்தி ஒன்றே குறிக்கோளாகி கிராம மக்கள் லட்சக் கணக்கில் கங்கா மாதா வழிபாட்டுக்காக வந்து குவிந்த தினம். அவர்களுக்குக் கண்களை மயக்குகிற காட்சியாக இந்தக் கோவில் தென்படுகிறது. அவர்களுடைய மொழி புரியாதவர்கள்கூட, "அற்புதம்" என்று அவர்கள் பிரமிப்பதை நன்றாக உணர முடியும்.

ஒவ்வொரு சந்நிதியிலும் உண்டியல்கள் இருக்கின்றன. நுழை வாயிலில் திருப்பணி நன்கொடைக்காக ஒரு ரூபாயானாலும் ரசீது தருகிற ஏற்பாடும் இருக்கிறது. இருந்தாலும் இந்தக் கிராமப்புற ஏழை மக்களுக்கு ஓர் அபூர்வமான பழக்கம். ஒவ்வொரு திருவுருவின் பக்கமும் நாணயங்களை அள்ளி வீசுகிறார்கள். உண்டியலை கொள்ளை போகிற நாட்டில் தெய்வங்களை கடத்தப்படுகிற தேசத்தில் இந்த அப்பாவி பக்தர்களின் மனவளம் பிரமிப்பூட்டுகிறது. குவிகிற நாணயங்களை, திருக்கோவில் தொடர்புள்ளவர்களைத் தவிர வேறு யாரும் தீண்டுவதில்லை.

மிகவும் அற்புதமான திருப்பணி. சற்றும் ஆரவாரமின்றி நடைபெற்று முடியும் தருவாயில் இருக்கிறது. சங்கர விமான மண்டபத்தின் கும்பாபிஷேகம் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் 13.3.86 குரு வாரத்தில் பகல் 12 மணிக்கு மேல் ஒரு மணிக்குள் நடக்கவிருக்கிறது. காணிக்கைகளை இந்தியன் வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் செலுத்தலாம்.

கங்கைக்கரையில் தென்னகப் புகழ் பாடும் இந்தத் திருக்கோவில் இன்றுள்ளோருக்கும் எதிர் கால இந்தியருக்கும் நிரந்தரமான ஒரு கலைப் பொக்கிஷம்.

— யெஸ்பால்



ஆபீஸில் இன்னொரு நாள் மூச்சு முட்டற வேலே...
பஸ்ஸுலே வீடு திரும்பறப்போ விழிபிதுங்கற
கூட்டம். அப்பாடி! வீட்டுக்கு வந்தா அலுப்புத்தீர
குளியல், களைப்பினைப் போக்கி
புத்துணர்ச்சியூட்டும் தம்ளர் ஹார்லிக்ஸ்.
Horlicks
The Great Nourisher
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

பால்ராஜ் விவகாரம் தொடர்கிறது

கென்னடியைக் காணோம்!



ஏழுமாதங்களாகப் புயல் அடித்துப் படாத பாடுபடுத்திக் கொண்டிருக்கிறது. இன்னும் கரையைக் கடக்கவில்லை! உரிமைப் பிரச்னையில் சிக்கித் தவித்து, தலைமறைவாகி, பின்னர் கடத்தப்பட்டு, அதன் பின்னர் உயர் நீதி மன்றம், உச்ச நீதி மன்றம் என்று படிக்கட்டுக்களை ஏறி இறங்கி, வேறு வழியே இல்லாததால், சபாநாயகரின் தீர்ப்பின்படி இரண்டு வாரகாலச் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டு ஜனவரி 25ம் தேதி இரவு வீட்டிற்கு வருகிறார், ஏ.எம். பால்ராஜ், வணிக ஒற்றுமை ஆசிரியர்.

இந்த இதழ் வெளியாவதற்கு முன் பால்ராஜ் மகன் கென்னடி கிடைத்துவிட்டால் சந்தோஷம்தான். நமது பிரார்த்தனையும் அதுவே. ஆனால் அந்த மகிழ்ச்சியினூடே எழக்கூடிய புதிய பல கேள்விகளுக்கும் பதில்கள் கிடைத்தாக வேண்டுமே!

அப்பா கட்டிலில் உட்கார்ந்து சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருக்கிறான் பதினைந்து வயதான இரண்டாவது மகன் தாமஸ் கென்னடி. அப்பாவின் கையால் இரண்டு கவளம் சாப்பிட்டால்தான் அவனுக்குத் தூக்கம் வரும். பல மாதங்கள் அப்பா ஊட்டும் அந்த இரண்டு கவளங்கள் கிடைக்காததால் இப்போது ஆவலோடு காத்திருக்கிறான். ஏதோ எண்ணச் சூழலில் இருந்த பால்ராஜும் திடீரென்று நினைப்பு வந்தவராக எதிரில் உட்கார்ந்திருந்த மகனுக்கு இரண்டு கவளம் தன் கையால் ஊட்டி விடுகிறார். திருப்தியடைந்து தூங்கப் போகிறான் கென்னடி.

கென்னடி இரண்டாவது மகனாக இருந்தாலும் துடிப்பான பையன். 'மின்சார பில் கட்ட வேண்டுமா?'; 'வீட்டு வாடகை கட்ட வேண்டுமா?'; 'ரேஷன் கடையில் சர்க்கரை, பாம் ஆயில் வாங்க வேண்டுமா?'; 'அம்மாவின் தலைவலிக்கு மாத்திரை எடுத்துத் தர வேண்டுமா?' எல்லாம் கென்னடிதான்.

படிப்பிலும் படு சுட்டி. ஜனவரி 27ம் தேதி காலை பள்ளிக்குச் (புதூர் அரசினர்

அரசாங்க சொத்து நம் சொத்து!



ஆந்திராவிலுள்ள 'வேலடி கொட்டப்பாலம்' என்ற கிராமத்து மக்கள் வெகுநாளாகத் தங்கள் கிராமத்துக்கு ஒரு விசேஷ பஸ் விட வேண்டும் என்று கோரி வந்தனர். கோரிக்கை நிறைவேறியதும் என்ன செய்தனர் தெரியுமா? அந்த பஸ்ஸில், இவர்களே சொந்தமாக வாங்கிய டேப் ரிக்கார்டர், ரேடியோ முதலியவற்றைப் பொருத்தினர்; கடவுள் படங்களை மாட்டினர்! அதுமட்டுமல்ல, அந்த பஸ் அதிகாலையில் தங்கள் கிராமத்துக்கு வந்ததும், ஊர் மக்களே 'முறை' போட்டுக் கொண்டு பஸ்ஸைக் கழுவி, பெருக்கிச் சுத்தம் செய்கின்றனர்!

— சம்பத்குமாரி.

ஆதாரம்: 'சண்டே'

உயர்நிலைப் பள்ளி) சென்றவன் திரும்பவில்லை.

ஆட்கள் பறந்தனர், உறவினர்கள் இருக்கும் வெவ்வேறு ஊர்களுக்கு. பையன் அங்கெல்லாம் இல்லை. கிலி பிறந்தது பால்ராஜுக்கு.

பத்து நாட்களாகிவிட்டன. போலீஸில் புகார் செய்தார் பால்ராஜ்.

வழக்கமாகப் பள்ளிக்குச் சைக்கிளில் செல்லும் கென்னடி காணாமல் போன அன்று அதை எடுத்துச் செல்லவில்லை. கையில் கடிகாரம் கட்டாமலும் போயிருக்கிறான். பள்ளியில் விசாரித்தால் 'அன்று அவன் பள்ளிக்கே வரவில்லையே' என்று பதில்.

துன்பச் சூழலில் ஆறு மாதம் சிக்கித் தவித்த குடும்பம் மீண்டும் சோகமயமாகியிருக்கிறது. பையனைப் பற்றிப் பேசும் போதே கண்ணீர் விடுகிறார் பால்ராஜ்.

''உங்கள் பையன் காணாமல்போனதற்கும், உங்கள் 'பிரச்னை'க்கும் ஏதாவது தொடர்பு இருக்கும் என்று நினைக்கிறீர்களா?''

''என்னைச் சிறையில் தள்ளுவது நோக்கம். அதுதான் நிறைவேறிப் போச்சே.''

''நீங்க ஜெயிலில் இருக்கும்போது கென்னடி உங்களை வந்து பார்த்தானா?''

''என் மூத்த மகனும், மனைவியும் என்னைப் பார்க்க ஜெயிலுக்கு வந்தபோது, 'நானும் வர்றேன்' என்று சொல்லியிருக்கிறான். ஆனால் அவர்கள் அழைத்து வரவில்லை. அங்கு என்னைப் பார்க்க அனுமதி பெற எத்தனையோ கெடுபிடிகள்.''

இவரது பிரச்னையில் முன்பு போலீஸார் முதல் மகனை ஸ்டேஷனில் கூப்பிட்டு மிரட்டியது நினைவுக்கு வரவே, பால்ராஜிடம், ''நீங்க ஜெயிலுக்குப்போனது உங்கமகன் கென்னடி மனத்தைப் பாதித்திருக்குமோ?'' என்று கேட்கிறேன்.

இதற்குப பதில் சொல்லாமல் யோசிக்கிறார் பால்ராஜ். முகத்தில் சலன ரேகைகள் ரேஸ் குதிரைகளாக ஓடி மறைகின்றன.

போலீஸ் கமிஷ்னரைப் பார்த்துச் சொன்னபோது, ''பால்ராஜ், நீங்க பயப்படாதீங்க.... உங்க மகன், ரெண்டாவது மகன்தானே.... கண்டிப்பாகக் கிடைச்சுடுவான்'' என்றுநம்பிக்கைதெரிவித்திருக்கிறார் தேவாரம்.

''எங்களுக்கு இப்ப உள்ள ஒரே ஆறுதல் அவர்தாங்க'' என்று தம் குடும்பத்தின் சார்பிலே பேசிய பால்ராஜ், புகைப்படத்தில் இருந்த ஒரு நபரைக் காண்பித்தார்.

படத்தில் காட்சியளித்தவர்: ''சோ.''

— நமது நிருபர்

கிழக்கே ஓர் உலகம்

8. ஒரு 'கோரோ'வில் கிடைத்த 'பூலா!'

"பூலா!" (நல்வரவு) என்று இருகைகளையும் உயரத் தூக்கி ஃபீஜி பாஷையில் சிரித்த முகத்துடன் ஃபீஜி கிராமத் தலைவர் என்னை வரவேற்றார்.

நாயுடுவும் மற்றவரும் சொல்லியிருந்தபடி நானும் பதிலுக்கு "பூலா!" என்றேன்.

லுங்கியைப் போன்ற இடுப்பைச் சுற்றிய 'ஸுலு' உடையிலும் 'பூலா புஷ் ஷர்ட்' டிலும் தலைவரும் அவருடன் என்னை வரவேற்க நின்றிருந்த மற்ற ஃபீஜியர்களும் இருந்தார்கள்.

"நானும் என் ஜனங்களும் உங்களை வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்" என்று தலைவர் நல்ல உச்சரிப்புடன் கூடிய சுத்தமான ஆங்கிலத்தில் என்னிடம் சொன்னார்.

"எங்கள் கிராமங்களைக் 'கோரோ' என்று சொல்லுவோம். வீடுகளை 'புரே' என்று



* "பூலா!" (நல்வரவு).

அழைப்போம். இப்பொழுது கிட்டத்தட்ட எல்லாக் கிராமங்களும் இந்தக் கிராமத்தைப் போல நவீனப்படுத்தப்பட்டவை. குடிசைகள் எல்லாம் மின்சார வசதியோடு கூடியவை" என்றார் தலைவர்.

அறுபது வீடுகள் கொண்ட அந்தக் கிராமத்தில் எல்லாக் குடும்பங்களும் ஒற்றுமையாகச் சுமுகமாகத் தன் சொல்லுக்குப் பணிந்து இருப்பதாக அவர் திருப்தியாகச் சொன்னார்.

அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் என்னை ஒரு கூடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். தரை முழுவதும் ஓலைப்பாய் விரிக்கப்பட்டிருந்தது. தாழையிலையைக் கொதிக்க வைத்துக் காய்ந்ததும் பாயாக ஃபீஜிப் பெண்கள் வீட்டில் பின்னுவார்களாம்.

என்னைப் பிரதானமாய் ஓர் இடத்தில் உட்கார வைத்து நாற்புறமும் வரிசையாக அவர்கள் தரையில் உட்கார்ந்தார்கள். எனக்காகத் தனியாக ஒரு ஸோபா வைத்திருந்தார்கள். நான் அதில் உட்கார மறுத்துத் தரையில் அமர்ந்தேன்.

ஃபீஜி பாஷையில் ஒருத்தர் நீளமாக எனக்கு வரவேற்புரை நிகழ்த்தினார். எல்லாரும் கையைத் தட்டினார்கள். அதன் மொழி பெயர்ப்பை ஆங்கிலத்தில் சொன்னதும் நான் அவர்கள் பாஷையில், "வினக்கா, வினக்கா வக்கலேவு!" என்றேன். (நன்றி மிக்க நன்றி — நாயுடுவை முன்பே கேட்டு நெட்டுரு போட்டிருந்தேன்!) அவர்கள் மிக சந்தோஷத்துடன் கையைத் தட்டினார்கள்.

பிறகு இருவர் என் எதிரில் ஒரு குழிவான பாத்திரத்தைத் தங்கள் முன்பு வைத்து சப்பணம் போட்டு அமர்ந்தார்கள். அதற்குத் 'தான்வா' என்று பெயர். அதில் நீர் விட்டு, காய்ந்த வேர்களைச் சேர்த்துக் கட்டியது போலிருந்த ஒன்றை அதில் தேய்த்தார்கள். சுற்றிலும் சர்வ நிசப்தம். நீர் மண் நிறமாக மாறியதும் அதை ஒரு மரக் கிண்ணத்தில் ஊற்றி மிக பவ்யத்துடன் இரண்டு கைகளாலும் ஏந்திக் கொடுத்தார்கள். அதை இரண்டு கைகளாலும் வாங்கி

* ஒரு புரே (வீடு).



ஒரே மடக்கில் குடிக்க வேண்டும் என்று நாயுடு மெல்லிய குரலில் சொன்னார். கொஞ்சம் கடுப்பாக இருந்த அதைக் குடிப்பது சிரமமாக இருந்தாலும், நான் குடித்து வைத்தேன். ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்த ஃபிஜியர்கள் சந்தோஷத்துடன் கையைத் தட்டி ''விஞக்கா!'' என்று கோஷமிட்டார்கள்.

அந்தப் பானத்திற்குக் 'காவா' என்றும் வேருக்கு 'யங்கோனு' என்றும் பெயராம். இப்படிக் கொடுப்பதை 'யங்கோனு சடங்கு' என்கிறார்கள். மிக முக்கியமானவர்களாக அவர்கள் கருதும் விருந்தாளிகளுக்குமட்டுமே தலைவர் முன்னிலையில் இப்படி ஒரு சடங்கைச் செய்வார்களாம். அவர்களது சமூக அமைப்பில் யங்கோனு மிக முக்கிய அங்கம் வகிப்பதாகச் சொன்னார்கள். எப்படிப்பட்ட கொலைப் பகையாக இருந்தாலும் எதிராளிகளை உட்கார்த்தி வைத்து யங்கோனு காவாவைப் பரிமாறிவிட்டால் தகராறு தீர்ந்துவிடுமாம்! இவர்களுடைய வழக்குகள் எல்லாம் கோர்ட் வரை போகவே போகாதாம். யங்கோனுவை நிறையக் குடித்தால் போதை ஏறும் என்றார்கள்.

சங்கத்தின் பள்ளிகளில் கூட மாணவர்கள் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் மீறின ஒரு சின்ன சந்தர்ப்பம் கூடக் கிடையாது என்று நாயுடு எனக்குச் சொல்லியிருந்தார்.

மொத்தக் கிராமமும் ஒரு கூட்டுக் குடும்பமாக இயங்குவதாகச் சொன்னார்கள். ஒரு வீட்டில் கல்யாணம் நிச்சயமானால் மொத்தக் கிராமமுமே கல்யாண ஏற்பாடுகளிலும் கொண்டாட்டத்திலும் பொருளாலும் உழைப்பாலும் பங்கு கொள்ளுமாம். மரபோடு ஒத்துப் போவதால் ஜனங்களுக்கு லாபமே தவிர, நஷ்டமுமில்லை, கஷ்டமுமில்லை என்றார் ராத்து மிலி.

பெண்களுடன் நான் பேச விரும்பியதால் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி என்னை வரவேற்றுத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். கிறிஸ்துவர்களாக இருந்தாலும், அவர்களது பழைய பழக்க வழக்கங்களும், பண்புகளும் மாறவில்லை என்றார். பெண்களை அடிமைப்படுத்துவதாகவோ, கேவலப்படுத்துவதாகவோ எண்ணம் எழத் தங்கள் சமூகத்தில் வாய்ப்பே இல்லை என்று திட்டவட்டமாகச் சொன்னார். அப்பொழுது அங்கு ஓர் அழகிய இளம் பெண் வந்தாள். சற்றுத்




''இளைய தலைமுறையும் உங்கள் சொல்லை மீறாமல் கட்டுப்பட்டு விசுவாசத்துடன் இருக்கிறதா?'' என்று நான் கேட்டேன்.


''ஆமாம்'' என்றார் தலைவர் ராத்து மிலி. (ராத்து = தலைவர்) ''இதுவரை ஒரு சிக்கலும் ஏற்பட்டதில்லை. மரபுகளை எதிர்க்கும் தைரியம் எங்களிடையே அத்தனை சுலபமாக வந்துவிடாது.''

எனக்கு வியப்பேற்பட்டது. கிராமத்து இளைஞர்கள், யுவதிகள் எல்லாம் நகர்ப்புறத்துப் பள்ளிகளில் படிக்கச் செல்கிறார்கள். உலகம் முழுவதும், சமுதாயக் கட்டுப்பாடுகள் தளர்ந்து வருகின்றன. அதன் வீச்சும் பாதிப்பும் ஃபிஜித் தீவில் இன்னும் ஏற்படவில்லையா?

* [illegible] (வீடு).



* ஒரு கோரோ (கிராமம்).



தொலைவிலேயே மண்டியிட்டு அந்தப் பெண்மணியிடம் எதையோ மிக்க மரியாதையுடன் கொடுத்தாள்.

''இவர்களுடைய வழக்கத்தைப் பார்த்தீர்களா? பெரியவர்களிடம் எதையாவது கொடுக்க வேண்டுமானால் இப்படித்தான் மண்டியிட்டுக் கொடுப்பார்கள். நின்றபடி கொடுக்கமாட்டார்கள். பெரியவர்கள் நின்றிருக்கும்போது இவர்கள் உட்காரமாட்டார்கள்!'' என்றார் நாயுடு.

அந்தப் பெண் என்னிடம் சினேகிதமாக வெட்கச் சிரிப்புடன் அழகாக ஆங்கிலம் பேசினாள். பெயர் இங்கிலி. உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடித்தவள். திருமணம் ஆகி

இரண்டு குழந்தைகள். அவள் கணவன் விளம்பர, பெயர்ப் பலகைகள் வரைபவன். அவள் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பணிப் பெண்ணாக வேலை செய்வதாகச் சொன்னாள். ஒரு மணி நேர வேலைக்கு ரூ 15 கூலி.

''நீ ஹோட்டலில் வேலை செய்வது பற்றி உன் கணவனுக்கு ஏதும் ஆட்சேபம் கிடையாதா?'' என்றேன்.



* என்னுடைய பயங்கள் ஃபீஜி பெண்களைப் பொறுத்தமட்டில் அர்த்தமற்றவையாகத் தோன்றின.

''இல்லையே ஏன்?'' என்றாள். என் கேள்வியே அவளுக்குப் புதிராக இருந்தது போன்ற பாவம் முகத்தில் தெரிந்தது. தொடர்ந்தாள்: ''குழந்தைகளைப் பாட்டி பார்த்துக் கொள்கிறாள். அதனால் ஒரு பிரச்னையுமில்லை'' என்றாள்.

''ஹோட்டலில் நீ வேலை பார்க்கும் இடத்தில் நீ பெண் என்கிற காரணத்தால் ஆண்கள் முறைகேடாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பம் உண்டா?''

''இல்லையே?'' அவள் திரும்பவும் விழித்தாள். 'என் கேள்வி அவளுக்குப் புரியக்கூட இல்லை' என்கிற பிரக்ஞை என்னுள் ஓர் அதிர்வை ஏற்படுத்துகையில் இவர்கள் எதிரில் நான் ஒரு சாணக் குறுகிப் போனாற் போல் பிரமையேற்பட்டது. இவர்கள் இருப்பதே வேறு யுகம்!

ஈவு இரக்கமற்ற, மனித நேயம் மடிந்த உலகத்துப் பயங்களை ஏந்தி, கேள்விகளைக் கேட்டுப் பழகிப் போன என் எண்ண ஓட்டம் இந்தச் சூழலுக்கு அநாகரீகமானதாக எனக்கே தோன்ற கூச்சம் ஏற்பட்டது. இந்தக் கள்ளமில்லாச் சிரிப்பை, என்னுடைய பெண்ணுரிமைப் பிரச்னை விவாதங்கள் வீணாகக் குழப்பிவிடும் என்கிற யோசனையுடன் நான் வாயை மூடிக் கொண்டு எழுந்தேன்.

வெளியில் வந்ததும் ''நமஸ்காரம்'' என்று ஒரு ஃபீஜியர் கைகூப்பி வணங்கினார்.

''என் பெயர் இலியாலா ரவூண்ட்ரா. எங்களுக்குத் தென்னிந்தியர்களை (மதராஸிகள்) கண்டால் ரொம்பப் பிடிக்கும். அவர்கள் நம்பகமானவர்கள். ஏமாற்ற மாட்டார்கள்'' என்றார். ''அவர்கள் பெருமாள் கோவில் கட்டுவதற்காக என் தாத்தா நிலம் கொடுத்தார். அதனால் இன்று நான் அவர்களது வெங்கடேச்வரா கோவிலின் சேர்மன்!''

அவருடைய சிரிப்பும் பேச்சும் வெகு நாட்கள் பழகிய நண்பரைப் போல் இருந்தன.

கிராமத்தின் நடு மையத்தில் ஒரு பாய் பலகை இருந்தது.

''இதை 'லாலி' என்று சொல்வோம்'' என்றார் இலியாலா. ''ஏதாவது முக்கியமான செய்தி கிராமத்து மக்களுக்குச் சொல்ல வேண்டுமானால் இதை அடிப்போம். செய்திக்குத் தகுந்த மாதிரி தாளமும் ஒலியும் மாறும். ஒலியை வைத்தே அது சுபச் செய்தியா, துக்கச் செய்தியா என்று கண்டு பிடித்துவிடலாம்!''

எல்லாருடைய பேச்சும் கச்சிதமாக இருந்தது. பழகிய விதத்தில் மரியாதையும் கம்பீரமும் இழையோடின. தலைவர் மிலி மீண்டும் என் கையைக் குலுக்கி விடை கொடுத்த போது வியப்பு அடங்காமலேயே நான் அங்கிருந்து கிளம்பினேன்.

''ஃபீஜியர்கள் மிக எளிமையானவர்கள். கள்ளம் கபடு இல்லாதவர்கள்'' என்றார் என்.கே. நாயுடு காரில் திரும்பும்போது. ''மூர்க்கத்தனமே கிடையாது. இது ஓர் ஆச்சரியமான விஷயம். ஏனென்றால் இங்கு கிறிஸ்தவப் பாதிரிகள் கால் வைக்கிற வரை இவர்கள் நர மாமிஸம் சாப்பிடுபவர்களாக இருந்தவர்கள்!''

எனக்கும் அது ஆச்சரியமாகவே இருந்தது.

''இந்தியர்களுக்கும் ஃபீஜியர்களுக்குமிடையே அடிப்படையில் எந்த பிரச்னையும் பேதமுமில்லை. ஆனால் இந்த அரசியல்வாதிகள் பேதத்தைக் கிளப்பப் பார்க்கிறார்கள்'' என்றார் நாயுடு. ''இந்தத் தீவுகள் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்தபோது ஆங்கிலேயர்கள் தங்கள் வழக்கப்படி இந்தியர்களையும் ஃபீஜியர்களையும் ஐக்கியமாகவிடாமல் பிரித்தே வைத்திருந்தார்கள். தனித்தனிப் பகுதியில்தான் வாழவேண்டும் என்று சட்டம் செய்தார்கள். இந்தியப் பள்ளிகளில் ஃபீஜி குழந்தைகள் சேரக்கூடாது. அந்த நிலைமை பிறகு மாறிற்று. சங்கம் பள்ளிகள் தான் முதன் முதலில் ஃபீஜிக் குழந்தைகளைச் சேர்த்துக் கொண்டது. இப்பொழுது சட்டப்படி எல்லாக் குழந்தைகளும் எல்லாப் பள்ளிகளிலும் சேரலாம்.''

''இரண்டு இனத்தவரிடையேயும் கலப்புத் திருமணம் நிகழ்வதுண்டா?''

''கிடையாது. அதை ஃபீஜியர்களும் விரும்புவதில்லை; இந்தியர்களும் விரும்புவதில்லை. பரஸ்பர சிநேகிதத்துடன் பழகினாலும் தங்கள் புராதனப் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று மிகத் தீவிரமான கொள்கை இரண்டு இனத்தவருக்குமே உள்ளது.''

பச்சைப் பசேலென்ற வயல்களையும் கரும்புத்தோட்டங்களையும் தாண்டி வெட்ட வெளியில் இருந்த கோவிலைப் போன்ற ஒரு கட்டிடத்துக்கருகில் வண்டி நின்றது.

''இங்கு காலையிலேயே நாம் வந்திருக்க வேண்டும். நடுவில் ஃபீஜியர் கிராமத்துக்குப் போய்விட்டதால் இங்கு வருவதற்குத் தாமதமாகிவிட்டது. லூதிவாய் என்ற இந்தக் கிராமத்து மாதர் சங்கத்தினர் உங்களைப் பார்ப்பதற்காகக் காலையிலிருந்து காத்திருக்கிறார்கள்'' என்றார் நாயுடு.

(தொடரும்)

ஆசைக்கும் உண்டு பாசம்...

ஞானம்பாள் செல்வம்



அன்று வெள்ளிக்கிழமை!

மாலை மணி ஐந்து நாற்பது!

வழக்கம்போல் வெகு சகஜமாய்ச் சுகந்தாவின் வீட்டிற்குள் நுழைந்த எனக்கு, அன்று ஓர் அச்சம் கலந்த நடுக்கம்!

தரையெங்கும் தண்ணீரின் பளபளப்பு.

வீடெங்கும் ஊதுபத்தியின் மணம்!

கண்ணில் படும் சாமிப் படங்களனைத்திற்கும் மலர் மகுடம் சூட்டப்பட்ட, இதமான காட்சி!

"சுகந்தா, மாடியிலேதான் படிச்சிக்கிட்டிருக்கா!"

"சரிங்க!"

எதிர்ப்பட்ட சுகந்தாவின் தாய் சொர்ணத்தைக் கடந்து, நான் மாடிக்குச் சென்றேன்.

மாடிப் படிகளில் என் தலையைக் கண்டவுடன் எழுந்து நின்றாள் சுகந்தா.

பத்தாம் வகுப்புப் படிக்கும் மாணவி அவள்.

நான் அவளுக்குப் புதிதாய் அமர்த்தப்பட்ட டியூஷன் ஆசிரியர்!

"குட் ஈவினிங் சார்!"

"குட் ஈவினிங்! உட்காரும்மா!"

முதல் நாள் கொடுத்த நோட்ஸைத் . தொடரத் துவங்கினேன்.

மௌனமாய் அமர்ந்து, குனிந்த தலை நிமிராமல் எழுதிக் கொண்டிருந்த சுகந்தா, சட்டென்று கீழே சுவர் கடிகாரத்தில் 'டண்... டண்.... டண்....' என்று ஆறுமுறை அடித்து

"நாளைக்கு டியூஷன் எடுக்க வருவீங்களா?"

"ஏன் இப்படிக் கேட்கிறீங்க?"

"இல்லே! சுகந்தாவின் நடவடிக்கைகளைப் பார்த்துப் பயந்துபோய், ஒருவேளை நீங்க வராம இருந்திட்டீங்கன்னு...?"

"ஏங்க! நான் கேட்கறேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க. சுகந்தாவுக்குத் திடீர்னு என்ன ஆச்சு? நேற்றெல்லாம் நல்லாத் தானே இருந்தா?"

ஓய்ந்த கடிகார சப்தத்தின் ஓசையைக் கேட்டவுடன், இயந்திரமாய் எழுந்து நின்றான்!

வீட்டின் பின்புறம், நாய்கள், குரைக்கும் சப்தம்!

சுகந்தாவின் முகம், காரட்டாய்ச் சிவந்து கொண்டிருந்தது!

''சுகந்தா! ஏம்மா நிற்கிறே! உட்காரேன்!

நான் கூறியதை அவள் காதில் வாங்கிக் கொண்டதுபோல் எனக்குத் தோன்றவில்லை.



அவளுடைய பார்வை, ''யார் நீங்க....?'' என்றது!

சட்டென்று திரும்பி மாடிப்படிகளை நோக்கி நடந்தாள்!

அவளுடைய கைவீச்சில் ஓர் ஆண்மைத் தனம்!

''இந்தாம்மா சுகந்தா! எங்கே போறே நீ?''

ஒன்றும் புரியாமல் சுகந்தாவை உரக்க அழைத்துக்கொண்டே, அவளைத்தொடர்ந்து கீழே இறங்கி வந்த எனக்கு, இன்னொரு அதிர்ச்சி!

ஒரு சக்தி வாய்ந்த ஸ்வாமியை எதிர் நோக்கி நிற்கும் பக்தர்களைப் போல், சுகந்தாவின் தாய், தந்தை, அவளுடைய தம்பி அனைவரும் வராந்தாவில் கைகளைக் கட்டியபடி பவ்வியமாய் நின்று கொண்டிருந்தனர்.

அனைவர் முகத்திலும் அச்சம் கலந்த ஒரு சோகம்!

மளமளவென்று கீழே இறங்கி வந்த சுகந்தா, அந்த வராந்தாவின் மத்தியில் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

கால்மேல் கால் போட்டுக் கொண்டாள்.

ஒரு ராஜகுமாரியைப் போல் நிமிர்ந்து அமர்ந்தாள்.

அவளுடைய பார்வையில் ஒரு முப்பத்தி ஐந்து வயது வாலிபன், குடிகொண்டிருந்தான். அவள் குரல் முற்றிலும் மாறி, கணீரென்று ஒலிக்கத் துவங்கியது!

''என்ன! எல்லாரும் சௌக்கியமா இருக்கீங்களா?''

''இருக்கோம்ப்பா!''

''உழவு மாட்டுக்குப் போன வாரம் சுகமில்லாம இருந்திச்சே! இப்போ எப்படி இருக்கு?''

''நல்லாயிருக்குப்பா!''

''நடவெல்லாம் முடிஞ்சிருச்சா?''

''இன்னும் இல்லே!''

''ஏன்?''

''ஆள் தட்டுப்பாடு! அடுத்த வாரத்திலே முடிச்சிடுவோம்!''

''காசு பணத்தைப் பார்க்காம, ஆளுங்களை அழைச்சுக் கிட்டு வந்து, மளமளன்னு வேலையைப் பாருங்கப்பா!''

''சரிப்பா!''

''எங்கே என் மனைவியைக் காணோம்?''

''உடம்பு சரியில்லேன்னு டாக்டர்கிட்டே

போயிருக்கா! இப்போ வந்துடுவா!''

''அவளுக்கென்ன?''

''சாதாரண ஜுரம்தான்.''

''வந்தவொடனே நான் அவளை விசாரிச் சேன்னு சொல்லுங்க! நான் இல்லேங்கறதி னலே, அவளை அலட்சியப்படுத்தாதீங்க! என்ன...; நான் வரட்டுமா? எனக்கு நேர மாகுது.''

வீட்டின் பின்புறத்தில் நாய்கள் தொடர்ந்து உச்சத்தில் குரைக்கும் சப்தம்!

சுகந்தா வியர்த்துக் கொட்டி, நொடியில் அவள், சகஜ நிலைக்குத் திரும்பிக் கொண் டிருந்தாள்.

''நான் எப்படி இங்கே வந்தேன்? சார் மேலே இருக்காரா?''

''இல்லேம்மா! நான் இங்கேதான் இருக் கேன். பாடம் நாளைக்கு எடுத்துக்கலாம்! நீ கொஞ்சம் ஓய்வு எடுத்துக்க! நான் வர்றேன்.''

நான் மரத்துப் போய் வெளியே வந்தேன்.

''திடீரென்று இந்தச் சுகந்தாவிற்கு என்ன ஆயிற்று?''

''இவளைக் கண்டு ஏன் இப்படி, எல் லோரும் பயந்து நடுங்குகிறார்கள்?''

''இவளுக்குள்ளிருந்து பேசும் அந்த ஆண் யார்?''

— குழம்பியபடி நடந்து கொண்டிருந் தேன்!

''தம்பி!''

திடுக்கிட்டுத் திரும்பினேன்!

சுகந்தாவின் தாய் சொர்ணம்! வேக வேக மாய் என்னைப் பின் தொடர்ந்து வந்து கொண் டிருந்தாள்.

''என்னங்க?''

''நாளைக்கு டியூஷன் எடுக்க வருவீங்களா?''

''ஏன்? இப்படிக் கேட்குறீங்க?''

''இல்லே! சுகந்தாவின் நடவடிக்கை களைப் பார்த்துப் பயந்து போய், ஒருவேளை நீங்க வராம இருந்திடுவீங்களோ....?''

''ஏங்க! நான் கேட்கிறேன்னு தப்பா நினைச்சிக்காதீங்க. சுகந்தாவுக்குத் திடீர்னு என்ன ஆச்சு? நேற்றெல்லாம் நல்லாத் தானே இருந்தா?''

''எல்லா நாளும் நல்லாத்தான் தம்பி இருப்பா! ஆனா இந்த வெள்ளிக்கிழமை வந் தாத்தான் இப்படி ஆயிடுவா!''

''ஏங்க?''

''தம்பி! என்னோட மூத்த மகன் பாஸ்கர். ஆறு மாசத்துக்கு முன்னாலே, எதிர்பாராத விதமா, ஒரு கார் விபத்துல இறந்து போயிட் டான். அவனுக்குச் சுகந்தான்னா உயிரு. பெரிய பொண்ணுன்னு கூடப் பார்க்காம, அவளுக்குச் சாதத்தை ஊட்டியே விடுவான். எங்கே போனாலும் கையைக் கோர்த்துக் கிட்டே அலைவான். அந்த அளவுக்குப் பாசமா இருந்தவன், இறந்து போன முதல் மாசத்திலேயே சுகந்தா மேலே வர ஆரம் பிச்சுட்டான்.''

''ஆரம்பத்தில் அவன் வந்து போனது, எங்களுக்கு ஆறுதலாத்தான் இருந்தது. ஆனால் நாள் ஆக ஆக அவனுடைய வரு கையே சுகந்தாவின், எதிர்காலத்திற்கு ஒரு முட்டுக்கட்டையா ஆயிடுமோங்கிற பயம் எங்களைப் பிடிச்சு, உலுக்க ஆரம்பிச் சிடுச்சு!''

''நீங்க என்னம்மா சொல்றீங்க?''

''இப்படி ஒரு நிமிஷம் உட்காருங்க தம்பி!''

நானும் அருகிலிருந்த காலி வீட்டுத் திண் ணையில் அமர்ந்தேன்.

''தம்பி!''

''சொல்லுங்கம்மா!''

''சுகந்தாவுக்குப் படிப்பு வரமாட்டேங் குது! அவளுக்குச் சீக்கிரமா ஒரு கல்யாணத் தைப் பண்ணிப்பிடலாம்னு நினைக்கிறோம்! ஆனால் எங்க ஜாதியில் யாரும் சுகந்தாவைத் திருமணம் செய்துக்கப் பயப்படுறாங்க! இவ ளுக்குப் பேய் பிடிச்சிருக்கு! பிசாசு பிடிச் சிருக்குன்னு சொல்லி, சுகந்தாவை எல் லோரும் வெறுத்து ஒதுக்க ஆரம்பிச்சிட் டாங்க! இவளுக்கு ஒரு நல்ல காரியம் நடக் கும்கிற நம்பிக்கை, எங்களுக்கு நாள் ஆக ஆக, குறைஞ்சிகிட்டே வருது.....''

விழிகளில் நீர் கோக்க, சட்டென்று முகம் கவிழ்ந்த சுகந்தாவின் தாயை ஒரு கணம் நான், பரிதாபமாய் ஏறிட்டேன்!

இந்த விஷயத்தை வெள்ளிக்கிழமை வர்ற உங்க பையன்கிட்டேயே சொல்லிப் பாருங் களேன்!''

''அவன்கிட்டே இதைச் சொல்லப் போய், மேலும் சுகந்தாவுக்கு ஏதாவது ஆபத்து வந் திடுமோன்னுதான் தம்பி, எங்களுக்கு ரொம்ப பயமா இருக்கு!''

''கண்டிப்பா, அது மாதிரியெல்லாம் ஒண் ணும் வராதுங்க! அடுத்த வாரம் நீங்க தைரிய மாச் சொல்லிப் பாருங்க! ஏன்னா அந்தப் பையன், தங்கச்சி மேல் உயிரையே வச் சிருந்தான்னு சொல்றீங்க! அப்படிப்பட்ட தங்கச்சியோட எதிர்காலத்துக்கு, தான் ஒரு முட்டுக்கட்டையா, இருக்க, எந்த ஒரு பாச முள்ள அண்ணனும் விரும்ப மாட்டான். அதனால நீங்க தைரியமாக அடுத்த வாரம்

''பழைய கருப்பு வெளுப்பு டீ.வி.க்கு மதிப்பு ரூ 2000 தள்ளுபடி செய்து கொண்டு, ரூ 8000 மதிப்புள்ள புதிய கலர் டீ.வி.க்கு நான் ரூ 6000 தானே தரணும். நீ, ரூ 9000 கேட்கிறயே! என்ன கணக்கு?''

''உன்னோட பழைய செட்டுக்கான ரிப்பேர் சார்ஜ் ரூ 3000— எவன் அழுவ தாம்?''



நாலாவதாக ஞானியைச் சொன்னார். ஞானியும் தன்னை பஜிப்பதாக (பஜந்தேமாம் என்று) சொல்கிறார். ஞானி அடைய வேண்டியது எதுவுமே இல்லை. ஆகவே 'அதைத் தா, இதைத் தா' என்று ப்ரார்த்திக்க வேண்டிய அவச்யம் அவனுக்கு இல்லை. ஒரு ப்ரார்த்தனையும் காரணமும் இல்லாமல், தன்னால் அன்பாகத் தான் இருக்க முடிகிறது என்பதாலேயே பரமாத்மாவிடம் அன்பாயிருக்கிறானே, இதுதான் பரம பரிசுத்தமான பக்தி. 'அஹைதுகீ பக்தி' (ஹேது அல்லது காரணம் இல்லாத பக்தி) என்று இதை ப்ரஹ்ம ஞானியான சுகாசார்யாள் பாகவதத்தில் சொல்கிறார். இவனை ஒருத்தர் கத்தியால் வெட்டினால்கூட அதிலிருந்து காப்பாற்றும்படி இவன் ப்ரார்த்தனை பண்ண மாட்டான். ஏனென்றால் தான் சரீரமில்லை, ஆத்மாதான் என்ற உள் அனுபவம் இவனை விட்டு எப்போதும் விலகியிருக்காது. அந்த நிலையிலும் ப்ரார்த்தனை பண்ணாமலே பகவானிடம் பக்தியாக அன்பு மயமாக இருப்பான்.

'இப்பேர்ப்பட்ட பக்தி எங்கே? கஷ்டம் தீருவதற்காக பகவானை ப்ரார்த்திக்கிற ஆர்த்தனின் பக்தி எங்கே? அதைவிட மட்டமாக, போதுமென்கிற அளவுக்கு ஸௌகர்யம் இருந்தும் இன்னும் வேண்டும் என்று கேட்கிற அர்த்தார்த்தியின் பக்திக்கு 'பக்தி' என்று பேர் கொடுப்பதே தப்பு மாதிரி இருக்கிறதே' என்று தோன்றலாம்.

ஆனால் ஸாக்ஷாத் பகவான் ஞானத்தை வேண்டுகிற ஜிஜ்ஞாஸுவையும், ஞானத்தை அடைந்தேவிட்ட ஞானியையும் சொன்னாற் போலவே இந்த ஆர்த்தன் அர்த்தார்த்தி இரண்டு பேரும்கூடத் தன்னை பஜிப்பதாகத்தான் சொல்கிறார். அது மட்டுமில்லை. இந்த நாலு தினுஸானவரையும் 'ஸுக்ருதின: ஜனா:' அதாவது ஸுக்ருதம் பண்ணினவர்கள் புண்யம் பண்ணினவர்கள் என்று ச்லாகித்துச் சொல்கிறார். இரண்டு ச்லோகங்களுக்குப் பிறகு மறுபடியும் இந்த நாலு வகையான பக்தர்களும் ச்ரேஷ்டமானவர்களே (உதாரமானவர்களே) உதாரா: ஸர்வ ஏவைதே என்கிறார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அருள்வாக்கு



அவர் வரும்போது சொல்லிப்பாருங்க!

''சரி தம்பி! உங்க தைரியத்திலேதான், நாங்க, இதை அவன்கிட்டே சொல்லணும்.''

அந்த வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் எப்படியாவது பாஸ்கரிடம், விஷயத்தைக் கூறி, அவர் வருகையை அடியோடு நிறுத்தச் சொல்ல வேண்டும் என்ற துடிப்போடு, அடுத்த வெள்ளிக்கிழமையை எதிர்நோக்கிக் கொண்டு ஆவலுடன் காத்திருந்தனர்.

நானும்தான்!

அன்று —

மாலை மணி ஐந்து ஐம்பது!

ஓர் ஆங்கிலச் செய்யுளை மனப்பாடம் செய்து கொண்டிருந்தாள் சுகந்தா!

நான் அவளுக்கு முன்னால் அமர்ந்து கடிகாரத்தையும் அவள் முகக் குறிப்பையும் மாறி, மாறி அளந்து கொண்டிருந்தேன்.

வழக்கம்போல் அந்த வீட்டின் பின்புறத்தில் நாய்களின் இரைச்சல்.

இயந்திரமாய், சுகந்தா சட்டென்று எழுந்து நின்றாள்.

என் உடல் சிலிர்த்தது!

நாற்காலியைப் பின்னுக்கு உந்தினாள்.

படிகளை நோக்கி மின்னலாய் நகர்ந்தாள்.

அதே அண்ணனின் கைவீச்சு!

ஒரு பிரதமரின் உதவியாளனைப் போல் அவளைத் தொடர்ந்து, நானும் வேகமாய்க் கீழே இறங்கினேன்.

அதற்குள் சுகந்தா நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு, விசாரணையைத் துவக்கியிருந்தாள்.

அதே கம்பீரமான குரல்!

கடல் அலைகளாய்த் தொடர்ந்து பல கேள்விகள்!

இறுதியாய்......!

''நேரமாயிடுச்சு! நான் வரட்டுமா?''

''தம்பி!''

''என்னம்மா?''

சுகந்தாவின் தாய், சொர்ணம்தான் சற்று முன்னால் சென்று, முந்தியைப் பந்தாக்கி வாயை மறைத்தபடி, கண்ணீர் விட்டாள்.

''ஏம்மா அழுவுறீங்க? நான் உங்க மூத்த பிள்ளைதான். தைரியமாச் சொல்லுங்க என்ன விஷயம்?''

சுற்றி நின்றவர்கள் விழிகள், சுகந்தாவையே குத்திட்டு நிற்க, அவள் அருகில் நின்று கொண்டிருந்த எனக்கு, மிடறு, தொண்டைக்குள் நுரையடித்தது!

சொர்ணம் தயங்கித் தயங்கி, விஷயத்தைக் கூறத் துவங்கினாள்.

''தம்பி! சுகந்தாவுக்குப் படிப்பு வரமாட்டேங்குது! சீக்கிரமா ஒரு கல்யாணத்தைப் பண்ணிப்பிடலாம்னு நினைக்கிறோம். ஆனா யாருமே, நம்ப சுகந்தாவைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கறாங்க!''

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

வி.ஐ.பி.

கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச் க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



**தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.**

''ஏம்மா?''

''நீ வாரம் ஒரு தடவை அவளுக்குள்ளே வந்துட்டுப் போறது, அவளுக்குப் பேய் பிடிச்சிருக்குன்னு ஊர் பூரா பரவிக்கிட்டிருக்கு! நம்ப பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க, எல்லோரும் தயங்குறாங்க, பயப்படுறாங்க! அதனால் நீ இனிமேல்.......''

சொர்ணம் கூறியதைக் கேட்டுக் கொண்டே வந்த சுகந்தாவுக்குச் சட்டென்று விழிகளில் நீர் கோத்துக் குளமாக, புருவங்களை உயர்த்திக் குவித்தாள்.

''ம்! சொல்லுங்கம்மா! இனிமேல், என்னை இங்கே உங்களைப் பார்க்க, வர வேண்டாம்கறீங்க அப்படித்தானே! சரி! என்னால் என் தங்கையோட வாழ்க்கை வீணாக வேண்டாம்; என் தங்கச்சிக்கு, நல்ல ஒரு சந்தோஷமான வாழ்க்கை அமைஞ்சா, அதுவே எனக்குப் போதும்! இனிமேல் நான் இங்கே வரமாட்டேன். கண்டிப்பா இனிமே நான் இந்தப் பக்கம் வரமாட்டேம்மா! தைரியமா இருங்க!''

மளமளவென்று பேசிக் கொண்டே வந்த சுகந்தா, சட்டென்று பேச்சை நிறுத்தி, குமுறிக் குமுறி அழத் துவங்கினாள்.

சுற்றி நின்றவர்கள், தொலைவில் நின்றே கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தனர்.

மீண்டும் வீட்டின் பின்புறம் நாய்களின் பேரிரைச்சல்!

பாஸ்கர் கிளம்பிவிட்டார்.

சுகந்தாவிற்கு வியர்க்கத் துவங்கியது.

மிரள மிரள விழித்தபடி, நெஞ்சை நிமிர்த்தினாள்.

''ஏன்? எல்லோரும் என்னையே பார்த்து அழுதுகிட்டிருக்கீங்க?''

''ஒன்றுமில்லேம்மா! சும்மாதான்!''

அனைவரும் சட்டென்று விழிகளைத் துடைத்துக் கொண்டு கலைய, நானும் வெளியே வந்தேன்.

பாதங்கள், அனிச்சையாய் என் வீட்டை நோக்கி நடந்தாலும், அந்த ஆவியின் குமுறலும், பாசமும், என் உள்ளத்தை இறுக்கமாய்ப் பிழிய, என் உடல் ஜில்லிட்டுக் கொண்டே வந்தது.


அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, நானும் தொடர்ந்து, சுகந்தாவிற்கு இரண்டு மாதங்கள்வரை பாடம் நடத்திக் கொண்டிருந்தேன்.

''இனிமேல் கண்டிப்பாய் நான் வரவே மாட்டேன்'' என்று குமுறிவிட்டுச் சென்ற அந்த பாஸ்கர், அதன் பிறகு சுகந்தாவின் வீட்டுப் பக்கம் திரும்பவேயில்லை.

பாசம் மனிதர்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு, அந்த பாஸ்கர், ஆவிக்கும் உண்டு பாசம் என்பதை நிரூபித்த விதம் எனக்குள் இன்னும் வியப்பை மேலோங்கச் செய்து கொண்டிருந்தது.

இப்போது அந்தச் சுகந்தா, கணவனோடு சந்தோஷமாய்க் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறாள்.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகியும் இருக்கிறாள்!



உலக அமைதியும்; வீட்டிலே அமைதியும்!

போட்டி: 44

உலக அமைதி ஆண்டு கொண்டாடப்படுவது சரி. உலக அமைதி இருந்து விட்டால் போதுமா? வீட்டிலே அமைதி வேண்டாமா? உங்கள் இல்லத்தில் அமைதி காக்க என்ன தந்திரோபாயங்களைக் கையாள்கிறீர்கள்? சிரிப்பாகவோ சீரியஸாகவோ அதை எழுதுங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர ஒருவருக்கு வி. ஐ. பி. ஸூட்கேஸ் — குலுக்கல் முறையில். இதே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தை முழுமையாகக் கத்திரித்து அனுப்பும்போது, ப்ளீஸ், ''வீட்டில் அமைதி ஆண்டு'' என்று உறை மீது குறிப்பிடுங்கள்.

முடிவு தேதி: 17.3.86


இன்னும் 9 ஸூட்கேஸ்களே பாக்கி. இருக்கிற ஒன்பது வாய்ப்புக்களை நழுவ விடாமல் வாரம் தோறும் போட்டிகளில் பங்கு பெறவும்.

என் பெயர்: ....

விலாசம்: ....

....

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்





❝ உங்களுக்கும் அனிதா போன்ற ஒரு மகள் இருந்தால்
என் கஷ்டம் புரியும்! எதற்கெடுத்தாலும்
அழுகை, ஆர்ப்பாட்டம், முரட்டுப் பிடிவாதம்!
சாப்பிடுவதிலும் அப்படியே. கறிகாய் பிடிக்காது. சப்பாத்தியைக்
கொறித்துவிட்டு மீதியைத் தன் செல்ல நாய்க்குட்டிக்குப் போடுவாள்.
கடிந்துகொண்டால் மூக்கின்மேல் கோபம் வரும்—
சாப்பிடாமலேயே எழுந்து போய்விடுவாள்.

இப்படி ஆட்டிப்படைக்கும் அனிதாவைப்பற்றி என் கணவரிடம்
புகார் செய்தால் "அனிதா உன்னையே பிடிவாதத்தில்
கொண்டுவந்திருக்கிறாள்!" என்று சொல்லிச் சிரிக்கிறார்!

அதுவும் உண்மைதான்!

எனக்கும் நான் இஷ்டப்பட்டதுதான் கிடைக்கவேண்டும்.
துணிமணிகள் வாங்குவதானாலும் சரி, அனிதா அடம் பிடித்துக்
கேட்கும் பொருட்களானாலும் சரி,
எனக்குத் திருப்தியானதையே வாங்குவேன்.

நான் பாத்திரங்கள் வாங்கும்போது அவை சேலம் எவர்சில்வரில்
செய்ததுதானா என்று குறிப்பாகக் கேட்டு வாங்குவேன்.
சேலம் எவர்சில்வரில் செய்த பாத்திரங்களில் கரும்புள்ளிகளோ,
கறையோ பிடிக்காது. வருடக்கணக்கில் உழைத்தாலும் பளபளப்பு
போவதில்லை. வாழ்நாளுக்கும் உழைக்கக் கூடியவை.

பாத்திரப் பிரச்சினையை சுலபமாக சமாளிக்கலாம்
—ஆனால் அனிதாவை? ❞

சேலம் எவர்சில்வரினால்
தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள்
எல்லா பிரபலமான
பாத்திரக்கடைகளிலும் கிடைக்கும்.

சேலம் எவர்சில்வர்.
நம்பிக்கைக்குப் பாத்திரமான பாத்திரங்கள்.

ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட்
ஒரு இந்திய அரசு நிறுவனம்
சேலம் உருக்காலை
சேலம் 636 013 தமிழ் நாடு

Sista's - SSP.365.85 TM G

M ஃபார் மர்டர்

A ஃபார் ஆப்பிள்

சந்திரபோஸ் வேனைத் திருப்பிக் கொண்டு, மிதமான வேகத்தில் பிரிட்டு ஒரு பூனையின் லாகவத்தோடு டாக்ஸிக்குப் பின்னால் வந்து நிறுத்தினான்.

கீதா கிசுகிசுப்பாய்ச் சொன்னாள்.

''சந்திரபோஸ் வேனோட ஹெட்லைட்டுகளை அணைங்க..... இஞ்சின் இயக்கத்திலேயே இருக்கட்டும்.... ரெண்டே நிமிஷத்திலே பாடியை டாக்ஸியோட டிக்கிக்கு மாத்திட்டு நாம கிளம்பிடணும்.''

சந்திரபோஸ் வேனின் ஹெட்லைட்டுகளை அணைத்துச் சுற்றுப்புறத்தை இருட்டுக்குக் கொண்டு வந்தான். மண் ரோட்டில் தெரிந்த சாராயக் கடை சோகையான ட்யூப் லைட் வெளிச்சத்தில் தெரிய, குழப்பமான பேச்சொலிகள் காற்றில் தேய்ந்து வந்தன. மழை பிசுபிசுப்பாய் எரிச்சல் தனமாய் ஊற்றிக் கொண்டிருந்தது.

சந்திரபோஸும், கீதாவும் இறங்கினார்கள். சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்த்துக் கொண்டார்கள். ஹைவேஸ் ரோட்டின் நெடுக, இருட்டும் மழையும், சண்டைக்குப் பின் ராசியான கணவன் மனைவி மாதிரி இழைந்து தெரிந்தது.

''சந்திரபோஸ் க்விக்....''

கீதா வேனின், பின்பக்க கதவினைத் திறந்துவிட, சந்திரபோஸ் உள்ளே ஏறி, பால் டின் கேஸ்களுக்கு மத்தியில் இருந்த சாக்கு மூட்டையைக் கீழே உருட்டினான்.

யாமினி தொம்மென்று உருண்டாள்.

இருவரும் சாக்கு மூட்டையை, மூச்சுப் பிடித்துத் தூக்கிக் கொண்டார்கள். சுற்றுமுற்றும் பார்த்து விறுவிறுவென்று நடந்து போய், டாக்ஸியின் டிக்கியைத் திறந்து உள்ளே தள்ளினார்கள்.

யாமினி முரண்டு பிடிக்காமல் உள்ளே போனாள்.

சந்திரபோஸ் சத்தமில்லாமல் டிக்கியைச் சாத்தினான். அந்த மழையிலும் நெற்றியில் வழிந்த வியர்வையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு, இருட்டில் கீதாவைப் பார்த்துப் பற்கள் ஒரு வெள்ளைக் கோடாய்த் தெரியச் சிரித்தான்.

''பர்பெக்ட்'' என்றாள் கீதா.

''வேனுக்குத் திரும்பலாமா?''

''ம்.''

வேகமாக ஓடிப் போய் வேனுக்குள் தாவினார்கள். கீதா 'அம்மாடி' என்று பெருமூச்சொன்றைவிட சந்திரபோஸ் வேனை நகர்த்தினான்.

''இப்படியே பாக்டரிக்குத் திரும்பிப் போயிடலாமா சந்திரபோஸ்?''

''வேலை இன்னும் முடியலை கீதா.''

''இன்னும் முடியலையா?''

''ஆமா.... அந்த டாக்ஸி டிரைவர் இந்தக் கொலையிலே வசமா மாட்டணும்னு நாம செய்ய வேண்டிய வேலை இன்னொண்ணும் இருக்கு.''

''என்ன?''

''சொல்றேன்'' என்றவன் வேனை ஒரு நூறடி தூரம் நகர்த்திக் கொண்டு போய் ஒரு மரத்துக்குக் கீழே நிறுத்தினான். விளக்குகளை அணைத்துக் காத்திருக்க ஆரம்பித்தான்.

''என்ன பண்ணப் போறீங்க சந்திரபோஸ்?''

''அந்த டாக்ஸியை ஃபாலோ பண்ணப் போறோம்.''

''பண்ணி?''

''சொல்றேன்! மொதல்லே ஆள் சாராயக் கடையிலிருந்து வர்றானான்னு கவனி.''

கவனிக்க ஆரம்பித்தாள். ரோட்டின் ஓரமாய், டாக்ஸி தன் பின்புறத்தில் ஒரு பிணத்தை அதக்கிக் கொண்டு நின்றிருக்க, மழை தீவிரமாய் பெய்து சூழ்நிலையின் பயங்கரத்தை அதிகரித்தது.

இருவருடைய பார்வையும் சாராயக் கடை ரோட்டின் மேலேயே விழுந்திருந்தது. நிமிஷங்கள் விநாடிகளைத் தின்று கொண்டு வளர்ந்தன.

ராஜேஷ்குமார்

நூறு மில்லி உள்ளே போனதும் தரையில் கால்பாவாமல் தத்தளித்தான் கன்னியப்பன். மேலும் ஒரு நூறு உள்ளே போனதும் உடம்பு ஒரு பஞ்சுத் துணுக்கு மாதிரி சுலபமாய்க் காற்றில் மிதந்தது.

''என்ன கன்னியப்பா.... போதுமா?'' அந்தப் பத்து நிமிஷ நேரத்துக்குள் பழக்கமாகிப் போன குடிகாரச் சகோதரனொருவன் கரிசனமாய்க் கேட்டான்.

''போழும்'' என்றான் கன்னியப்பன்.

''இருநூறு மில்லியையே உன்னோட உடம்பு தாங்கிக்க முடியலேயே. உடம்பை ஒரு நல்ல டாக்டர்கிட்டே காட்டி என்ன கோளாறுன்னு பாரு, கன்னியப்பா....''

''ம்.... ம்....''

''ரெண்டுகருவாட்டுத்துண்டைஇலேயிலே கட்டித் தர்றேன். போற வழியிலே கடிச்சுக் கிட்டே போ. இந்த மழைக்கு மஜாவா இருக்கும்.''

கன்னியப்பன் எழுந்தான். ''அதெழ்ழாம் வேழ்ண்டாம்....! நான செழ்ன்ட்ரலுக்கு போயி ஏதாவது சவாழி கிழைக்குதான்னு பாழ்த்துட்டு வூட்டுக்குப் போய்ச் சாப்ட்டுக்கறேன்''

''பார்த்துப்போ, கன்னியப்பா....மண்ணு ரோடு பூராவும் சொத சொதன்னு சேறு. விழுந்துடப் போறே.....''

கன்னியப்பன் மெதுவாய் நடந்தான். வயிற்றுக்குள் போயிருந்த சாராயம் ரத்த நாளங்களிலும் நரம்புகளிலும் உற்சாகமாய் உட்கார்ந்திருந்தது. பெய்து கொண்டிருந்த மழையில் நனைந்து கொண்டே, ஹைவேஸ் ரோட்டுக்குப் போய் டாக்ஸியைத் தொட்டான். மழை கொஞ்சம் போதையைக் குறைத்திருக்க, நிதானத்துக்கு வந்து டாக்ஸியில் ஏறி உட்கார்ந்தான்.

இக்னிஷியனை உசுப்பி டாக்ஸியைக் கிளப்பினான்.

ஊர்ந்தான்.

'சென்ட்ரலுக்குப் போய் நம்ம வூட்டுப் பக்கமா வர்ற ஏதாச்சும் ஒரு சவாரியை ஏத்துகிட்டு கிளம்பிடுவோம்' யோசித்துக் கொண்டே டாக்ஸியைக் கையாண்டான்.

டிக்கிக்குள் இருந்த யாமினியின் பிணம், டாக்ஸியின் அசைவுகளுக்கு ஏற்ற மாதிரி ஆடிக் கொண்டே பயணப்பட்டது.

டாக்ஸி வேனைத் தாண்டியது.

கீதா பக்கவாட்டில் திரும்பி சந்திரபோஸைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். ''டிரைவர் நம்ம 'ட்ராப்'ல விழுந்துட்டான். யாமினியோட பிணத்தை அவனுக்குத் தாரை வார்த்துட்டோம். இனிமே நாம என்ன பண்ணப் போறோம் சந்திரபோஸ்....''

''அந்த டாக்ஸிக்குப் பின்னாடியே போகப் போறோம்.''

''போயி....?''

''அந்த டிரைவர் எப்படியும், டாக்ஸியை ஏதாவது ஒரு ஸ்டாண்டுல கொண்டு போய் நிறுத்துவான். அவன் அப்படி கொண்டு போய் நிறுத்தினதும், நான் யோசிச்சு வெச்சிருக்கிற திட்டத்தைச் செயல்படுத்தணும்.''

''திட்டமா?''

''ஆமா, டிரைவரை வசமா சிக்க வெக்க வேண்டாமா?''

''என்ன பண்ணப் போறே சந்திரபோஸ்?''

''டாக்ஸி, டாக்ஸி ஸ்டாண்ட்டுக்கு போனதும், நான் உன்னை வேனிலிருந்து இறக்கி விடுவேன். நீ நேரா அந்த டாக்ஸி டிரைவர் கிட்டே போகணும்.''

''நானா?''

''ம். நீயேதான். டிரைவர்கிட்டே போய் டாக்ஸி வருமான்னு கேக்கணும்.... அவன் 'எங்கே போகணும்'னு கேட்பான். நீ 'அமிஞ்சிக்கரை போகணும்'னு சொல்லி டாக்ஸியிலே ஏறி உட்காரணும். நீ டாக்ஸியிலே ஏறி உட்காருகிறதை மத்த டாக்ஸி டிரைவர்ஸ் கவனிக்கணும். இந்தத் திட்டத்துலே இதுதான் முக்கியம். டாக்ஸி அமிஞ்சிக்கரையை நோக்கிப் போகும். வழியில ஈகா தியேட்டர் வரும். டாக்ஸியை அங்கே நிப்பாட்டி நீ இறங்கிக்கணும். இறங்கும்போது மறக்காம, இந்த வானிடி பேக்கை டாக்ஸி சீட்டுக்குக் கீழே வெச்சுட்டு இறங்கிடணும்''

கீதா குழப்பமாய்ப் பார்த்தாள்.

''இது யாரோட வானிடி பேக்?''

''யாமினியோடது. இண்டர்வியூவுக்கு இந்த பேக்கைதான் கொண்டுகிட்டு வந்திருந்தா. இந்த பேக்கைதான் நீ டாக்ஸியிலே ஸீட்டுக்குக் கீழே வைக்கணும். டாக்ஸியிலிருந்து கீழே இறங்கி நீ கொஞ்ச தூரம் நடக்கிறதுக்குள்ளே நான் உன்னை வந்து பிக்கப் பண்ணிக்குவேன். அங்கிருந்து நாம எம்.டி. வீட்டுக்குப் போயிடலாம்.''

கீதா லேசாய் வியர்த்தாள்.

''திட்டம் சரிதான்..... பட்....''

''என்ன கீதா.... ஏன் தயங்கறே....?''

''டெட் பாடி இருக்கிற டாக்ஸியிலே போறதும் வெடி குண்டை மடியிலே கட்டிக்கிட்டுப் போறதும், ரெண்டும் ஒண்ணுதான் சந்திரபோஸ். எந்த நிமிஷம் வேணுமின்னாலும் உண்மை வெளியே வரலாம்.''

சந்திரபோஸ் புன்னகை செய்தான். ''டாக்ஸியில் யாமினியோட டெட் பாடி இருக்கிறவிஷயம்உனக்கும்எனக்கும்மட்டும் தான் தெரியும். வேறே யாருக்குத் தெரியும்? அமிஞ்சிக்கரை போறதுக்குள்ளே என்னாயிடும்?''

''நான் டாக்ஸியிலே ஏறி ஈகா தியேட்டர் கிட்டே இறங்கறது ரொம்பவும் முக்கியமா சந்திரபோஸ்?''

''அதிமுக்கியம் கீதா.''

''எப்படி?''

''நாளைக்கு போலீஸ் அந்த டிரைவரை விசாரிக்கிறப்போ, சென்ட்ரல்லேயிருந்து ஒருபெண் அவனோட டாக்ஸியிலே ஏறினதை அவனால மறுக்க முடியாது. மத்த டிரைவர்களும் சாட்சி சொல்வாங்க. போலீஸோட சந்தேகப் பார்வையிலே யாமினிதான் டாக்ஸியிலே ஏறியிருந்ததா ஒரு கணிப்பு தெரியும். குடிபோதையிலிருந்த டிரைவர் யாமினிகிட்டே தகாத முறையிலே நடந்து,



அதன் காரணமா யாமினி இறந்து போக, யாமினியோட பிணத்தை டிக்கியிலே அடைச்சு டிஸ்போஸ் பண்ண டிரைவர் முயற்சி பண்ணியிருந்திருக்கலாம்ங்கிற முடிவுக்கு போலீஸ் வருவாங்க. யாமினி தான் அந்த டாக்ஸியிலே பயணப்பட்டாங் கறதுக்கு ஒரே சாட்சி, இந்த வானிடி பேக் தான்....''

''ஐடியா ப்ரில்லியண்ட்டாதான் இருக்கு. ஆனாலும் அந்த டாக்ஸியிலே போறதை நினைச்சா நெஞ்சு 'தடக் தடக்'ன்னு அடிச் சுக்குது சந்திரபோஸ்.''

''எம்.டி.கிட்டேயிருந்து நாம வாங்கப் போற பணத்தைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு கீதா, அந்தப் பயம் மனத்துக்குள்ளேயே பதுங்கிடும்.''

கீதா வேனின் கண்ணாடி வழியாக முன்னால் போய்க் கொண்டிருந்த அந்த டாக்ஸியையே பார்த்தாள். அதனுடைய பின்புற சிவப்பு விளக்குகள் பாதரசம் தடவிய ரத்தத் துளி கள் மாதிரி இருட்டின் பின்னணியில் ஒளிர்ந் தன.

சென்ட்ரல் ஸ்டேஷன்.

ஜனங்கள் கொத்துக் கொத்தாய்க் கை களில் சூட்கேஸ்களோடு, பெய்கிற மழை யைப் பொருட்படுத்தாமல் நடந்து போனார் கள். ஆட்டோக்களும், டாக்ஸிகளும் வரப் போகிற ஜெயந்தி ஜனதாக்களுக்காகவும், பாஸஞ்சர்ஸ்களுக்காகவும் நீளமாய் ஒரு ஒழுங்கோடு காத்திருந்தன. சென்ட்ரல் ஸ்டேஷன் தலைமேல் ஊதா நிற நியானிலும், பச்சை நிற நியானிலும் ஒரு சிகரெட் கம் பெனி தன்னுடைய சிகரெட்டுகள் உத்தம மானவை என்று சொல்லிக் கொண்டிருக்க, பக்கத்திலிருந்த பெரிய பேனரில் பாலு மகேந்திரா பீடி விளம்பரத்துக்காகக் காமிரா வோடு போஸ் கொடுத்தார்.

கன்னியப்பன் டாக்ஸியை ஓரமாய் நிறுத்தி விட்டு, இறங்கினான். தூறலில் நனைந்து அருகேயிருந்த ஷெல்ட்டர்க்குப் போக, ஷெல் டர்க்குக் கீழே காத்திருந்த சக டிரைவர்களில் ஓரிருவர் வாயில் புகைகிற சிகரெட் புகை யோடு கேட்டார்கள்:

''என்ன கன்னியப்பா...., லாங் ட்ரிப் போயிட்டு வர்றியா?''

''ஆமா. ஒரு கல்யாணக் கிராக்கி மாட் டிச்சு. தாம்பரம் வரைக்கும் போயிட்டு எம்டியா வந்தேன்.''

''என்ன பல்லாவரத்துலே சுழி போட் டியா? வாசம் ஆளைத் தூக்குது.''

''சும்மா ஒரு இருநூறு போட்டேன்.''

''வீட்டுக்குப் போவலையா?''

''இனிமேத்தான் போகணும்.''

''வண்டி நிறைய சேறு அடிச்சிருக்கு. மொதல்லே போய்க் கழுவு.''

''வண்டியையே சர்வீஸுக்கு விட்டு ரிப் பேரும் பார்க்கலாம்னு நினைக்கறேன்.''

''ஏன் என்னாச்சு?''

''வண்டி சத்தம் போடுது. ரேடியேட்டர் சீக்கிரமா ஹீட்டாயிடுது. டிக்கியோட லாக் கரை வேறே சரி பண்ணணும்....''

''பெண்டாட்டிக்கு எப்போ பிரசவம்?''

''இன்னும் மூணு மாசம் இருக்கு.''

''ஆம்பளைப் பையன் பிறந்தா, புகாரிக்குக் கூட்டிகிட்டுப் போய்ப் பிரியாணி வாங்கிக் குடுத்துடணும்.''

''ஜமாய்ச்சுடலாம்'' கன்னியப்பன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, பக்கத் திலிருந்த ஒரு டிரைவர் அவனுடைய தோளைத் தட்டினார்.

''ஏய் கன்னியப்பா, கிராக்கி ஒண்ணு வருது.''

கன்னியப்பன் திரும்பிப் பார்த்தான்.

தோளில் ஊஞ்சலாடிய வானிடி பேக் கோடும், மழை சேறு படிந்துவிடாமல் இருப்பதற்காகச் சேலையைத் தூக்கிப் பிடித்த கையோடும் அவன் டாக்ஸியை நெருங்கிக் கொண்டிருந்தாள் அவள். கன்னியப்பன் அவளருகே போனான்.

''என்னம்மா டாக்ஸி வேணுமா?''

''ஆமா.''

''எங்கே போகணும்?''

''அமிஞ்சிக்கரை.''

''உட்காருங்கம்மா'' மீட்டரைப் போட்டு விட்டு டிரைவர் சீட்டுக்குப் போனான் கன்னி யப்பன்.

ரோட்டின் எதிர்ப் பக்கத்தில் நிறுத்தி யிருந்த வேனின் கண்ணாடிக் கதவு வழியே தெரிந்த சந்திரபோஸைப் பார்த்துக் கொண்டே டாக்ஸிக்குள் பரவினாள் கீதா.

டாக்ஸி நகர்ந்தது.

(தொடரும்)



தவளைக் கால்களை உணவுக்காக பெருமளவு ஏற்றுமதி செய் யப்படுவதன் மீது இந்திய அரசு தடை விதித்துள்ளது. உயிர் களை ஈவு இரக்கமின்றி உணவுக்கென கொல்வதை எதிர்க்கும் நீண்ட நாள் கோரிக்கையின் மீது மட்டுமின்றி தவளைகளை பெரு மளவு அழிப்பதால் மலேரியாவைப் பரப்பும் கொசுக்களின் தொகை அதிகமாவதையும், சுற்றுப்புறச் சூழல் மாசு படுவதை யும் கருத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: லண்டன் பி.பி.சி.; தமிழோசை.

தகவல்: வி. முரளிதரன்.


1986 ஒவ்வோரு மாதமும்
ஒரு புதிய டிசைன்!
1986-ல் ஒவ்வொரு மாதமும் சாரதாஸ்
முகூர்த்தப் பட்டுச் சேலைகளை வெவ்வேறு
புதுவிதமான டிசைன்களிலும், கண்ணைக்
கவரும் வண்ணங்களிலும் தனிச் சிறப்புடன்
உற்பத்தி செய்து விற்பனை செய்ய
உறுதி பூண்டுள்ளது.
மாசி மாத புது டிசைன் முகூர்த்தப்பட்டுச்
சேலைகள் இப்பொழுது விற்பனைக்கு
வந்து விட்டது.
குறிப்பு: — மாற்றம்! திடீர் மாற்றம்!!
விலைகளில் பெரும் மாற்றம்!!!
முகூர்த்தப்பட்டு மற்றும் எல்லா
ஜவுளிகளையும்
மிகக் குறைந்த லாபத்திற்கு விலை நிர்ணயம்
செய்து பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறோம்.
சாரதாஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு.
சென்னை-600 002
போன்: 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன்: 27077
★ தரமான சிறந்த
பட்டுப்புடவைகளை
இவ்வளவு குறைந்த விலையில்
சாரதாஸ் மட்டுமே
அளிக்க முடியும்.







சொன்னால்

எதிர்பாராத பரிசு!

சென்ற ஆண்டு ஏ. வி. எம். நிறுவனம் நடத்தியபுதுமைப்பெண்விளம்பரப்போட்டியில் பங்கேற்றுப் புதுமைப் பெண் மற்றும் நல்லவனுக்கு நல்லவன் படப் பாடல்கள் அடங்கிய காஸெட்டுகளைப் பரிசாகப் பெற்றேன். ஆனால் அவற்றைப் போட்டுக் கேட்க என்னிடம் காஸெட் பிளேயர்தான் இல்லை! இந்நிலையில் ஹார்லிக்ஸ் நிறுவனம் நடத்திய மற்றொரு போட்டியில் பங்கேற்றேன். இப்போட்டியில் எனக்குக் காஸெட் பிளேயர் பரிசாகக் கிடைத்தது! இந்தச் சம்பவத்தைத் தோழிகளிடம் சொன்னால் அவர்கள் எழுப்பும் முதல் கேள்வி: "நிஜமாகவா நடந்தது?" என்பதுதான்.

—ஸ்ரீவை ஸ்ரீதேவி, கடலூர்.

எனக்கே ஆச்சரியம்!

எனக்கே ஆச்சரியமாகஉள்ளது. பின்னால் நடக்கக் கூடிய சில சிறிய நிகழ்ச்சிகள் முன் கூட்டியே எனக்குத் தெரிந்து விடுகின்றன. ஆனால் அவற்றை வெளியே சொல்லத் தோன்றுவதில்லை. உதாரணமாக, என் வீட்டார் ஒருமுறை தெரிந்தவர்கள் சிலரைப் பார்க்கப் போனபோது அந்த நண்பர்கள் ஊரில் இருக்க மாட்டார்கள் என்று எனக்குத் தோன்றியது. அதேபோல் 'அவர்கள் ஊரில் இல்லை' என்று சொல்லிக் கொண்டு அவர்கள் சற்றைக்கெல்லாம் திரும்பி விட்டார்கள். ஒருநாள் நான் போய்க் கொண்டிருந்தபோது பஸ்ஸில் ஒரு பையன் ஏறினான். அவன் இறங்கும்போது கீழே விழுவான் என்று எனக்குத் தோன்றியது. அந்த நினைவைச் சற்றைக்கெல்லாம் மறந்தும் போனேன். ஆனால் அச்சிறுவன் இறங்குகையில் விழுந்தான். என்னாலேயே நம்ப முடியவில்லை!

—வி. கீதா, பெண்ணாடம்.

வீடு அல்ல; கோயில்!

வரதட்சிணைத் தகராறு காரணமாகக் கணவனால் கைவிடப்பட்ட என் தோழி நர்ஸாகப் பணிபுரிந்து வருகிறாள். இன்று அவள் ஒரு முப்பது வயதுக் குழந்தைக்குத் தாய்! ஆமாம், சொன்னால் யாருமே நம்பத்தான் மாட்டார்கள்! அவள் பணிபுரியும் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வந்த ஒருவர் இரண்டு கைகளையும் ஒரு காலையும் இழந்தவர். உறவென்று சொல்லிக் கொள்ள ஒருத்தரும் இல்லாத இம்மனிதரைத் தன் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் அரவணைத்து வருகிறாள் என் தோழி. அவள் வீட்டுக்குச் சென்று பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும் — அது வீடு அல்ல, கோயில் என்று.

—ஜி. ஸ்ரீலதா, வேலூர்—4 (வ. ஆ.)

நம்பமாட்டீர்கள்!





பிரியமுள்ள ரோஸி

திருமணமாகிப் பட்டுக்கோட்டையிலிருந்து மாளியக்காடு என்ற இடத்தில் உள்ள புக்ககத்திற்குச் செல்ல பஸ் ஏறினாள் என் தங்கை. அவள் ஆசையோடு வளர்த்த ரோஸி என்கிற சடை நாயும் அவளுடன் பஸ்ஸில் ஏறிக் கொண்டபோது கண்டக்டர் அதை ஏற்ற ,மறுத்துவிட்டார். பிரிய மனமின்றி ரோஸியை இறக்கிவிட்டுவிட்டுப் போனாள் என் தங்கை. ஆனால் ரோஸியோ, இரைக்க இரைக்க பஸ்ஸின் பின்னாலேயே பத்து கி. மீ. ஓடி, தங்கையின் புக்ககம் வரை சென்றுவிட்டது. இப்போதும் அவள் பிறந்தகம் வரும் நாட்களில் அவளுக்கு முன்னால் ரோஸி வந்து சேர்ந்துவிடும். அதைப் பார்த்துவிட்டு அவள் வரப் போவதை நாங்கள் தெரிந்து கொள்வோம்.

—டி. உஷா ஞானம்.
கடலூர்.

குழந்தை பிழைத்தது!

திருச்சி மாவட்டம் ஜீயபுரம் கிராமத்தில் என் மனைவிக்குத் தலைப் பிரசவம் ஆயிற்று. பிரசவ அறையிலிருந்து வெளியே வந்த டாக்டர் தாயைத்தான் காப்பாற்ற முடிந்தது. குழந்தை இறந்துவிட்டது என்று அறிவித்ததும் எங்களுக்குச் சொல்லொணா வருத்தம். ஐந்து நிமிடங்கள் கழித்து, பிரசவ அறையிலிருந்து குழந்தையின் அழுகுரல் கேட்டதும் ஆச்சரியம் அடைந்தோம். பிரசவத்துக்கு உதவச் சென்ற எங்கள் வீட்டு வேலைக்காரி குழந்தையைத் தலைகீழாகத் தூக்கிப் பிடித்து இரண்டு மூன்று அடி கொடுத்திருக்கிறாள். குழந்தையும் தான் வாழப் போவதை அழுகுரல் மூலம் உணர்த்திவிட்டது அன்று பிறந்த பெண் குழந்தைக்கு இன்று ஒன்றரை வயதில் ஒரு குழந்தை உள்ளது.

— டி. ஆர். நடராஜன், பூனே—1.

மணப்பெண்ணின் தைரியம்

முகூர்த்தம் வந்துவிட்டது. மாப்பிள்ளையோ அதிகம் வரதட்சிணையும் ஒரு ஸ்கூட்டரும் தந்தால்தான் தாலி கட்டுவேன் என்று பிடிவாதத்துடன் அந்தர்த்யானம் ஆகிவிட்டார். பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டாரின் காலில் விழாத குறையாகக் கெஞ்சி, எல்லாவற்றையும் தருவதாகச் சம்மதித்து, மாப்பிள்ளையை வரவழைத்தனர். மேடைக்கு வந்த மாப்பிள்ளையை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு 'நான் இவனைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்' என்று தைரியமாகச் சொல்லிவிட்டாள் மணப்பெண். அதே முகூர்த்தத்தில் அவளைத் திருமணம் செய்து கொள்ள முன் வந்த மற்றொரு வாலிபனுக்கு மனைவியானாள்.

—பி. தமிழ்ச்செல்வி, ஆழ்வார்த்திருநகரி.

மனமிருந்தால் மார்க்கமுண்டு!

நான் ஹிந்தித் தேர்வு எழுதப் போனபோது, இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இல்லாத ஒருவர் கீழே படுத்துக் கொண்டு, பல்லால் பேனாவைப் பிடித்துக் கொண்டு தேர்வு எழுதுவதைப் பார்த்தேன்! இதை எல்லோரிடமும் சொன்னபோது நம்ப மறுத்துவிட்டார்கள்.

— ஆர். சாவித்திரி, கோவை—22.

பாபாவின் கருணை!

1962 இல் பகவான் சத்யஸாயி பாபாவின் பிறந்த நாள் விழாவுக்காகப் புட்டபர்த்தி போயிருந்தோம். மதுரையிலிருந்து வந்த பெண்மணி ஒருத்தி சித்திராவதி நதியில் நீராடுகையில் தன் தாலிச் சங்கிலியைத் தொலைத்துவிட்டு மிகுந்த வருத்தத்துடன் இருந்தாள். அன்று பகவான் பாபா, தொலைந்து போன அவளுடைய தாலிச் சங்கிலியை வரவழைத்துத் தந்ததைச் சொன்

னால் யாரும் எளிதில் நம்ப மாட்டார்கள்.

—மா. பாஸ்கரசேதுபதி, மணக்குடி.

பிழைத்தது புனர்ஜன்மம்

ரயிலில் டெல்லியிலிருந்து சென்னைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தோம். அதி வேகமாக ஓடிக் கொண்டிருந்த ரயில் திடீரென்று நின்றுவிட்டது. விசாரித்தபோது ஒரு பிரயாணியின் நான்கு வயது மகன் தவறி வெளியே விழுந்துவிட்டதால் அவர் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்திவிட்டதாகத் தெரிந்தது. ரயிலை மெல்லப் பின்னுக்குச் செலுத்தினார்கள். குழந்தை உயிரோடு கிடைப்பான் என்றே யாரும் நினைக்கவில்லை. சுமார் பதினைந்து கி. மீ. பின்னுக்குச் சென்ற பிறகு உடம்பில் வெறும் சிராய்ப்புக் காயங்களுடன் தனியாக அழுது கொண்டு நின்றவனைக் கண்டுபிடித்தார்கள். அன்று அவன் பிழைத்தது ரொம்ப ஆச்சரியம்தான்.

—கே. லோகநாதன், மதுரை.

தனியே உருவானவர்

ரிஸர்வ் செய்யாத பெட்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். இருந்த ஒரே கழிவறை அசுத்தமாக, அருவருப்பாக இருந்தது. திடீரென்று அழுத குழந்தையை எப்படி பாத்ரூமுக்குக் கூட்டிச் செல்வது என்று தயங்கினேன். "அங்கே ஒரே அழுக்காக இருக்கே" என்று என் மனைவி அங்கலாய்க்க, எதிரே அமர்ந்திருந்த ஒரு கன்னிகாஸ்த்ரீ எழுந்து போய்க் கழிவறையைச் சுத்தப்படுத்தி விட்டு வந்து, "இப்போது சுத்தமாக உள்ளது. குழந்தையை அழைத்துப் போங்கள்" என்றார். நாங்கள் விக்கித்துப் போனோம்.

—டி. எஸ். ஜெயக்குமார், கோவை—12.

காணாமல் போன பேனா

இருபது ஆண்டுகளுக்கு முன் சென்னை சென்றிருந்த போது நடந்தது இது: பஸ்ஸிலிருந்த கூட்டத்தில் என் அருமைப் பைலட் பேனாவைத் தவற விட்டுவிட்டேன். மிகவும் வருத்தமாக இருந்தது. அதே போன்றதொரு ஃபாரின் பேனாவை வாங்க எண்ணி மூர் மார்க்கெட் சென்றேன். என் பழைய பேனாவைப் போன்ற நிறத்திலும் அதே வடிவத்திலும் ஒரு பேனா கிடைத்தது. அதை எடுத்துப் பார்த்ததும் எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சி. நான் பறிகொடுத்த பேனாவேதான் அது என்பதை அதில் செதுக்கப்பட்டிருந்த என் பெயர் காட்டிக் கொடுத்தது.

—எஸ். பாலசுப்பிரமணியன், திருச்சி—23.

ஆச்சரியம்தான்!

விடுமுறை முடிந்ததும் நாகர்கோவில் திரும்புவதற்குப் பஸ் ஏறினோம். குடும்பத்தினருடன் சென்றபடியால் ஒரு சீட்டில் தனியாக இருந்த ஒரு பயணியை இடம் மாறி உட்கார்ந்து, எங்களுக்குச் சேர்ந்தாற்போல் இடம் அளிக்கச் சொல்லிக் கேட்டார் கண்டக்டர். அந்த நபர் மறுத்துவிட்டார். எனவே நாங்கள் தனித்தனியே உட்கார்ந்தோம். தளபதிசமுத்திரம் தாண்டிச் செல்லும் பொழுது பஸ் ஒரு பாலத்தில் இடித்துத் தலைகீழாகக் கவிழ்ந்துவிட்டது. உயிர்ச்சேதம் விளையாதது ஆச்சரியம் என்றால், இடம் மாறி அமர மறுத்த அந்தப் பயணிக்கு மட்டும் காலில் பலத்த அடிபட்டு, ஒரு கால் ஊனமானது அதைவிட ஆச்சரியம்.

—தி. திருசெல்வம், நாகர்கோவில்.

காட்டிக் கொடுத்த சட்டை

பத்து ஆண்டுகளுக்கு முன் நான் தங்கியிருந்த அறையிலிருந்து என் சாமான்கள் யாவும் திருட்டுப் போயின. குறிப்பாக என் சான்றிதழ்களைப் பற்றித்தான் எனக்குக் கவலை. போலீஸில் புகார் கொடுத்துவிட்டு அலைந்து தேடினேன். ஐந்து நாட்கள் கழித்து, திருச்சி பாலக்கரை எடத் தெருவில் என் சட்டையை அணிந்து கொண்டு ஒருவன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவன்தான் என் அறையிலிருந்து சாமான்களைத் திருடியிருக்கக் கூடும் என்று யூகித்து, போலீஸில் புகார் செய்தேன். திருட்டுப் போன அத்தனை பொருட்களும் கிடைத்து விட்டன!


—என். கிருஷ்ணமூர்த்தி, திருச்சி—14.

ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸைக் குலுக்கல்முறையில் பரிசாகப் பெறுபவர்:

என். கிருஷ்ணமூர்த்தி,
Fitter II VALVES ASSY.
Building 6, BHEL.
Trichy — 620 014.



சந்தரஞ்சனி



31. சபலமும், சபதமும்!

ஸஹ்யாத்ரி மலைத் தொடரின் தாபோல் மலைப் பகுதி மாலைக் கதிரவனின் மஞ்சள் கதிர்களால் ஊடுருவப்பட்டு மயக்கமான நிலையை சிருஷ்டித்திருந்தது. காட்டு மர இலைகளின் இடுக்குகளில் புகுந்த கதிர்கள் சில பாறைகளுக்கும் மரத்தின் புஷ்பங்களுக்கும் தனி மெருகைப் பூசியதால் புஷ்பங்களும் பாறைகளும் தங்கள் இயற்கை வண்ணங்களை லேசாக மாற்றிக் கொண்டாலும் அந்த மாற்றமே அவற்றுக்குத் தனிச் சிறப்பை அளித்திருந்தது. கடலின் அலைகள்கூட அந்த மஞ்சள் நிறக் கதிர்களை ஏற்று நீல நிறத்தை லேசாக மாற்றிக் கொண்டதல்லாமல் தரையில் மோதிய தங்கள் திரைகளையும் முழு வெளுப்பிலிருந்து மஞ்சளும் வெளுப்பும் கலந்த புது மெருகைக் கூட்டியதால், மஞ்சள் பூசி அரைவாசி குளித்துவிட்ட பருவ மங்கையின் உடல் நிறத்தைப் பெற்றிருந்தன அலை ஓரத் திரைகள்.

இந்தச் சமயத்தில் வெகுவேகமாகப் புரவிகளில் வந்திறங்கிய சித்தரஞ்சனியும் கௌதமி புத்ரனும் நன்றாக மறைக்கப்பட்டிருந்த ஒரு புதரின் அருகாமைக்கு வ[illegible]தும் சாதவாகன வாலிபன் அந்தச் சித்தினி[illegible]த் தனது வலிய [illegible]களால் மிக முரட்டு[illegible]மாகக் கட்டி[illegible]. அந்த முரட்டுத் [illegible]ால் தனது உடல் வலியெடுத்த போதிலும் அந்த வலியும் தனக்குத் தேவையாயிருப்பதை உணர்ந்த சித்தரஞ்சனி "சற்றுப் பொறுங்கள்" என்று கூறி அவன் கைகளிலிருந்து விலக முயல்வதுபோல் பாசாங்கு செய்தாள்.



அந்தப் பாசாங்கை உணரவே செய்த சாதவாகனன் "எதற்காகப் பொறுக்க வேண்டும்?" என்று கேட்டு அவள் கழுத்தில் தனது உதடுகளைப் புதைத்தான்.

அவள் உடலெங்கும் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்றதாலும், கௌதமிபுத்ரன் கைகள் மேலும் அவள் உடலைப் பல இடங்களில் ஆராய்ச்சி செய்யத் தொடங்கியதாலும் அவள் உணர்ச்சி வேகத்தில் திணறிக் கொண்டே, "ஆக்கப் பொறுத்தவர் ஆறக் கூடாதா?" என்று மெதுவாகக் கேட்டாள். அப்படிக்கேட்டாளேயொழிய அவனை ஆறப் பொறுக்கவிடாமல், தனது இடது கையால் தனது தோளில் புதைந்து கிடந்த அவன் தலையின் குழல்களைக் கோதினாள். குழலின் ஒரு பகுதியைத் தூக்கி அவன் பின் கழுத்தில் தனது இதழ்களையும் ஊன்றினாள்.

அந்த நிலையில் முகத்தை அவள் கழுத்தில் புரட்டிய அந்த வாலிபன், "பொறுக்கவா சொல்கிறாய் சித்தரஞ்சனி!" என்று மெதுவாகக் கேட்டான். காதுக்கருகில் ஒலித்த அந்தச் சொற்கள் அவள் வேகத்தைத் தூண்டவே செய்ததால் அவள் பதிலேதும் சொன்னாளில்லை. அவள் கைகள் அவன் கழுத்தை இறுக வளைத்தன. பிறகு தலையைப் பிடித்துக் கழுத்திலிருந்து கீழே இழுத்தன வேகமாக. இப்படி மார்புக்கருகில் இழுக்கப்பட்ட அவன் தலை அவள் மீது புரண்டது. "சித்தரஞ்சனி! சித்தரஞ்சனி!" என்று உதடுகள் முணுமுணுத்தன.

"என்ன?" என்ற ஒற்றைச் சொல் மந்திரத்தை மோகனாஸ்திரமாக வீசினாள் சித்தரஞ்சனி.

அந்தக் கேள்வியே அழைப்பு என்பதைப் புரிந்து கொண்ட கௌதமிபுத்ரன் "நமக்குத் தான்....." என்று ஏதோ துவங்கினான்.

"உம்?" தழுதழுத்த குரலில் கேட்டாள் அவள்.

"திருமணம் ஆகிவிட்டதே?" என்றான் அவன் ஏதோ புதிய விஷயத்தைச் சொல்பவன்போல்.

"ஆம்."

"ஆகவே...... ஏன்....."

"என்ன..... ஏன்?"

"காக்க வேண்டும்?"

இதற்கு அவள் பதில் சொல்லவில்லை. அவளை அப்படியே கௌதமிபுத்ரன் கைகளில் தூக்கிக் கொண்டான். நிதானமற்ற புத்தியுடன் அவளைப் பாறையில் கிடத்தி அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"இன்னும் வெளிச்சம் இருக்கிறது" என்றாள் அவள் வேறு திக்கில் பார்வையைச் செலுத்தி.

சாண்டில்யன்

அவன் அவள் முகத்தைத் தன்னை நோக்கித் திருப்பி, "இருந்தாலென்ன?'' என்று கேட்டான்.

அவள் நகைத்தாள். "இது, சரியல்ல'' என்றாள் மெதுவாக.

"எது சரியல்ல?'' என்று முரட்டுத்தனமாய்க் கேட்ட சாதவாகனன் அவள் கச்சையைச் சிறிதே தளர்த்த முயன்றான்.

அவள் அவனது கைகளை இறுகப் பிடித்தாள். "இங்கு யாராவது வரலாம்'' என்று சுட்டிக்காட்டினாள்.

"யாரும் வரமாட்டார்கள்.''

"ஏன்?''

"நாகபாணன் தனது படைகளை மலையின் வடபுறத்துக்கு அனுப்பிவிட்டான்.''

இதைக் கேட்ட சித்தரஞ்சனி நகைத்தாள். "உங்களுக்கு நன்றாக உதவியிருக்கிறார் நாகபாணர்!'' என்று ஏளனக்குரலில்சொன்னாள் சித்தரஞ்சனி நகைப்பின் ஊடே.

இந்த உரையாடலைப் புதரின் மறுபுறத்திலிருந்து கேட்ட க்ஷத்ரபன் திகைத்தான். தங்கள் படைகள் எதுவும் அங்கில்லாத காரணத்தைப் புரிந்து கொண்டதால், 'நாகபாணர் இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை?' என்றும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அதனால் பக்கத்திலிருந்த செடியைச் சற்று அழுத்திப் பிடித்ததால் அதன் கிளையொன்று பட்டென்று உடையவே இன்னொரு பக்கத்திலிருந்த சித்தரஞ்சனி, "அதைக் கேட்டீர்களா?'' என்று வினவி எழுந்திருக்கவும் முயன்றாள்.

அவளை மெதுவாக எழுந்திருக்கவிட்ட சாதவாகனன் தானும் மெதுவாக எழுந்திருந்து புதரைச் சற்றே விலக்கிப் பார்த்தான். கடற்கரையில் யவனன் வேகமாக நடந்து கொண்டிருப்பதைக் கவனித்ததும், "நாகபாணனுக்குப் புது மரக்கலங்களைக் கொண்டு வந்த யவனன் வருகின்றான்'' என்றுசித்தரஞ்சனியிடம்சுட்டிக்காட்டினான்.

"இவனைத்தானே நீங்கள் கட்டிப் போட்டு இவன் உடையில் மகாக்ஷத்ரபரின் மரக்கலம் சென்றீர்கள்?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

"ஆம். இவனேதான்.''

"எப்படித் தப்பினான்?''

"நானே அவனைத் தப்ப வைத்தேன்.''

"ஏன்?''

"அசந்திருப்பவனுடன் போரிடுவதும் கொல்வதும் அதர்மம் என்ற காரணத்தால்.''

"நீங்கள் நாகபாணரிடம் சிக்கியிருந்தால் என்ன ஆகும் தெரியுமா?'' என்று சித்தரஞ்சனி வினவினாள்.

"தெரியும். இன்று என்னைத் தப்ப வைத்ததே நாகபாணர்தான்'' என்றான் சாதவாகனன்.

இதைக் கேட்ட சித்தரஞ்சனி பிரமை பிடித்த கண்களைச் சாதவாகனன் மீது திருப்பினாள். நாகபாணன் அப்படி யாருக்கும் தயை காட்டுபவன் அல்லவென்பதை உணர்ந்திருந்த சித்தரஞ்சனிக்குச் சாதவாகனன் சொன்னதை நம்பவே முடியவில்லை. அவள் கண்களிலிருந்த அவநம்பிக்கையைக் கண்டுவே செய்த சாதவாகனன், "சித்தரஞ்சனி! எந்த வீரனிடத்திலும் நல்ல குணம் உண்டு. மனித சிருஷ்டியே நல்லதும் பொல்லாததும் கலந்ததுதான். நாகபாணன் கொடுமைகள் பல இழைக்கலாம். ஆனால் மகாவீரன். சிக்கிய எதிரியை அழிக்க அவன் இஷ்டப்படவில்லை. ஆகவே என்னைப் போக விட்டான்'' என்று நடந்த விவரங்களைச் சொன்னான்.

அவன் விவரித்ததைக்கேட்ட சித்தரஞ்சனி பெரும் வியப்புக்குள்ளானாள். "சரி வாருங்கள். நாம் போவோம்'' என்று தனது புரவியை நோக்கி நடந்தாள்.

"இரு போகலாம். அதோ வரும் யவனனுடன் பேசிவிட்டு வருகிறேன்'' என்றான் சாதவாகனன்.

"என்ன பேசப் போகிறீர்கள்?'' என்று சித்தரஞ்சனி கேட்டாள்.

"அவனைத் திருப்பி மரக்கலத்துக்கு அனுப்பிவிடுகிறேன்.''

"ஏன்?''

"நாகபாணர் என்னுடன் தர்மப் போர் நிகழ்த்த விரும்புகிறார். அதற்கு நான் இடைஞ்சலாக இருக்கக்கூடாது. அவருடைய தலைவர்களை அழித்து அவரைப் பலவீனப் படுத்தக்கூடாது'' என்று அவன் சொல்லிக் கொண்டேயிருக்கையில் புதரை விலக்கிக் கொண்டு, க்ஷத்ரபன் அவர்கள் முன்பு தோன்றினான்.

"க்ஷத்ரபரா!'' என்று வியப்புடன் கேட்டான் சாதவாகனன்.

"தந்தையா!'' என்றாள் சித்தரஞ்சனி.

ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த க்ஷத்ரபன் "சாதவாகனரே! மகாக்ஷத்ரபருக்குச் சமதையான எதிரி நீர். நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் அதர்மமாக அழிக்க இஷ்டப்படவில்லை. நீங்கள் சொல்லுங்கள். நான் யவனனை அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறிக் கொண்டேயிருக்கையில் மலைச்சரிவு கடல் மணலைத் தொடுமிடத்தில் ஒரு விபரீதம் நடந்து கொண்டிருந்தது.

ஜஹாங்கீர், நூர்ஜஹானைப் பார்த்து, "இளமையில் ஏறு போல் நிமிர்ந்து நடந்த இளவல்கள் முதுமை எய்தப் பெற்றதும் கூனிக் குறுகி பூமியைப் பார்த்த வண்ணம் நடக்கின்றனரே ஏன்?'' என்று கேட்டார்.

உடனே நூர்ஜஹான், "தங்களின் இழந்த நாட்கள் மண்ணில் எங்கேனும் புதையுண்டு கிடக்குமோ என்று தேடத்தான் அவ்விதம் நடக்கிறார்கள்'' என்றாள்.

தகவல்: எஸ். முகம்மது யூசுப்.



எந்த எதிர்ப்பையும் எதிர்பார்க்காமல் மதோன்மத்தனாய் நடந்து கொண்டு வந்த யவனனை அக்கம்பக்கங்களிலிருந்து நான்கு வீரர்கள் தாக்கினார்கள். எதிர்பாராத அந்தத் தாக்குதலால் யவனன் ஒரு விநாடி திகைத்-தானாலும் அடுத்த விநாடி தன்மீது பாய்ந்த வீரர்களை உதறிவிட்டு, கையில் வாளை உருவிக் கொண்டு நாலைந்து வீரர்களையும் ஒருவனாகச் சமாளிக்க முயன்றான். சிறிது நேரத்தில் இரண்டு மூன்று வீரர்கள் காயமடைந்த பின்னும் சண்டை ஓயவில்லை. யவனன் தனது வீரர்கள் அந்த இடத்தை விட்டு அகற்றப்பட்டார்களென்பதை அறியாததால் "யாரங்கே! வாருங்கள். இந்தக் கொசுக்களை அடித்துப் போடுங்கள்" என்று கூவினான். அவன் சொற்களைக் கேட்டது போல் பத்துப் பதினைந்து வீரர்கள் வரத்தான் செய்தார்கள். அவர்கள் தலைவனும் பெரிய ஒரு புரவியை மலைச்சரிவில் துரத்தி வந்தான். யவனன் இருந்த இடத்தை அணுகியதும் பெரிதாக நகைத்த தலைவன், "யவனர் தலைவனே! வாளைக் கீழே போட்டுவிடு" என்று உத்தரவிட்டான்.

வந்த வீரர்களை நோக்கித் தனது கண்களைச் சுழலவிட்ட யவனன் அவர்கள் யாரும் தனது வீரர்கள் அல்லவென்பதைப் புரிந்துகொண்டதால் தலைவனை நோக்கி, "காஷ்டானனா! இவர்கள் யார்?" என்று வினவினான்.

"எனது வீரர்கள்."

"அப்படியானால் நமது வீரர்கள்தானே?"

"இல்லை."

"இல்லையா?" யவனன் குரலில் பிரமிப்பு உச்ச ஸ்தாயியிலிருந்தது.

"இல்லை!"

"நீ யார்?"

"நான் சாதவாகனர் படைகளுக்குத் தலைவன்."

"கட்சி மாறிவிட்டாயா?"

"ஆம். நல்ல கட்சிக்கு மாறிவிட்டேன்" என்ற காஷ்டானன் தனது வீரர்களை நோக்கி, "ஏன் நிற்கிறீர்கள்? இவனைப் பிடித்துக் கட்டுங்கள்" என்று கூவினான்.

அடுத்த உத்தரவுக்கு வீரர்கள் காத்திருக்கவில்லை. யவனன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினார்கள். காஷ்டானன் கீழே விழுந்துகிடந்த எதிரி மீது தனது கையிலிருந்த பெரிய வேலை உயர்த்தினான்.

யவனன் தனது உயிர் போய்விட்டது என்றே எண்ணிய சமயத்திலும் பயங்கரமாக நகைத்தான். அந்த நகைப்பை அடுத்துக் காஷ்டானன் கையிலிருந்த ஈட்டி பலமான ஒரு வாளால் அகற்றப்பட்டது. அதை அகற்றிய வண்ணம் புரவியில் அமர்ந்திருந்த சாதவாகனன் "காஷ்டானனா! தனிப்பட்ட எதிரியைக் கொல்வது அதர்மம். அவனை விட்டுவிடு" என்று கூறிவிட்டு க்ஷத்ரபனை நோக்கி, "க்ஷத்ரபரே! யவனனை அவன் படைகளிருக்குமிடம் அழைத்துச் செல்லுங்கள். பௌர்ணமியன்று சந்திப்போம்" என்று கூறிவிட்டுத் தனது புரவியைத் திருப்பிக் கொண்டு சித்தரஞ்சனி பின்தொடர மலைக் காட்டுக்குள் ஏறிச் சென்றான். வேண்டா வெறுப்பாக க்ஷத்ரபனையும் யவனனையும் விட்டுத் தனது வீரர்களுடன் திரும்பினான் காஷ்டானன்.

அவர்கள் அனைவரும் சென்ற பிறகு தனிமையில் விடப்பட்ட க்ஷத்ரபனும் யவனனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர். "இந்தப் போர்முறை எனக்குப் புரியவில்லை" என்றான் யவனன்.

"உமக்குப் புரியாது. இது பாரதத்தின் போர்முறை" என்றான் க்ஷத்ரபன். மதிப்பு நிறைந்த கண்களுடன் மலைமீது சென்றுகொண்டிருந்த சாதவாகனனைப் பார்த்தான். யவனன் பிரமித்து நின்றான்.

இதற்குள் இருளும் நன்றாக மூண்டுவிடவே சித்தரஞ்சனியின் புரவியோடு தனது புரவியை இணைத்த சாதவாகனன், "சித்தரஞ்சனி! உன் தகப்பன் சமயத்தில் வந்து சேர்ந்தான்" என்றான் எரிச்சலுடன்.

"உங்களுக்கொரு உதவி புரிந்தார்."

"என்ன உதவி?"

"உங்கள் தாயிடம் அனுமதி பெற்ற பிறகுதான் என்னை அடைவதாகச் சபதம் செய்திருப்பதாகச் சொன்னீர்களல்லவா?"

"ஆம் சொன்னேன்."

"அதை மீற இருந்தீர்களா....?"

"உம்!"

"என் தந்தை வந்து உங்கள் சபதத்தைக் காப்பாற்றினார்" என்ற சித்தரஞ்சனி நகைத்தாள். அடுத்த விநாடி புரவியிலிருந்து இரு வலிய கைகளால் தூக்கப்பட்ட அந்த வனதேவதை சாதவாகனன் புரவி மீது சாதவாகனனுக்கு முன்பு உட்கார்ந்திருந்தாள். புரவி தனது முழு வேகத்தைக் காட்டியது. புரவி மட்டுமல்ல, அவளுக்குப் பின்னால் அவள் உடலுடன் ஒட்டி உட்கார்ந்திருந்த சாதவாகனனும் ஒரு கையில் கடிவாளத்தை ஏந்திய வண்ணம் இன்னொரு கையால் அவளை இறுக்கித் தனது வேகத்தையும் காட்டினான். புரவி வாயு வேகத்துடன் மலைக் காட்டினூடே விரைந்தது. சாதவாகனன் உணர்ச்சிகளும் எல்லை மீறி விரைந்து கொண்டிருந்தன. அவன் சபலம் சபதத்தைச் சுக்கு நூறாக உடைத்துக் கொண்டிருந்தது.

(தொடரும்)



கிராமத் தெரு விளக்கைத் துவக்கி வைக்க வந்த இரு காங்கிரஸ் எம். எல். ஏக்கள் டிராக்டர் ஒன்றின் 'ஹெட் லைட்' வெளிச்சத்தில்தான் திறப்புவிழாவை நடத்த வேண்டியதாயிற்று. காரணம், விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தாலும் மின் இணைப்பு தரப்படவில்லை! மண்ட்சௌர் மாவட்டத்தில் லால்பூரா என்னும் கிராமத்தில்தான் இப்படி ஒரு துவக்கவிழா நடைபெற்றது!

-கிதா பஞ்க.

நினைவே நெருப்பாகி... நெஞ்சே உலையாகி...

ராதை....ராதை! ஆம். வலது பிராகாரத்தில் வந்து கொண்டிருப்பது அவளே தான்.

ராதை. பெயரின் உச்சரிப்பிலேயே ஒரு சுநாதம். மனசில் தேனாய்ப் பொங்கும் வெள்ளம், உடல் லேசாகிப்போனதுபோன்ற தெளிவு. அந்தப் பெயரை எங்கேனும் கண்டாலோ, கேட்டாலோ, படித்தாலோ அவளின் சிவந்த இதழ்களில் குழி விழும் கன்னங்களுடன் பொங்கும் சிரிப்பும், கண்களும் புன்னகைக்கும்மலர்முகமும்தான் நெஞ்சில் தெரியும்; உடல் சிலிர்த்துப் பொங்கும்; உள்ளம் கிளர்ச்சியடையும்.

செண்பகநல்லூர். நஞ்சை நிலம் போர்த்தி காவிரியைத் தாவணியாய் உடுத்தி அந்தக் கிராமம் வயசு வந்த பெண்ணாய்.....

நான் அப்போது ஆறுவது படித்துக் கொண்டிருந்தேன். என் அப்பா நரசிம்ம ஸ்வாமி கோயிலில் பட்டர். அவளின் அப்பாவுக்கு ஈ.பி. யில் உத்தியோகம்.

ராதை என் அக்காவின் கிளாஸ்மேட். பெரும்பாலும் அவள் இருப்பது எங்கள் வீட்டில்தான். அவளை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவளின் சிரிப்பு, அந்தத் தேனாய்ச் சொட்டும் குரல். சந்தனமாய் முகம். என் அக்காவைவிட அழகாய் இருப்பாள். குழல் கற்றைகள் நெற்றியில் புரளும்.

அவளைத் தொட..... உள்ளங்கை பஞ்சுப் பொதியாய்....

வருடா வருடம் நாங்கள் மாட்டு வண்டி கட்டிக் கொண்டு இரண்டு மைல் தொலைவிலுள்ள காமாட்சியம்மன் பண்டிகைக்குச் செல்வோம்.

அந்த வருடம்தான் அவளுடன் சேர்ந்து சென்ற கடைசி வருடம் என்று நினைக்கிறேன்.

அவளின் அருகில் நான் அமர்ந்து கொண்டேன். வெண்மையாய் நிலா. நெருக்கமாக அமர்ந்திருந்ததால் அவளின் தொடை என் மடியில் பூரணமாய் அமிழ்ந்திருந்து. இடது பக்க உடம்பு என் முகத்தில் பட.... சொல்லொணாத ஓர் உணர்ச்சி. அப்போது என்னால் அவற்றை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

சிறிது நேரத்தில் ஒரு குழந்தையாய் அவ



ளின் மடியிலேயே உறங்கிவிட்டேன் என்பது வேறு விஷயம்.

நான் ஆருவது முழு ஆண்டுத் தேர்வு எழுதிக் கொண்டிருந்தேன். அவன் பதினென்ருவது பரீட்சை எழுதி முடித்திருந்தான்.

நன்ருக நினைவுள்ளது. ஒரு நாள் இரவு திடீரென என்ன, ஏது என்று தெரியாமல் அவர்கள் லாரியில் சாமான்களை ஏற்றி வீட்டைக் காலி செய்து கொண்டு போயிருந்தார்கள்.

அப்பாவிடம் கேட்டதற்கு ராதையின் அப்பாவை வேறிடத்திற்கு மாற்றிவிட்டதாகச் சொன்னர்.

அதற்கு முந்தின நாள் நான் புழுக்கடை மாமரத்தின் அடியில் அமர்ந்து கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தேன். தண்ணீர்த் தொட்டியினருகே அவள் வந்தாள்.

அவளின் செய்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டே என்னைப் பார்த்தவள், நான் அவளையே கவனித்துக் கொண்டிருப்பதை அறிந்ததும் லேசாகச் சிரித்தபடி— கஷ்டப்பட்டுத்தான் சிரித்தாள் என நினைக்கிறேன் — என்னருகே வந்து அமர்ந்து முதுகைக் கட்டி தன் முன் இழுத்து இடது கன்னத்தில் மிக்க ஆதுரமாய் ஒரு முத்தம் வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள். அது எனக்கே எனக்கான முத்தம்! யாருக்கும் சொல்லிக் களங்கப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. எனக்குச் சட்டெனப் புரியவில்லை என்ருலும் இன்னும்கூட அதைப் புனிதமான ஒன்ருக என் மனத்தின் ஒரு பகுதியில் வைத்துக் கொண்டுள்ளேன்.

இன்று எதிர்பாராதவிதமாய் அந்த ராதையை இந்தக் கோவிலில் சந்திக்கிறேனென்ருல்.....

என் அக்காவிற்குத்திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளன. நான் சேலத்தில் இந்தியன் பேங்கில் பீல்டு ஆபீசராக உள்ளேன். இன்று இந்தக் கிராமத்திற்கு லோன் கொடுக்கப்பட்டவர்களது நிலையைப் பார்க்க வந்துள்ளேன். இங்கும் எங்கள் கிளை உள்ளது.

செண்பகநல்லூருக்கும்இந்தக்கிராமத்திற்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.

சந்நிதிக்குள் நுழைந்தாள். நானும். பசுபதீஸ்வரர்வெண் பட்டுடன் தீர்க்கமாக இருந்தார்.

பூஜை முடிந்து பிராகாரத்தினுள் அவள் அமர்ந்தபோது தயங்கியபடி — மனம் முழுக்க வெண் புருக்கள் படபடவெனச் சிறகடிக்க முகத்தில்வியர்வை பொங்க, உடல்சிலிர்க்க— கர்ப்பக்கிரகத்தினுள்ளேயே நுழைந்து சுவாமியைத் தீண்ட முயலும் ஒரு பக்தனின் நிலையாய், திவ்ய லயிப்பின் திகைப்பாய்...

கால்களில் வெள்ளி மெட்டி பளிரிட, கழுத்தில் மஞ்சள் கயிறு பொன்னுய்ப் பரிமளிக்க, கைகூப்பித் தொழ வேண்டும் போல், அந்த அழகு அப்பழுக்கற்றதாய் ஆராதிக்க வேண்டியதாய் மேலும் பிரகாசித்து.....

உதடுகளைத் திறந்ததும், 'அம்மா' என்ற வார்த்தைதான் பிசிருய் உதிர்ந்தது. சட்டென நிமிர்ந்தவள் என்னைக் கண்டதும் எழுந்து நின்ருள். என்னைத் தெரியாத நிலையில் விழித்தாள்.

மெல்ல சிநேகத்துடன் புன்னகை புரிந்



தேன். ''நீங்க... நீங்க ராதைதானே?''

''ஆமாம். நீங்க?'' புருவம் முடிச்சாய் மாறக் கேட்டாள்.

''என்னைத் தெரியலே? நான்.... குமார். ராணியோட தம்பி. செண்பகநல்லூர். ஞாபகமிருக்கா?''

அவள் என்னைக் கண்டு கொண்ட அடையாளத்துடன் மகிழ்ச்சியில் கண்களை மலர்த்தினாள். மாமர விஷயம் இன்னும் இவளுக்கு ஞாபகமிருக்குமா? கடவுளே இவள் அதை மறந்திருக்க வேண்டும்.

குடும்ப சேம லாபங்கள் அனைத்தையும் கேட்டறிந்தாள். நான் இங்கு வந்த விஷயம் அறிந்ததும், ''அட, அந்த பேங்க் மேனேஜர் தான் என்னோட ஹஸ்பண்டு'' என்றாள்.

''அப்படியா? எனக்குத் தெரியலே, நைஸ் ஜென்டில்மேன். யு ஆர் வெரி லக்கி. எல்லாத்துக்கிட்டேயும் ரொம்ப நல்லா பிஹேவ் பண்றார்'' நான் சொல்லச் சொல்ல அவளின் முகம் இறுகிக் கொண்டு வருவதைக் கவனித்தேன்.

கண்களின் அருகே மேக உரசலாய்.... ''நான் ஏதாவது தப்பாச் சொல்லிட்டேனா?'' படபடப்புடன் வினவினேன்.

அவள் மளமளவென்று கூறத் தொடங்கியதைக் கண்டதும், அவள் என் சின்ன வயது சிநேகத்தை மறக்கவில்லை என்பது புரிந்தது. இல்லாவிட்டால் தன் குடும்ப விவகாரத்தை என்னிடம் வெளிப்படையாகக் கூறத் தொடங்குவாளா?

என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. இப்படியுமா, இப்படியுமா ஒரு மனிதன் இருப்பான்? ஓ....எவ்வளவுகுரூரம்! வெறும் பேச்சை வைத்து மனித மனத்தை எடை போடக்கூடாது போலுள்ளதே!

லேசாய்ப் புடவையை உயர்த்திக் காட்டினாள். கணுக்காலில்லேசாய் ஆறத்தொடங்கியிருக்கும் சூடு. இரண்டு விரக்கடை நீளத்திற்கு. உடம்பே அதிர்ந்தது. அவனின் உடம்பு முழுக்கச் சந்தேகமாம். காட்டக்கூடிய இடத்தில் இந்த ஒரு சூடுதான். மிருகத்திற்கு மனித முகம் மாட்டப்பட்டுவிட்டதோ?

அவள் விடை பெற்றுச் சென்று வெகு நேரமாகியும் மண்டபத் தூண்களில் ஒன்றாய் நெடு நேரம் நின்றுவிட்டேன். அந்த இளந் தேவதைக்கு இப்படியொரு தீ வதையா?

வெடித்தேன். பாஸ்கர்?

''குட்மார்னிங் குமார்'' — வரவேற்று உட்கார வைத்தான். என்னைவிட ஆறேழு வயதுபெரியவன். வெறும்சந்தேகங்களுக்கே சூடு வைக்கும் இவனிடம் நான் சின்ன வயதிலிருந்தே உன் மனைவியிடம் பழக்கம் எனச் சொல்லி ஏன் அவளை இம்சிக்கிறாய் எனக் கேட்டால்— அவ்வளவுதான்.இப்பிரச்னையை எங்ஙனம் அணுகுவது? எவ்விதத்தில் தீர்ப்பது? யோசித்தேன்.

சிகரெட் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட் எடுத்துக் கொண்டு என்னிடம் நீட்டினான். ''நோ தேங்க்ஸ்'' என்றேன். உதட்டில் பொருத்தியபடி சர்ரக்....கெனத் தீக்குச்சியைக் கிழித்தவன், ''கோவில்ல ரொம்ப நேரம் பேசினீங்க போலிருக்கு? ரொம்பப் பழக்கமோ?'' ரொம்பச் சாதாரணமாக வினவினான்.

முழுவதையும் சொன்னேன். மாமர மூத்தத்தையும்,காமாட்சியம்மன் சுகானுபவத்தையும் விட்டுவிட்டு.....

''நான் உங்களை அறிவேன்'' என்றான்.

எனக்கு ஆச்சரியமாயிருந்தது. கண்களால் 'எப்படி' என்றேன்.

''வீட்டுலே போட்டோ வச்சிருக்கா. அவங்க ஊரு காமாட்சியம்மன் கோவில்ல விழாவின்போது பிடிச்சதாம். அவ பக்கத்துல நிக்கறது நீங்கதானே?''

சட்டென நினைவுக் குமிழி அமிழ்ந்தது. அவளின் அருகே நிற்க நான் அழுத அழுகை நினைவுள்ளது. அவளின் இடுப்பளவே உள்ள அரை டிராயர் போட்ட, கண்ணீரின் ஈரம் கூடக்காயாமல் அருகேநிற்கவைத்தமகிழ்ச்சியுடன் பல்லைக் காட்டியபடி.....

பாரம் இறங்கியது போன்ற நிம்மதி. என்னைப் பற்றிச் சந்தேகம் எழாது. நானும் கதையை அப்படித்தான் சொல்லியிருந்தேன், எனது பெரிய அக்காபோல்தான் ராதை என்று.

காப்பி வந்தது. அதனைச் சிப்பியபடியே ஒரு நிமிடம் பார்த்தவன், ''நான் ஏன் இப்படித் துருவித் துருவிக் கேக்கறேன்னு யோசிக்கிறீங்களா?''

''நோ, நோ. சிறு வயசு அனுபவங்களை மறுபடி நினைத்துப் பார்க்கறதுங்கறது எவ்வளவு இனிமையான செயல் தெரியுமா? அந்தப் பொற்காலம் மீண்டும் வரவே வராது. ஆனா அந்த நினைவுகள் இனிமையானவை.

''எஸ். நல்ல ரசிப்புத் தன்மை உள்ளவங்களாலதான் சிறு வயசு அனுபவங்களை நெஞ்சில் நிலைக்க வைத்துக் கொள்ள முடியும்'' எனச் சொல்லி நீண்ட இடைவெளி விட்டான். எதற்கோ அடி போடுகிறான்?

''உங்களுக்கு ரமேஷைத் தெரியுமோ?''

ஓ..... அன்றைய சந்தேகங்களின் முடிச்சுகளெல்லாம் இன்று அவிழ்க்கப்படுகின்றன. அவன் எப்போதும் ஊர்க் கோடியில் உள்ள சின்னான் குடிசையிலேயே இருப்பான். பொம்பளை பின்னாலே சுத்தறதுனாலே, பொம்பளைச் சட்டின்னு சொல்லுவோம்.

சில சமயம் திருட்டு மாங்கா அடிக்கப் போகும்போது அந்த வழியாக ராதை வர்றதைப் பார்த்திருக்கேன். புரிஞ்சிட்டுது.

அதுக்கப்புறம் இவன் சின்னானோட பெண்டாட்டியையே பிடிச்சு இழுத்ததும் ஒரு நாள் ராத்திரி அவன் கண்ட மேனிக்கு அடிச்சிட்டுத் தலைமறைவானதும், ஆஸ்பத்திரியில் ஆறு மாசம் படுத்துக் கிடந்து, படாத இடத்தில் பட்டதுனாலே முன்ன மாதிரி பொலிகாளை மாதிரி சுத்த முடியாதுண்ணும் கல்யாணம் கட்டிக்ககூடத் தகுதியில்லாதவனா ஆயிட்டான்னும் ஊர்லே பேசிக்கிட்டது வேறே கதை!

''எஸ், தெரியும். வருத்தம் கொள்ளக் கூடிய மனித ஜென்மம். ஆணாய்ப் பிறந்த



இவன்: "அந்த சினிமா தயாரிப்பாளர் நடத்தற ஓட்டல்ல மட்டும் சாதா தோசை விலைக்கே, பெரிய பேப்பர் தோசை தர்றாங்க."

அவன்: "அப்படியா, பரவாயில்லையே?"

இவன்: "ஆனா, நாம் ஆர்டர் கொடுத்ததும் ஒரு லென்ஸ் பொருத்திய கண்ணாடியைக் கொடுத்து, கண்டிப்பாக அதைப் போட்டுக் சனும்பாங்க."

— இரா. சம்பத்குமார்.

துரதிருஷ்டசாலி. நாங்க அவனை பொம்பளைச் சட்டிம்போம். அவனோட நடவடிக்கைகளும் சில சமயம் அப்படித்தானிருக்கும். வெளியே வர்றதுக்கே, கூச்சப்படுவான். என்ன பண்றது, பார்க்க லட்சணமா இருக்கான். நிலபுலம் நீச்சு தொறவுன்னு நிறைய இருக்கு. ஆனா, அனுபவிக்கக் கொடுத்து வைக்கலையே?" சமத்காரமாக எதிராளியை அடித்துப் போடும் வகையில் பொய் சொல்ல வேண்டும். ஊசி கோர்ப்பது போல.

"என்ன.... என்ன சொல்றீங்க?" பதைத்தான்.

"அலின்னு சொன்னாத்தான் புரியும்னா அந்த வார்த்தையையும் யூஸ் பண்ணிக்கறதுலே தப்பில்லே."

"நீங்க சொல்றது உண்மையா? அப்ப நான் கேள்விப்பட்டது பால்ஸ் நியூஸா?" அவனின் படபடப்பு எனக்கு லேசாகப் புரிந்தும் புரியாமலும் இருந்தது.

"உங்களுக்கு என்ன நியூஸ் கிடைத்தது?"

சட்டென அவனின் முகபாவம் மாறி, "இல்லை என் பிரண்டோட தங்கச்சிக்குக் கொடுக்கலாம்னு பார்த்தோம். நில புலம் நீச்சு தொறவுன்னு எல்லாம் இருக்கு. பையனும் நல்லாயிருக்கானேன்னு...:.. இப்பல்ல புரியுது."

சுத்தமாக விளக்கப்பட்ட பொய் என்பது அவன் நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையில் தெரிந்தது.

பேச்சை மாற்றினேன்.

"ராதைசொன்னா, கண் நிறைஞ்ச கணவர். மனசு நிறைஞ்ச அன்பு. கவலை இல்லாத வாழ்க்கை. வேறென்ன வேண்டும்னு? நான் தான் சொன்னேன். என்னை மாமான்னு கூப்பிட ஒரு குழந்தை வேணும்னு. எப்போ பெத்துத் தரப் போறீங்க?" உனக்கு மட்டும் தான் பொய் பேசத் தெரியுமோ? சிநேகமாய்ச் சிரித்தேன். அவனும்கூட. சூடு வைக்கவே உனக்கு நேரம் சரியாக உள்ளது. சுகத்தை எங்கே சுவைக்கப் போகின்றாய்?

"அனேகமா அடுத்த வருஷம் நான் அப்பா ஆயிடுவேன். ஷ்யூர்" என்றான்.

அழுத்தந்திருத்தமான அந்த வார்த்தைகள் எங்கே ஒருவேளை தன்னையும் ரமேஷ் போல என்று எண்ணிவிடப் போகின்றானோ என்ற அச்சத்தில் ஒலித்தன.

கண்களில், முகத்தில் சந்தேக ரேகைகள் மறைந்து தெளிவு மதி பிறந்தாற் போலிருந்தது.

"மத்தியானம் வாங்க வீட்டுக்குப் போகலாம். நாமதான் ஒண்ணுக்குள்ளே ஒண்ணாயிட்டோம். ஓட்டல்லே எதுக்குச் சாப்பிடணும்?" அதில் இயல்பான நேசம் இழைந்திருந்தது.

அப்பாடா, இயன்றவரை இந்தச் சந்தேகப் பிராணியைச் சமனப்படுத்தியாகிவிட்டது. இவனின் சந்தேகம்கூட ஒருவகையில் வரவேற்கத்தக்கதுதான். இப்படிப்பட்ட சந்தேகக்காரனுக்குத்தான் அப்படிப்பட்ட பெண் கிடைப்பாள் போலிருக்கிறது.

இப்பொழுது புரிகின்றது. அன்று மாமரத்தடியில் நான் அமர்ந்து இருந்தபோது வந்தவள், "உவ்வே.... உவ்வே" என்று வாந்தியெடுத்துவிட்டு வாயையும் முகத்தையும் கழுவிக் கொண்டு நான் பார்த்தபடி இருப்பதைக் கண்டதும் என்னருகே வந்து அமர்ந்து முதுகை அணைத்தபடி அழுத்தமாகக் கன்னத்தில், இடது கன்னத்தில் முத்தமிட்டது.... புரிகின்றது. எதையோ மறைக்கச் சொல்லி எனக்கிடப்பட்ட பிச்சை. அவள் வாந்தி எடுத்தது பற்றி யாரிடமும் மூச்சு விடக்கூடாதென்பதற்காகக் கொடுக்கப்பட்ட லஞ்சம்... கேவலம்!

தாய் அறியாத சூலுண்டோ? அதனால்தான் அடுத்த நாள் இரவே காலி செய்து கொண்டு போய்விட்டார்கள். டிரான்ஸ்பர் இல்லை. சூலைப் பாழ் பண்ணத்தான் என்பது இப்போது புரிந்தது.

எனது இடக் கன்னத்தை அப்படியே பிய்த்து எறிய வேண்டும்போல் ஒரு வெறி. எத்தனை கேவலமாக நான் ஆக்கப்பட்டுவிட்டேன். சே. இதுநாள்வரை அவளைப் பற்றிய எண்ணங்கள் சீழ் பிடித்த புண்ணாய் நெஞ்சில் உறைய....

"ஸாரி பாஸ்கர். உடம்புக்கு ராத்திரியில் இருந்தே என்னமோ போலிருக்கு. இப்படியே பன்னிரண்டு மணி வண்டியிலே ஊர் திரும்பறேன். அப்புறமாச் சந்திக்கலாம். அம்மாவையும் கூட்டிண்டு வரேன்னு ராதைகிட்டே சொல்லிடுங்க."

பஸ்ஸில் போய்க் கொண்டு இருக்கும் போது, இந்தக் கிராமத்திற்கு எனக்குப் பதிலாகவேறொருவரை இன்ஸ்பெக்ஷனுக்கு அனுப்பச் சொல்லிவிட வேண்டும் என நினைத்துக் கொண்டேன்.

நினைவே நெருப்பாகி.... நெஞ்சே உலையாகி.... கண்களில் நீர் துளிர்த்தது.

இப்பொழுதெல்லாம் ராதை என்ற பெயரைப்பார்த்தாலோ, கேட்டாலோ, படித்தாலோ, உடலிலோ, உள்ளத்திலோ எந்தக் கிளர்ச்சியும், உணர்ச்சிகளும் முன்பு ஏற்பட்ட அந்த அலை போன்ற சிலிர்ப்புகளும் என்னுள் ஏற்படுவதே இல்லை.

சொர்க்கத்தின் கதவுகள்

17

அருணா கனகோபத்துடன் தொலைபேசியைப் 'படக்'கென வைத்தாள். கடந்த ஒரு வார காலமாக நகரத்துப் பிரபலமான துணிக் கடையில் 'மலிவு விற்பனை' நடப்பது பற்றி அவளும் அறிந்திருந்தாள். ஆனால், வழக்கம்போல் அவளால், சிநேகிதிகளுடன் கூடிக் கொண்டு, வெளியே கடைகளில் ஏறி இறங்கிக் கொட்டமடிக்க முடியாத வருத்தம் அவளுக்கு.

அன்றும், பிற்பகல் சாப்பாட்டு நேரத்திற்குப் பிறகு தொலைபேசி சிணுங்கியது. அருணா போனை எடுத்துக் காதில் வைத்ததும், மறு முனையிலிருந்து அவளது தோழி அர்விந்தா கூப்பிட்டாள்.

''ஹாய்! என்ன அருணா? கொஞ்ச நாட்களாக எங்கேயுமே காணறதில்லே. மோகன் ராம் கடையில், ஆர்கண்டியெல்லாம் கொள்ளை மலிவாகப் போடறான். போகலாமா?'' என்று உற்சாகத்தில் அரவிந்தா படபடத்தாள்.

அருணாவுக்கு அழுகை பொங்கியது. சாதாரண நாட்களாக இருந்தால், ''நான் ரெடி'' என்று பதிலிறுத்துவிட்டு, அவசரமாகக் கைப்பையில் நோட்டுக் கட்டுக்களைத் திணித்தபடி புறப்பட்டிருப்பாள். இப்போது....?

''ரொம்ப 'டைட் ஷெட்யூல்' அரவிந்தா! இங்கே பிள்ளை, பொண்ணு எல்லோரும் வந்ததிலே அவர்களோட அடிக்கடி வெளியே போக வேண்டியிருக்கு,'' சட்டென்று ஒரு பொய்யைக் கூறிச் சமாளித்தாள்.

''உனக்குப் பார்க்கணும்னு சொன்னியே, 'தூப்சாவ்' ஸாரீஸ். இப்ப நிறைய வந்திருக்குது. எனக்கும் அவர் ஆபீஸ் கார் அனுப்பியிருக்காரு. போகலாமேன்னு கூப்பிட்டேன். பரவாயில்லே. இன்னொரு தடவை பார்க்கலாம். பை!'' அரவிந்தா தொடர்பைத் துண்டித்துக் கொண்டாள்.

எத்தனை பெரிய அரிய சந்தர்ப்பம்? ஆபீஸ், பெட்ரோல், கார், டிரைவர்..... அலுங்காமல் ஓசியில் பயணம் செய்யலாம். நாகூக்காய்ச் சீருடை அணிந்த டிரைவர் கார்க் கதவைத் திறந்துவிட, பெரிய கடைகளுக்கு விஜயம் செய்தால், அவள் மதிப்பு எப்படி உயர்ந்திருக்கும்? இதையெல்லாம் ஒரே நொடியில் தகர்த்தெறிந்துவிடும்படி செய்துவிட்டார்களே இவர்கள்? கோபத்தைத் தொலைபேசியின் மீது காட்டிவிட்டு, உள் பக்கம் விரைந்தாள். பிற்பகல் சாப்பாட்டிற்குக்கூட வரமுடியாதபடி வெளியே அலைந்து திரியும் பெண், பிள்ளை இருவர் மீதும் அவளுக்குச் சினம் பொங்கியது. பிறரது கஷ்டங்களைப் பற்றி ஏதாவது நினைத்துப் பார்க்கிறார்களா? பேரன் கிரண் அவளைப்பாடாய்ப் படுத்திவிட்டு, சற்று முன் உறங்கிப் போயிருந்தான்.

முன்னறை வாயிற் பக்கம் வந்தவள், அழைப்பு மணி ஓசை கேட்டதும், கதவைத் திறந்தாள். வாயில் போட்ட பீடாவை மென்றபடி உள்ளே வந்த அஸ்வத்தை வியப்புடன் பார்த்தாள்.

''மணி என்ன ஆச்சு தெரியுமோ? காலாகாலத்திலே சாப்பிடாமல் இப்படி ஊரைச் சுத்திவிட்டு, பெங்களூருக்கு அப்புறம் ஓடிடப் போறே?''

''நான் சாப்பிட்டாச்சும்மா'' அஸ்வத் சிரித்தபடி முன்னறை சோபாவில் அமர்ந்தான்.

அருணா கடுமையுடன் மகனை உறுத்துப் பார்த்தாள். ''இங்கே வீட்டில், நான் ஒருத்தி எல்லாத்தையும் சமைத்து வைத்துக் கொண்டு காத்திண்டிருக்கிறது. நீ... கொஞ்ச நாள் லீவிலே வந்தவன். உட்கார்ந்து பேசக்கூட நேரமில்லாமல் அலையறது. ரொம்ப நன்னாயிருக்கு.''

அஸ்வத் தாயை ஒரு நிமிடம் வெறித்தான். அவனது பார்வையில் தென்பட்ட கடுமை அவளை ஒரு கணம் அச்சுறுத்தியது.

மெதுவாகத் தொண்டையைச் செருமியபடி, ''என் மனசு கேட்கலே. பெத்த மனசாச்சே. புலம்பிக் கொண்டே கிடக்கிறேன். உங்கப்பாவானால் அல்லும், பகலும் ஆபீஸே கதின்னு கிடக்கிறார். நான் ஒருத்தி, இத்தனை பெரிய வீட்டைக் கட்டி நிர்வகிக்கத் திண்டாடுகிறேன்.''

''அம்மா! நீங்க வேணும்னு ஆசைப்பட்டுக் கடன் வாங்கிக் கடல் போலக் கட்டிண்ட வீடு. அதுக்குக் கடன் அடைக்கத்தான் அப்பா ஆபீஸில் உழைக்கிறார்.''

''ஏன்? இந்த வீடு உனக்குத்தானே வரப் போறது? உனக்குச் சம்பந்தம் இல்லாதது மாதிரி பேசறியே!'' அருணா கோபத்துடன்

முகத்தைக் குலுக்கினாள்.

"இந்த வீட்டில் நான்தான் இருக்கப் போறேன்னு என்ன நிச்சயம்?"

"என்ன உளர்றே? பெங்களூர்லியே இருந்துடப் போறியா என்ன? நாளைக்குக் கல்யாணமாகி எனக்கு நாட்டுப் பொண் வந்தால் இந்த வீட்டில்தானே கிரகப் பிரவேசம் செய்தாகணும்" கர்வத்துடன் மகனை ஏறிட்டாள் அருணா.


"ஒப்புக் கொள்கிறேன். அதாவது மருமகள் உங்க மனசுக்குப் பிடிச்சவளா, இருந்தா..... " அவன் கேலியுடன் ஆரம்பித்தான்.

அருணாவின் புருவங்கள் ஆச்சரியத்துடன் நெரிந்தன. "எனக்குப் பிடிச்சவள்தான் எனக்கு வரப் போகிற நாட்டுப் பெண்."

"எனக்கு மட்டும் பிடிச்சிருந்து, உங்களுக்குப் பிடிக்காவிட்டால்....?" தாயின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்தபடி மகன் கேட்டான்.

அவன் கண்களில் ஜொலித்த தீவிரம் அவளைக் கலவரத்தில் ஆழ்த்தியது. "என்ன சொல்றே நீ?" நெஞ்சு படபடக்க மெல்ல

லக்ஷ்மி



வினவினான்.

''என்னோட கல்யாண விஷயத்தை நானே தீர்மானிச்சுட்டேன்.''

''என்னது?'' அதிர்ந்து போனவளாய் அருகிலிருந்த ஆசனத்தில் 'தொப்'பென்று அமர்ந்தாள்.

''பெண் ரொம்ப சாதாரண இடம்தான். நம்ம பாஷை பேசறவ கூட இல்லே. கன்னடத்துப் பெண்.'' அவன் சொல்லச் சொல்ல, அருணா இடிமேல் இடி விழுந்ததைப் போல், நடுங்கி உறைந்து போய்விட்டிருந்தாள்,

''அப்பா கிட்டவும், உங்க கிட்டவும் சொல்லிடணும்னுதான் புறப்பட்டு வந்தேன். அதுக்கு முன்னே பெரியப்பாகிட்டே ஆலோசனை கேட்கலாம்னு போனேன். அவர் ரொம்பத் தயங்கினார். கடைசியில் அவரை இங்கே அழைத்துக் கொண்டு வந்து அப்பா கிட்டே பேசச் சொல்லலாம்னு ஏற்பாடு செய்துட்டு வந்தேன்.'' அருணாவின் கோபம் கட்டுக்கடங்காமல் பெருகி சீற்றமாக வெடித்தது.

''அந்தக்கிழவன்கிட்டே யோசனை கேட்கப் போறியாக்கும்! யார் குடியைக் கெடுக்கலாம்னு யோசிக்கிற மனுஷராச்சே? ஏதோ, தம்பி கஷ்டப்பட்டு ரெண்டு காசு சேர்த்து வைத்துக் கொண்டு முன்னுக்கு வரட்டும். அவன் பெத்த குழந்தைகள் பெரிய இடத்தில் கல்யாணம் செய்து கொண்டு அமோகமா வாழட்டும்னு நினைக்காமே, எதுக்காக இப்படியெல்லாம் கெட்ட புத்தி அவருக்கு. அவர்களுக்குத்தான் வம்சம் அற்றுப் போச்சு. தம்பி குழந்தைகளாவது நன்னாயிருக்கட்டும்னு நினைக்காமே உங்க மனசைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்க உதவி வேறே செய்கிறாரா?''

''அம்மா! ப்ளீஸ்! பெரியப்பாவைக் கண்டபடி பேசாதிங்கோ.''

''பேசத்தான் செய்வேன். என் பெற்ற வயிறு எரியறதுடா. வீட்டைவிட்டுத் தொலைஞ்சாலும், இன்னும் தம்பி குடும்பத்தில கலகம் விளைவிக்கணும்னு அலையறாரே அந்தக் கிழவர்...''

''அம்மா! பெரியப்பாவா வந்து நம்ம குடும்ப விஷயத்தில் தலையிடலே, ஐஸ்வர்யா கல்யாணம் அவர் நிறுத்தியிருந்தால் கூட நடந்திருக்கும். தெரியுமா?'' என்று அதட்டினான் மகன்.

''ஏன்? எங்ககிட்டே அவ காதல் விவகாரம் பற்றி ஒரு கோடி காட்டியிருந்தால் விட்டிருப்போமா? எப்படியாவது அவளை மனசை மாத்தி இருக்க மாட்டோமா?'' சவாலாகக் கூறினாள் அருணா.

''இது மனசு பத்தின விஷயம். புடவை, நகை மாதிரி இல்லேம்மா, நீங்க நினைக்கிறபடி, ஐஸ்வர்யா சின்னப் பாப்பாவா... அவளே ஓடிப்போய் ஒரு 'ரெஜிஸ்தர் மேரேஜ்' பண்ணிக் கொண்டு வந்திருப்பா. ஊர் சிரிச்சுப் போயிருக்கும். பெரியப்பா அதைச் சரி செய்து நாமாகக் கொடுக்கிற மாதிரி கல்யாணம் செய்து வச்சாரே அது தப்பா?''

''நீ சொல்ல மாட்டியா அஸ்வத்! ஏன்னா, இப்ப நீயும் அதையே செய்யப் போறதா பயமுறுத்த வந்திருக்கே. அதுக்காகப் பெரியப்பாவைப் பக்கபலமா சேர்த்துக் கொண்டு இருக்கே.'' அருணாவின் கண்களில் நீர் பெருகியது.

''எனக்குப் பிடிச்ச பெண்ணை நான் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படறேன். அதுக்காக, உங்களைக் கவனிக்கிற கடமையிலிருந்தோ, உதவி செய்கிற நோக்கத்திலிருந்தோ நான் வழி மாற மாட்டேன். அப்பாகிட்டே எனக்காகச் சிபாரிசு செய்து, நான் மனதார விரும்பியவளை நாட்டுப் பெண்ணாக ஏற்றுக் கொண்டு ஆசீர்வதிக்கணும்னு கேட்கத்தான் வந்திருக்கேன்'' அஸ்வத் அழுத்தமாகக் கூறினான்.

''அதற்கு மறுபடியும் அந்தக் கிழத்தைத் தரகு வேலைக்குக் கூப்பிடப் போனியாக்கும்.'' துயரம் வெடிக்கும் குரலில் கேட்டாள் அருணா.

கோபத்துடன் முகமெல்லாம் சிவக்கத் தாயை ஏறிட்டுப் பார்த்தான் அஸ்வத்.

''தயவு செய்து அவரைத் தரகர் அப்படி இப்படின்னு சொல்லாதிங்கோ. நாங்களாகப் போய்க் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் இசைஞ்சிருக்கார். உங்ககிட்டே ரொம்ப நாட்களாகவே நான் கேட்கணும்னு

இருந்தேன். அம்மா! இப்பக் கேட்கட்டுமா?"

"இனிமேல் கேட்பதற்கு என்ன இருக்கு? தாராளமாய்க் கேளேன்" என்ற முகபாவத்தோடு அருணா வீற்றிருந்தாள்.

மகன் பெரிய படிப்பு, பதவியில் இருக்கிறான். கண்ணுக்கு லட்சணமான மருமகள், காரும், பங்களாவுமாக வருவாள் என்ற பிரும்மாண்டமான மனக்கோட்டை தூள், தூளாகி விட்ட பிறகு, அவன் எதைக் கேட்டால் என்ன? எல்லாம் ஒன்றுதான் என்ற விரக்தி நிலையை எய்தியிருந்தாள்.

பெற்றதெல்லாம் பிள்ளையாவதில்லையே? இவன் மட்டும் என்ன விதிவிலக்கு. அவள் ஒருத்தி மட்டும், அந்த வீட்டில் அந்தஸ்து, கௌரவம் என்று நிலைநாட்டப் பாடுபட்டுக் கொண்டிருப்பதால் என்ன பயன்? தொண்டையைத் துயரம் அடைக்க, உதடுகளை அழுந்தக் கடித்தபடி மகனைப் பார்த்தாள்.

"சின்ன வயசில் எங்க நினைவுக்குத் தெரிஞ்சவா பெரியப்பாவும், பெரியம்மாவும்தான்."

அவளுக்கு அழுகையும், ஆத்திரமும் பீறிட்டன. "ஆமாண்டாப்பா. அவர்தான் உங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கினவர். நாங்களாம்..."

"பெற்றுவிட்டால் மட்டும் அம்மா அப்பா ஆகிட முடியாதும்மா."

"என்னடா சொல்றே? உங்கப்பா உங்களைப் பெரிய கான்வெண்ட் படிப்பு. மேல் படிப்புன்னு படிக்க வக்கலே? விதம், விதமா துணி வாங்கித் தரலே... நீ என்ன ஆகாசத்தில இருந்து அப்படியே பெரிய மனுஷனா குதிச்சிட்டியா? இல்லே உங்க அழகான பெரியப்பாதான் பெரியவனாக்கினாரா?"

"அம்மா! எங்களை உசத்தியான கான்வெண்ட்ல படிக்க வச்சேள். இல்லேன்னு சொல்லலே. ஆனா எதுக்கு...?"

"எதுக்கு?"

"ஊரில் இருக்கிற பெரிய மனுஷா வீட்டுக் குழந்தைகள் படிக்கிற இடம்னு நினைக்கிற பெருமைக்காக. நல்ல துணி மணி, பங்களா, கார் எல்லாமே பிறர் மெச்சணும்னு நீங்க பாராட்டிக்கிற போலிக் கௌரவத்துக்காக. மிஸ்டர் கணேசன் குழந்தைகள். பெரிய அதிகாரி வீட்டுப் பெரிய மனுஷக் குஞ்சுகள்னு மத்தவா மரியாதை செலுத்தணும்னு பகட்டாக எங்களை வாழச் சொன்னேள். கையில் மாசம் பொறந்தா காசு. டக்காக டிரஸ். இஷ்டம் போல் வசதி."

"இதைவிட என்ன செஞ்சிருக்கணும்?"

"ஒண்ணு மட்டும் செய்யலே."

"என்ன உளர்றே?" தாடை இறுகியது அவளுக்கு.

"அன்பு செய்யத் தவறிட்டேள். உங்களுக்குத் தேவை அழகான, பகட்டான இரண்டு பொம்மைகள். அதுகளோட கொஞ்சி, மகிழவோ, கையைப் பிடிச்சு சந்தோஷமா வெளியே அழைச்சுப் போகவோ நேரமே இருந்ததில்லே. எங்க பெரியம்மாவும், பெரியப்பாவும் பணக்காரா இல்லே. அவர்கள் கிட்டே அன்பு நிறைய இருந்தது. அதைக் கொட்டி எங்களை வளர்த்தார்கள். அதனாலே நாங்க பணவசதி இருந்தும், மத்த பசங்களைப் போல் போதைப் பொருளுக்கு அடிமையாகாமல், அவாளோட அன்புக்கு அடிமைப்பட்டு வீட்டுக்கே ஓடிவந்திண்டிருந்தோம். அவா கொடுத்த அன்பு உரம்தான் இதுநாள் வரை எங்களை உறுதியோடு வாழ வைச்சுது. இல்லாட்டா, எங்க வாழ்க்கை தறிகெட்டு எப்படியெல்லாமோ போயிருக்கும். புரிஞ்சுக்கொள்ளுங்கோ. அதனால் அந்தப் பெரியப்பாவை ஆலோசனை கேட்கிறதுல என்ன தவறு?" என்று உறுமினான் அஸ்வத்.

அருணா அசைவற்றுப் போனாள்.

(தொடரும்)

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil weekly newspaper, are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication: Madras
2. Periodicity of Publication: Weekly
3. Name of Printer: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040.
4. Name of Publisher: V. Vaidyanathan
   Nationality: Indian
   Address: 6-A, Warren Road,
   Madras-600 004.
5. Name of Editor: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Fifth Street,
   Lake Area,
   Nungambakkam,
   Madras-600 034.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital: Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras-600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V.Vaidyanathan,
1.3.1986 Publisher.

கின்னுக் கீரையல்ல!

70 கிலோ வாழைப்பழத்தில் கிடைக்கக் கூடிய வைட்டமின் — A சத்து ஒரு கிலோ முளைக்கீரையில் கிடைத்துவிடுகிறது. ஒரு கிலோ அகத்திக் கீரையில் உள்ள சுண்ணாம்புச் சத்தைப் பெற வேண்டுமானால் 113 கிலோ ஆப்பிள் சாப்பிட வேண்டும். ஒரு கிலோ அரைக் கீரையில் உள்ள இரும்புச் சத்தைப் பெற வேண்டுமானால் 32 கிலோ அன்னாசிப் பழம் சாப்பிட வேண்டும்.

—'நம் நாட்டுக் கீரை வகைகள்' என்ற நூலிலிருந்து:

ஆர். அரிகோபி.





"உங்க கடையில் 'காட்பரீஸ்சாக்லெட்' இருக்கா?"

"இருக்கு."

"'ஜெம்ஸ்' இருக்கா?"

"இருக்கு."

"'மில்க் பிகீஸ்' இருக்கா?"
"இருக்கு. உனக்கு எது வேணும்?"

"'பத்து பைசா கடலை உருண்டை' ஒன்று கொடுங்க!"

"இந்தக் கண் டாக்டருக்குத் 'தான்' என்ற எண்ணம் ரொம்ப அதிகம்!"

"எப்படிச் சொல்றே...?"

"'I' ஸ்பெஷலிஸ்ட்னு போர்டு போட்டு இருக்காரே!"

— கடுவை கோபால்சாமி.





"ஃபேனில் உட்கார்ந்திருந்தும் உங்களுக்குப் புழுக்கமா இருக்குன்னு சொல்றீங்களே, ஏன்?"

"அதை வாங்கின விலையை நினைச்சாப் புழுக்கமா இல்லாம வேறு என்ன செய்யும்?"

—மன்னை சந்திரா.

வாக்குறுதி அளித்தது 20 கிலோ; கொடுக்கும் அரிசியோ 6 கிலோ!

"நீங்கள் உங்கள் மேலான வாக்குகளை எங்களுக்கு அளித்தால் நாங்கள் பதவியில் அமர்ந்ததும் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்பம் ஒன்றுக்கு மாதம் 20 கிலோ அரிசியும், 1 கிலோ இனாமாகவும் தருவோம்" என்று அ.தி.மு.க.வினர் பிரசாரம் செய்தார்கள். இன்று நிலைமை என்ன? குடும்பக் கார்டு ஒன்றுக்கு ஒரு மாதத்துக்கு 6 கிலோ அரிசி மட்டும் கொடுத்து வருகிறார்கள். வெளி மார்க்கெட்டில் கிலோ அரிசி ரூ 5 க்கு விற்கப்படுகிறது. இதனால் ஏழை எளியோர் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

— வி. கே. துரைசாமி, திருச்சி — 5.

டி. வி. க்கு யோசனை!

சென்னை டி.வி. நிலையம் துவங்கப்பட்டு, பத்து ஆண்டுகளாகின்றன. ஆனால் டி.வி.யில் இதுவரை 'புத்தக விமரிசனங்கள்' இடம் பெற்றதில்லை. இது தமிழ் இலக்கிய உலகுக்குப் பெரும் அவமதிப்பாகும். வானொலி நிலையத்தினர் இலக்கிய நூல்களுக்கு மதிப்பளித்து புத்தக விமரிசனங்களை அளித்து வருகின்றனர். இதனைப் பின்பற்றி டி.வி.யிலும் 'புத்தக விமரிசனங்கள்' சிறந்த முறையில் இடம் பெறச் செய்யலாமே?

— கிங்லி அஹ்மது, சென்னை — 1.

ஆதங்கம் வேண்டாம்!

9.2.86 கல்கி 'வாசகர் குமுறல்' பகுதியில் திருமதி காமாட்சி சந்திரசேகர் எழுதியிருந்ததைப் படித்தேன்.

பம்பாயில் தமிழ் படிக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுபவர்கள், தங்கள் குழந்தைகளைப் பம்பாய்த் தமிழ்ச் சங்கம், சயானில் நடத்தும் தமிழ் இலவச வகுப்புகளுக்கு அனுப்பித் தமிழ் பயிலச் செய்யலாம். வாரத்தில் ஒருநாள் அதுவும் ஞாயிற்றுக் கிழமைகளில் பகல் ஓரிரு மணி நேரம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதனால் ஸ்கூல் ஹோம் வொர்க் பாதிக்கப்படுவதில்லை. என் மகள் கூட இந்த ஆண்டு இவ்வாறு படித்துத் தேறியுள்ளாள். இதுபோன்ற வகுப்புகள் செம்பூர், காட்கோபர் மற்றும் சில இடங்களிலும் நடந்து வருவதாக அறிகிறேன்.

— கமலா சிவராமன், பம்பாய் — 19.

மண் குதிரையை நம்பி...

கடந்த மாதம் சென்னையிலிருந்து ரயிலில் ஜோலார்பேட்டை வந்து சேர்ந்தபோது நடு இரவு ஆகிவிட்டது. அங்கிருந்து திருப்பத்தூர் வர அப்போது பஸ் இல்லாத காரணத்தால் ஒரு டாக்ஸியை அழைத்தோம். டிரைவர் ரூபாய் 50 கேட்டு முடிவில் 25 ரூபாய்க்கு ஒப்புக் கொண்டு முன்னதாகப் பணத்தை வாங்கிக் கொண்டார். டாக்ஸி பாதி வழி வந்ததும் நின்றுவிட்டது. டிரைவர், இறங்கி முன் பானெட்டைத் தூக்கிப் பார்த்துவிட்டு, "வண்டி ரிப்பேர்; இறங்கிக் கொள்ளுங்கள்" என்றார். இறங்கிவிட்டோம். பிறகு டிரைவர் உட்கார்ந்து ஸ்டார்ட் செய்தார். வண்டி ஸ்டார்ட் ஆகிவிட்டது. நாங்கள் ஏற முயன்ற போது டிரைவர் தடுத்தார். கேட்டதற்கு, "நீங்கள் கொடுத்த 25 ரூபாய்க்கு உரிய தூரத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டேன். இனி நீங்கள் குறித்த இடம் போக வேண்டுமானால் இன்னும் 25 ரூபாய் கொடுங்கள். அல்லது வேறு வண்டி பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார். நடு இரவில் வீடுகளே இல்லாத நடுவழியில் பெண்களையும், குழந்தைகளையும் வைத்துக் கொண்டு சமாளிக்க முடியாமல், டிரைவருடன் இனி விவாதித்துப் பயன் இல்லை என்று மேலும் 25 ரூபாய் கொடுத்து வீடு வந்து சேர்ந்தோம்.

— வி. ரங்கநாதன், கதிரிமங்கலம்.

சான்றிதழ்தராமல்பட்டமளிப்பு விழா

ஹிந்தி பிரசார சபாவில் பட்டமளிப்பு விழா 1.2.86 அன்று நடந்தது. வந்திருந்த மாணவ மாணவிகளில் சிலருக்குத்தான் சால்வையும் சான்றிதழ்களும் கிடைத்தன. சிலருக்குக் கிடைக்கவில்லை. கேட்டதற்கு, 'சால்வை தீர்ந்துவிட்டதால் இப்பொழுது கொடுக்க முடியாது' என்றார்கள்! சிலருக்கு சான்றிதழ்களை வைக்கும் மேல் உறைகூடக் கொடுக்காமல் இருந்தனர். வெளியூரிலிருந்து வந்த பலர் சால்வையும், நற்சான்றிதழ்களும் கிடைக்காமல் மன வருத்தத்துடன் திரும்ப வேண்டியிருந்தது. கேட்டால் தபாலில் வரும் என்றார்கள். சால்வையும், சான்றிதழ்களும் தயார் செய்துவிட்டு, எங்களை அழைத்துக் கௌரவித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே!

— எஸ். விஜயா, சென்னை — 31.

CUCKOO IN THE DARK FOREST என்ற செக்கோஸ்லோவாக்கிய படம். ஜெர்மன்நாஜிப்படையினரின்கொடுமைகளை அப்பட்டமாகச் சித்திரிக்கும் படம். எமிலிகாவாக நடித்த மீரோஸ்லாவா கக்கோவா ஒரு கவிதையைப் படைத்துப் படத்தைஒவ்வொருஃப்ரேமிலும்நிறைக்க என்ன கைதட்டல்! என்ன கைதட்டல்! அந்தக் கொடுமைக்கார ஜெர்மன் அதிகாரியின் உள்ளத்தில் இந்த எமிலிகாவின் மேல் சுரக்கும் பாசத்தை வெகு அற்புதமாக வெளிக் கொணர்ந்த டைரக்டர் அன்டோனின் மோஸ்காலிக் பாராட்டுக்குரியவர்.

எமிலிகாவிற்கு அந்த ஓசை தெளிவாகக் கேட்டது.

துப்பாக்கிகள் வெடித்த சத்தம். ஆகாயத்தில் போர் விமானங்கள்.

எமிலிகாவிற்குப்பயமாய் இருந்தது. போர் நம் ஊருக்குள்ளேயே வந்துவிட்டதா என்ன? அந்த மூங்கில்கள் நிறைந்த காட்டிலிருந்து சீக்கிரம்வீட்டை அடைந்துவிடும்வெறியுடன் ஓடினாள்.

வீட்டை நெருங்கும்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டாள்.

''ஏய் ஓடாதே....'' என்று ஒரு போர் வீரன் உறும, முதுகு காட்டிய வண்ணம் அந்த ஆசாமி ஓடினான். இயந்திரத் துப்பாக்கிகள் ப! படவென்று குண்டுகளை உமிழ்ந்து, ஓடிய ஆசாமியின் முதுகில் ஓட்டை! ஓட்டைகள்!! ரத்தக் கோலம். அந்த ஆசாமி நிலை தடுமாறி, மடங்கி, மெல்லக் கீழே சரிய அவனது நீலச் சட்டை முழுக்கச் சிகப்பு ரத்தம்!

'அப்பா' — அழைக்கக்கூட முடியாமல் எமிலிகா திகைத்துப் போனாள். அவள் கண்ணெதிரே அவளுடைய தந்தையின் படுகொலை.

ஜெர்மனியின் நாஜிப் படை வீரர்கள் எமிலிகாவின் வீட்டில் புயல் போல் நுழைய, எமிலிகா அவர்கள் பின்னால் தானும் நுழைந்தாள்.

துப்பாக்கியின் பின் பக்கம் முரண்டு பிடித்த அம்மாவைச் சுவை பார்த்தது.

''அம்மா'' என்று அலறினாள் எமிலிகா.

''எமிலிகா......

அம்மாவின் கைகளில் விலங்கு மாட்டப்பட, ஒரு வீரன் அவளை உந்தித் தள்ளினான். சில விநாடிகளுக்கு முன்வரை சுதந்திரமாய் இருந்த அம்மா, இப்போது ஒரு போர்க்கைதி.

அம்மா'' என்று மீண்டும் அலறினாள்.

''எமிலிகா....'' என்று மகளின் கையைப் பிடித்தாள் அம்மா. எமிலிகாவின் உள்ளங்கையில் வெகு ரகசியமாக, தன் நினைவாக, இரண்டு தோடுகளைப் பூப்போல் வைத்தாள் அம்மா.



எமிலிகாவிற்காக வேறு ஒரு வேன் காத்திருந்தது. அனாதைக் குழந்தைகளின் முகாமிற்கு அழைத்துப் போவதற்காக!

அனாதை முகாம்!

மாசு மருவில்லாத துருதுரு கண்களை உடைய ஏகப்பட்ட செக்கோஸ்லோவாக்கிய குழந்தைகள். அனாதைக் குழந்தைகள். அப்பா மறந்து, அம்மா மறந்து ஆகாரத்திற்காக தட்டை ஏந்தி க்யூவில் வர, முகாமின் தலைவிப் பிசாசு, மிரட்டி மிரட்டியே குழந்தைகளை, அவற்றின் வாழ்க்கை முறைகளைத் தன் இஷ்டத்திற்கு வளைத்துக் கொண்டிருந்தாள். அப்படித்தான் அன்றைக்கு அவள் 'தூங்கும் தேவதை' நாடகத்தைக் குழந்தைகள் நடத்திக் காட்ட வேண்டும் என்று ஆணையிட்டாள்.

மூடிய கண்ணாடிப் பெட்டியினுள், மிக அழகான, உன்னதமான ரோஜா பனி நிறங்கொண்ட சின்னத் தேவதை எமிலிகா கண்களை மூடியிருந்தாள்.

அப்போதுதான் அவளை அந்த ஜெர்மன் படை அதிகாரி பார்த்தான்.

தங்க இழைகளால் ஆன கூந்தல். செதுக்கி வைத்தாற்போல் இருந்த நீள மூக்கு. ரோஜாக்கள் பூத்த கன்னங்கள். எட்டு வயது சொர்க்கம். அந்தக் கணமே அவன் தீர்மானத்திற்கு வந்தான்.

அனாதை முகாம் தலைவியை அழைத்து, அந்தக் குழந்தையைக் காட்டினான்.

''இவள் எனக்கு வேண்டும்.''

''மாவீரன் ஹிட்லர் நீண்ட நாட்கள் வாழ்வதாக! அழைத்துச் செல்லுங்கள் மிஸ்டர் ஒட்டோ!''

''ஐம்பது மார்க் இந்த அனாதை விடுதிக்கு என் அன்பளிப்பாகத் தருகிறேன்.''

''சரி மிஸ்டர் ஒட்டோ.''

''**ஃப்**ரீடா, ஃப்ரீடா.... இங்கே வந்து பார். நம் குழந்தையை....'' என்றான் ஒட்டோ.

ஃப்ரீடா சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு வந்து எமிலிகாவைப் பார்த்தாள். அணு அணுவாக. உச்சியிலிருந்து பாதம் வரை. கண்கள் வெறுப்பை உமிழ்ந்தன.

''நான் கேட்டது என் உதிரத்திலிருந்து, என் உடலில் இருந்து உதிர்ந்த என் சொந்தக் குழந்தையை. இந்தக் குழந்தை யாருக்கு வேண்டும்'' என்றாள். திருப்பிக் கொண்டு போய் விட்டாள்.

ஒட்டோ, எமிலிகாவை உள்ளே வழி நடத்திச் சென்றான். வேலைக்காரியை அழைத்தான். ''என்ன செய்வாயோ, எனக்குத் தெரியாது. இவளைச் சுத்தமாகக் குளிப்பாட்டு. அழுக்குத் தீரத் தேய்த்துவிடு. ஒரு ஜெர்மன் குழந்தையாக மாற்றி என்னிடம் அழைத்து வா'' என்றான். எமிலிகா உள்ளே செல்வதை வாஞ்சையுடன் நோக்கிக் கொண்டிருந்தான்.

குளித்துவிட்டு வந்தவுடன் ஃப்ரீடா மறுபடி எமிலிகாவை நெருங்கினாள்.

''உன் பெயர் என்ன?''

எமிலிகா தயங்கினாள். லேசாகப் பயந்தாள். புதுஊர். புதுமனிதர்கள். புதுவாழ்க்கை எதுவுமே அவளுக்குப் பிடிக்கவில்லை. அம்மா தான் வேண்டும். எமிலிகா உள்ளங்கையில் விடாமல் வைத்திருந்த தோடுகளை அழுத்தினாள்.

''எமிலிகா'' என்றாள் ரகசியமாக.

''இந்தப் பெயர் எனக்குப் பிடிக்கவில்லை. அது என்ன கையில்? ம். காட்டு.''

எமிலிகா காட்ட, ஃப்ரீடா அதை வாங்கி வேலைக்காரியிடம் தந்தாள். ''உன்னுடையது என்று தனியாக உன்னிடம் எதுவுமே இருக்கக் கூடாது.''

''இவளை இனிமேல் குக்கூ என்று அழைக்கப் போகிறேன்'' என்றான் ஒட்டோ. 'குக்கூ... குக்கூ....' சொல்லிப் பார்த்துக்கொண்டான். இனிமையாக, நுனி நாக்கில், பனித் துளியை வைத்ததுபோல் இருந்தது அவனுக்கு.

''வா.... பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுகிறேன்.''

ஆசிரியர் சற்றே வயதானவர். துடிப்பான ஜெர்மானியக் குழந்தைகளின் இடையே நடந்துகொண்டே அவர் கேட்டார்.

இருண்ட காட்டில் ஒரு குயில்

திரைவிழாப்
படக்கதை — 5

"நமக்கு மொழியைக் கற்றுக் கொடுத்தது யார்?"

ஒரு பையன் சட்டென்று எழுந்து சொன்னான். "அடால்ஃப் ஹிட்லர்."

அந்தப் பதிலை அவரால் எதிர்க்க முடியவில்லை. "அது சரிதான்.... ஆனால் நமக்கு மொழியை முதன்முதலில் கற்றுக் கொடுத்தது யார்?"

"அம்மா" என்றாள் எமிலிகா. மற்றப் பையன்கள் அவளை எரித்துவிடுவதுபோல் பார்த்தார்கள்.

அன்றைக்கு மாலை பள்ளிவிட்டு வருகையில், எமிலிகாவைக் கீழே தள்ளி, அடித்து, மண்ணை வாரி இறைத்து....

"இதெல்லாம் யார் செய்த வேலை?" என்று இரைந்தான் ஒட்டோ.

ஏமிலிகா அழுது கொண்டே, பயந்து கொண்டே விவரத்தைச் சொல்ல, "பயப்படாதே..... நாளைக்கு நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் ஒட்டோ.

மறுநாள் எமிலிகாவைக் கிண்டல் செய்த பையன்களை எல்லாம், ஒட்டோவின் நாய் மட்டுமின்றி ஒட்டோவின் கீழே பணி புரியும் காவலாளிகளும் கதறக் கதறத் துரத்தியடித்தனர்.

ஒட்டோ ஆசிரியரைச் சந்தித்தான். "எப்படி என் குக்கூ?"

"குக்கூ மிகத் துடிப்பான பெண் மிஸ்டர் ஒட்டோ. இந்த மாதிரியான ஒரு புத்திசாலிக் குழந்தையைச் சந்தித்ததில் மிக சந்தோஷம் அடைகிறேன்."

"என் குக்கூ எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற வேண்டும். அவள் மாபெரும் சக்தியாக உருவாக வேண்டும். எல்லாக் கலைகளையும் கற்றுத் தரவேண்டும். முதலில் அவளுக்குப் பியானோ வாசிக்கக் கற்றுக் கொடுங்கள். என்ன சரிதானே?"

"சரிதான் மிஸ்டர் ஒட்டோ."

அவனே எமிலிகாவிற்குத் துப்பாக்கி சுடப் பயிற்சி அளித்தான். நீச்சலில் தேர்ச்சி பெற நீந்தவிட்டான். அவனுடைய குக்கூ எல்லாரையும் விட மேல் என்று மாற வேண்டும்.

ஒட்டோ போர்க் கைதிகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருக்க, ஒரு கைதி மட்டும் நொண்டி நொண்டி நடந்து வேலைகளைச் செய்தான். ஒட்டோ அவன் எதிரில் நின்றான்.

"உன் பெயர் என்ன?"

"அண்டனி ஜோஸப்."

"என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"கண் டாக்டராக இருந்தேன் காப்டன்."

"ஏன் போர்க் கைதி ஆனாய்?"

"ஒருகைதிக்குரொட்டிகொடுத்தகாரணத்திற்காக காப்டன்!"

"ஏன் நொண்டுகிறாய்?"

"இந்தக் கைதிக்கு உங்கள் வீரர்கள் கொடுத்த பரிசு."

"சரி, இனிமேல் நொண்ட மாட்டாய்" என்றான் ஒட்டோ. அவன் விரல் துப்பாக்கியின் குதிரையை இழுக்க...

அந்த நொண்டிக் கைதி சுருண்டு விழுந்து செத்துப் போனான்.

உள்ளேயிருந்து பியானோவின் இசை. ஒட்டோ வெகு ஆவலுடன் அறை வாசலுக்கு வந்து நின்றான். அவனுடைய குக்கூ வெகு முனைப்புடன் பியானோ வாசித்துக் கொண்டிருக்க, ஒட்டோ உலகமே தன் கைக்குள் வந்துவிட்டாற்போல் சந்தோஷப்பட்டான்.

"ஒட்டோ" என்றுகுரல்கேட்டது. திரும்பினான். முகத்தில் ஏகப்பட்ட கோப ரேகைகளுடன் ஃப்ரீடா.

"ஆனாலும் அந்த செக் பெண்ணிடம் உனக்கு அலாதி பிரியம். உன் உயிரே அவள் தான் என்பதுபோல. நீ ஓர் இனத்துரோகி!"

ஒட்டோ தன் நொண்டி மனைவியை அலட்சியப்படுத்தினான். கைதிகள் முகாமிற்குமேற்பார்வை இடுவதற்காகப்போனான்.



ஹைதராபாத் நவாப் ஸ்டைல் விருந்து எப்படி என்று தெரியுமா உங்களுக்கு? ஒரு குட்டையான மேஜை. அதைச் சுற்றி எட்டுப் பேர் தரையில் உட்கார்ந்து கொள்ளலாம். மேஜையில் உணவு வகைகள். நாவில் சுரக்கும் நீர். அப்புறம் என்ன வெட்ட வேண்டியதுதான். N.F.D.C. காரர்கள் இந்த பாணியில் ஒரு விருந்தை பத்திரிகையாளர்களுக்காக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஒரு பக்கம் புகழ் பெற்ற வித்வான்கள் கவாலிப் பாடலைப் பாட, ஒரு பக்கம் விருந்து.

அந்த இரவு நேரம். ஆகாய நட்சத்திரங்கள். புல்வெளி. அந்த அனுபவம் அட்டகாசம்தான். படத்தில் ஆந்திர முதல்வர் N.T.R. அந்த விருந்தை ஏற்கும் காட்சி!

செல்வாக்கு

சூழ்நிலை, ஒரு கல்லூரி. எனவே அதற்கான தும்மாளம். கூத்தடிப்பு. ஆனால் இளமை துறந்த சில மாணவ மணிகளும் தென்படும்போது கொஞ்சம் உறுத்தல்.

கிராமத்தில் அப்பா அம்மா கஷ்டப்பட்டு (வீட்டை விற்கும் வரை வந்து) நகரத்துக் கல்லூரியில் படிக்கும் மகனுக்குப் பணம் அனுப்பி வைக்க, அவன் தன் அரசியல் தலைவருக்கு அதைத் தாரை வார்த்துவிட.....

புரிந்திருக்குமே? சமூக அவலங்களைச் சாடும் பச்சை மிளகாய்க் கதை. அப்பா அம்மா பேச்சைக் கேட்காமல் ரொம்ப மாடர்னாய் இருக்க முற்பட்டால் கற்பிழந்து, சிவப்பு விளக்குப் பகுதியில் போய் வாழ்க்கை முடியும் என்று இளம் பெண்களுக்கு ஓரமாய் ஒரு பயமுறுத்தல் கதையும் உண்டு!

சுலக்ஷணாவின் மீது கோபத்தோடு வெற்றிலை எச்சிலைத் துப்புகிறார் சந்திரசேகர். அந்தக் கல்லூரிக் காட்சி வித்தியாசமான ஒன்று. மகளின் மீது துப்பியவனை நோக்கிச் செந்தாமரை ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்து நடந்து வர, என்ன செய்யப்போகிறாரோ என்று கலவரத்துடன் சந்திரசேகர் பார்க்கிறார். "நானும் உன் வயசிலிருந்த போது இந்த மாதிரி தான் துள்ளினேன், தம்பி. ஆனா இப்ப என் மகளை இந்த நிலைமையில் பாக்கறப்போ துடிக்கிறேன். நாளைக்கு உனக்கு ஒரு மகள் பிறந்து அவளை நீ இப்படி பார்த்தாத்தான் உன்னால் உன் தவற்றை உணர முடியும்" என்று வெகு இயல்பாய்ச் சொல்வது நாசூக்கான சவுக்கடி.

கொலைகாரனுக்குச் சாதகமாய்ப் பொய் சாட்சி சொல்ல சினிமாக்காரர்களுக்கு மந்திரிகளை விட்டால் ஆள் கிடைக்காது போல. இந்தப் படத்தில் நாவேந்தர் நடராசனாய் ராதாரவி. பதவி கிடைக்கும் வரை கைகூப்பி அடக்கவொடுக்கமான கும்பிடு என்ன, கட்சி மாறி மந்திரியானதும் தெனாவட்டாய் நடந்து கொள்ளும் விட்டேற்றித்தனம் என்ன, நம் கண்ணெதிரே நடமாடும் சில அரசியல்வாதிகள் நினைவுக்கு வருகிறார்கள்.

சந்திரபோஸ் இசை இதமாயிருக்கிறது.

கதாநாயகனாய்(?) வரும் சத்தியனுக்கு முக பாவங்களும், கோர்ட் காட்சிகளில் எம்.ஏ. காஜாவுக்கு இன்னும் நறுக் வசனங்களும், கல்லூரி மாணவி சுலக்ஷணாவிடம் துறுதுறுப்பும் ஒத்துழைத்திருந்தால் செல்வாக்கிற்கு இன்னும் செல்வாக்கு இருந்திருக்கும்.

— ஜெயமன்மதன்.



சமூக அவலங்களைச் சாடும் பச்சை மிளகாய்க் கதை!

எமிலிகா தனிமையில் இருந்தபோது மறுபடி அந்தப் பழைய ஓசை கேட்டது. துப்பாக்கிகளின் உறுமல்கள். ஆகாயத்தில் விமானங்கள்.

எமிலிகா ஆகாயத்தைப் பார்க்கும் போதே விமானங்கள் தடதடவென்று குண்டுகளைப் பொழிந்தன.

ஜெர்மனியப் படைகளை நாசம் செய்ய வந்த விமானங்கள்!

போரின் திசை அவ்வளவு சீக்கிரம் திரும்பிவிட்டதா? நாஜிகளின் கொட்டம் அடங்கப் போகிறதா? குண்டு ஒன்று இந்த வீட்டின் மீதும் விழ.... வீடு இடிந்து சரிய ஆரம்பித்தது.

எமிலிகா அவசர அவசரமாக மாடியிலிருந்து கீழே இறங்கினாள்.

ஃப்ரீடாவை பயம் டண்டன்னாகப் பற்றியிருந்தது.

"குக்கூ...." என்று அழைத்தாள்.

எமிலிகா பதில் சொல்லாமல் அவளை விட்டு விலகினாள்.

"குக்கூஊஊஊ.... என்னை அழைத்துப் போ."

எமிலிகா இன்னும் விலகினாள்.

ஃப்ரீடாவின் மேல் ஒரு சிறு கல் விழுந்தது. அதிர்ந்தாள். எழ முயன்றாள். மூளையில் ஏதோ ஒரு நரம்பைச் சுண்டியிழுத்த மாதிரி இருந்தது. கை, கால்கள் சட்டென்று இழுத்துக் கொள்ள, வாய் கோணிக் கொள்ள.... ஃப்ரீடா அப்படியே நாற்காலியில் சரிந்தாள்.

எமிலிகா ஓட்டோ இருக்கும் இடத்தை நோக்கி ஓடினாள்.

வெளியே இன்னும் குண்டு மழை பொழிந்து கொண்டேயிருந்தது.

ஓட்டோ வீடு என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை அறியாதவனாய்ப் போர்க் கைதிகளை விரட்டிக் கொண்டிருந்தான். கையில் துப்பாக்கியை எடுத்தான்.

''ஓடு'' என்றான். கைதி கிடு கிடு கிடு கிடு என்று ஓட, குறி பார்த்துச் சுட்டான் ஓட்டோ.

''டாடீ.....'' என்று அழைக்க இருந்த எமிலிகா அந்தக் காட்சியைப் பார்த்து உறைந்து போனாள்.

சடக்கென்று திரும்பி ஓடத் தொடங்கினாள்.

ஓட்டோ அப்போதுதான் அவளைக் கவனித்தான்.

''குக்கூ'' என்று கத்திக்கொண்டு பின்னால் ஓடி வரத் தொடங்கினான்.

திடீரென்று நிலைமை மோசமாகியிருந்தது.

ஜெர்மனியின் கை தாழ்ந்து போயிருக்க, ஓட்டோ தன் நிலைமை சில மணி நேரங்களில் மிகக் கேவலமாகிவிட்டதை உணர்ந்தான்.

யாவற்றுக்கும் மேலாக எதிரிகளிடமிருந்து தப்பிப் போகும் ஆசைதான் பிரதானமாக எழுந்தது. யூனிஃபார்மை வீசி எறிந்தான்.

வீட்டில் இருந்த நகைகளை பணத்தை எல்லாம் வாரி எடுத்துக் கொண்டான். எமிலிகாவை, அவனுடைய குக்கூவைப் பத்திரமாகப் பற்றிக் கொண்டான்.

ஃப்ரீடாவை இரக்கமின்றிப் பார்த்தான். சமையலறையில் தள்ளினான். ''மூன்று மாதத்திற்குத் தேவையான உணவு இங்கே இருக்கிறது ஃப்ரீடா. உன்னை நீயே கவனித்துக் கொள்'' என்றான்.

ஃப்ரீடா மறுமொழி அளிக்கவில்லை. அவள் அப்படி ஏதாவது சொல்லியிருந்தாலும் அதைக் கேட்கும் நிலைமையில் அவன் இல்லை.

கைதிகள் முகாம்.

சிறைப்பட்டிருந்த கைதிகள் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு விடுதலை செய்யப்பட்டு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்க, ஓட்டோ, எமிலிகாவுடன் அந்த முகாமை அணுகினான்.

''இங்கேயே இரு குக்கூ..... நாம் தப்பித்துப் போக ஒரு வழி செய்துவிட்டு வருகிறேன்'' என்றான்.

நகைப் பெட்டியையும், பணத்தையும் அவளருகே வைத்துவிட்டு, எதிரிப் படை அதிகாரிகள் இருந்த இடத்திற்குப் போனான். அவன் மனத்தில் ஒரு தீர்மானம் உருவாகி இருந்தது. அதிகாரிகளை நெருங்க நெருங்க நொண்ட ஆரம்பித்தான்.

அவன் அகன்றவுடன் எமிலிகா அந்த நகைப் பெட்டியைத் திறந்து பரிசோதித்தாள். அம்மா கொடுத்த தோடுகள் இரண்டும் பத்திரமாக இருந்தன. அவளைப் பார்த்துக் கண் சிமிட்டின. எமிலிகா அவற்றை எடுத்துக் கொண்டாள். நகைப் பெட்டியை அங்கேயே விட்டுவிட்டு அகன்றாள்.

''உன் பெயர்?'' என்று கேட்டார் எதிரிப் படை அதிகாரி.

''அண்டனி ஜோஸப்'' என்றான் ஓட்டோ.

''என்ன செய்து கொண்டிருந்தாய்?''

''கண் டாக்டராக இருந்தேன் காப்டன்.''

''ஏன் போர்க் கைதி ஆனாய்?''

''ஒரு கைதிக்கு ரொட்டி கொடுத்த காரணத்திற்காக.''

''ஏன் நொண்டுகிறாய்?''

''இந்தக் கைதிக்கு ஜெர்மன் நாஜிகள் அளித்த பரிசு.''

அதிகாரிகள் தங்களுடைய ஃபைல்களைப் புரட்டினார்கள். அண்டனி ஜோஸப். கண் டாக்டர். ரொட்டி அளித்து கைதி. கால் நொண்டி. ஓ.கே.

''ஆல் ஓ.கே. உன் சொந்த ஊருக்கு நீ போகலாம்.''

''தாங்க்யூ காப்டன்'' என்றான் ஓட்டோ மகிழ்ச்சியுடன்.

''குக்கூ'' என்று கத்திக் கொண்டே வந்தான்.

அவன் விட்டுச் சென்ற இடத்தில் குக்கூவைக் காணவில்லை!

''குக்கூ..... குக்கூ.....'' ஓட்டோ பரபரப்பாய்த் தேடத் தொடங்க, ஒரு கைதி ஓட்டோவை அடையாளம் கண்டு கொண்டான்.

''டேய் அதோ ஓட்டோ! ஜெர்மானியக் காப்டன்! நம்மைக் கொடுமைப்படுத்தியவன்!'' என்று கத்தினான். ஒரு நொடியில் ஓட்டோவிற்கு அத்தனை பேரும் எதிரிகளாய் மாறினார்கள். ஆளுக்கொரு கல்லைப் பொறுக்கிக் கொண்டார்கள்.

ஓட்டோ மெது மெதுவாய்ப் பின் வாங்க, அவர்கள் அத்தனை பேரும் அவனை நோக்கிக் கற்களுடன் முன்னேறினார்கள். முதல் கல் ஓட்டோவைத் தாக்கியது.

பல தேடல்களுக்குப் பிறகு.....

''அம்மா'' என்று எமிலிகா அம்மாவின் மடியில் முகம் புதைத்தாள். குலுங்கினாள்.

''நன்றாக இருக்கிறாயா எமிலிகா?''

''இப்படி இளைத்துவிட்டாயே அம்மா?''

''நான் கொடுத்த தோடுகள்?''

எமிலிகா புன்முறுவலுடன் உள்ளங்கையை விரித்துக் காட்டினாள்!

— ஜெயமன்மதன்.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் கும்பகோணம் "ராஜா வேத காவ்ய பாடசாலை"யை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணுக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் 200/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2000/— மூலதனம் ஏற்படுத்தியோ (அ) அவ்வப்போது ரூ. 200/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் சமாராதனை நடத்தும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமானவரி விலக்கு உண்டு.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்ய மஹாராஜ ஸாஹேப்

ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,

D—76, 3வது கிராஸ், ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்—612 001.



வட்ட மேஜை

* என்ன சார் கொஞ்ச நாள் முன்பு வரை அட்டையில் பரபரப்பான தலைப்பில் 'கவர் ஸ்டோரி' வெளியிட்டு ஒரு கலக்கு கலக்கி வந்த நீங்க இப்படி கீழிறங்கலாமா? உபயோகமான 'கவர் ஸ்டோரி'யையே உம்மிடம் எதிர்பார்க்கிறோம் ஐயா.

சிங்காரப்பேட்டை. என். சங்கர்.

மக்கள் விழித்துக் கொள்வார்களா?

* மக்களுக்குச் சேவை செய்யும் அதிகாரிகளுக்கு டிரான்ஸ்பர் ஆர்டர் கொடுக்கும் அமைச்சர்களுக்கு மக்கள் எப்போதுதான் டிரான்ஸ்பர் ஆர்டர் கொடுப்பார்களோ, தெரியவில்லை?

கவுந்தப்பாடி. ராம்தினகர்.

பாலையார் திரும்பிப் பார்க்கட்டும்

* "பாவம் அதிகாரிகள்....." என்ற தலைப்பில் பாலை. சண்முகம் தீட்டிய உருக்காட்டுப் படலத்தைக் கண்டு மெய்யுருகிப் போனேன். ஆனால் ஒன்று. கருணாநிதியின் ஆட்சி தர்பாரில் நடந்த டிரான்ஸ்பர் அலங்கோலங்களைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் இப்போது கண்ணீர் வடிப்பது முதலைக் கண்ணீராகத்தான் முடியும். பாலையார் சற்று திரும்பிப் பார்க்கட்டும்.

திருக்கோவிலூர். ஆர். சுப்பராவ்.

புதுப் படங்களைப் பாருங்கள்!

* சார்! புதுசா ஒரு படம் வந்தால் உடனே பார்த்துடுங்க.... இல்லாவிட்டால் 61ம் பக்கம் வெளியான 'புதுசா ஒரு பழமொழி'ங்கற ஜோக் (மாமியார்கள் ஜாக்கிரதை படத்தில் மூர்த்தி சொன்னது)களைப் போல் நிறைய 'ஜெராக்ஸ்' ஜோக்குகளை நாங்க படிக்கும் அவல நிலைதான் ஏற்படும்!

திண்டுக்கல். போடி ரவிராஜ்.

சுவையான அவல்

* ஆராதனை விழா அவல் கொறிக்கச் சுவையாக இருந்தது.

தோப்புத்துறை. ஹெச். கே. நாசர்.

வித்தியாசமானவர்

* பரிசுகளையும், பாராட்டுக்களையும் கண்டு பிரமித்து வாயடைத்துப் போகாமல் எழுத்துலகில் இப்போது தாம் இருக்கும் இடத்திற்கு ஈடு இணை ஏதும் இல்லை என சொல்லிக் கொள்ளும் ஜெயகாந்தன் ஒரு வித்தியாசமான மனிதரேதான்!

நெல்லிக்குப்பம். எஸ். ஜே. சலீம் தமீஜுதீன்.

கேள்விக் குறி....

* மத்திய தொழில் அமைச்சர் அருணாசலத்தின் பேட்டி அருமை. கேள்விகளுக்கு உடன் பதில் சொல்லும் திறமையும், மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியுள்ள தொழில் அனுமதிகளைப் புள்ளி விவரத்தோடு சொல்லிய நேர்த்தியும் அவர் அப்பதவிக்குத் தகுதியானவர்தான் என்பதை நிரூபித்தது. ஆனால் அனுமதிகளை நமது மாநில அரசு எந்த அளவிற்கு அக்கறையோடு செயல்படுத்துகிறது என்பதுதான் கேள்விக்குறி.

குடியாத்தம்–2. ஸ்ரீ ஸைபரிதாசன்.

உன்னதப் பயணம்

* ஷெட்டியின் பயணம் உண்மையிலேயே ஒரு உன்னதப் பயணம். அரசியல் லாபத்துக்காக விதம் விதமாக பயணம் மேற்கொள்ளும் பயணிகளை (அரசியல்வாதி)விட ஷெட்டி பல படிகள் உயர்ந்து நிற்கிறார். அவரிடம் வரதட்சணை வாங்கமாட்டோம். என்று உறுதியளித்தவர்களில் பத்து சதவித பேர்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றினாலும்கூட அது அவருக்கு வெற்றியே!

விழுப்புரம். வி. பிச்சை.

பாதுகாக்க வேண்டும்

* தோல் தொழில் பற்றிய ஆசிரியரின் இருவாரக் கட்டுரை பிரமாதம். பெயர்வெளியிட விரும்பாத அந்த நண்பரின் கூற்றுப் போல, இறைவன் நமக்களித்த பூமியை, அவன் தந்த விதமாகவே பாதுகாத்து, அடுத்த தலைமுறையினருக்குத் தரவேண்டியது நம் கடமை என்ற எண்ணத்திலாவது இத்தொழிலைச் சேர்ந்தவர்கள், சுற்றுப்புறச் சூழல் கெடா வண்ணம் பாதுகாக்க வேண்டும்!

கொச்சின். பி.ப.சுந்தர்சன்.

சிந்திக்கச் செய்தீர்கள்

* சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம் என்ற பாரதியின் தீர்க்க தரிசனக் கருத்துக்களை மனத்தில் கொண்டு தாங்கள் எழுதிய 'நெடுமாறன் வெளியிட்ட அதிர்ச்சி தரும் தகவல்கள்' என்னும் தலையங்கத்தின் மூலம் தேசப் பற்றுள்ள ஒவ்வொரு இந்தியக் குடிமகனையும் சிந்திக்க வைத்துவிட்டீர்கள்.

திருச்சி–5. எம்.காமராஜ்.

* நெடுமாறன் தந்த தகவல்கள் பற்றி நீங்கள் தீட்டியிருக்கும் தலையங்கம் அறிவுபூர்வமான முறையில் சரியான நேரத்தில் சரியாக எழுதப்பட்ட கருத்துக் குவியல்!

ஸ்ரீரங்கம். வி.சௌரிராஜன்.

எங்கே பரபரப்பு?

* 'நதியா ரேவதிக்குப் போட்டியா?' என்ற தலைப்பைப் பார்த்தவுடன் ஏதோ காரசாரமான விவாதம் இருக்கப் போகிறது என்று புரட்டினால் 'சப்.' நதியாவின் சுயசரிதமாகவே இருந்தது.

கோவை–9. கோ.சு. சுரேஷ்.

முத்தான சந்திப்பு: சத்தான பேட்டி!

* நதியாவின் அழகிய அட்டை வண்ணப் படமும், ஆரோக்யமான பேட்டியும், ஒரு முத்தான சந்திப்பையும், சத்தான கட்டுரையையும் படித்த உணர்வை உண்டாக்கின!

பண்ருட்டி. எஸ்.தமீஜுதீன்.



* 'கோபம்.







ராஜாஜி வாழ்க்கை வரலாறு — 11

ராஜ்மோகன் காந்தி



ஜப்பான் அபாயமும் பாகிஸ்தான் பிரிவினையும்

12

இந்தியாவின் தலைவாசலில் ஜப்பான் வந்து நின்றதானது காங்கிரஸ்காரர்களிடம் மாறுபட்ட அபிப்பிராயங்களைத் தோற்றுவித்தது. ஜப்பானின் உண்மையான நோக்கத்தை அறிந்திராத சிறுபான்மைப் பகுதியினர், பிரிட்டிஷ் அரசிடம் கொண்ட வெறுப்பு, கண்களை மறைக்க, ஓர் ஆசிய சக்தியான ஜப்பானின் தலையீட்டால், தங்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று நம்பினார்கள். இவர்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமாயிருந்த மற்றொரு பிரிவினர் பிரிட்டிஷாருக்குப் பதிலாக ஜப்பானியரை எஜமானராகப் பெறுவதில் லாபம் ஏதும் இல்லை என்று உணர்ந்தனர். ஆனால் இவர்கள் தங்களை ஜப்பானியரின் எதிரிகளாகக் காட்டிக் கொள்ள விரும்பாமல் நடுநிலை வகிப்பதே அன்றைய அரசியல் நோக்கில் புத்திசாலித்தனம் என்று நினைத்தனர். மூன்றாவதாக ஒரு மிகப் பெரிய பிரிவு பிரிட்டிஷ் அரசையும் ஜப்பானையும் ஒருங்கே எதிர்க்க வேண்டும் என்று கருதியது. இப்பிரிவில்தான் பெரும்பாலான காங்கிரஸ் தலைவர்களும் இருந்தார்கள். இருப்பினும் இந்தப் பிரிவைச் சேர்ந்த யாருமே ஜப்பானிய ஆபத்து குறித்து ஸி. ஆர். கவலைப்பட்ட அளவுக்குக் கவலைப்படவில்லை. ஜப்பானியப் படைகளின் தாக்குதலுக்குத் தென்னிந்தியாதான் இயல்பான முதல் இலக்காக இருக்கும் என்று நிச்சயமாக நம்பிய ஸி. ஆர். ஒரு தேசிய அரசு நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்த இந்த அபாயத்தையே எடுத்துக் காட்டி வாதாடினார்.

ஸி. ஆரின் கூர்மையான அறிவு, பரபரப்புடன் செயல்பட்டு நிலைமைகளை அவ்வப்போது அலசி, புதுப்புதுத் தீர்வுகளையும் தேடியது. கிரிப்ஸ் தூது தோல்வியுற்றதற்கு பிரிட்டிஷ் அரசு மட்டுமின்றி கிரிப்ஸும் கூடக் காரணம் என்று இதுநாள்வரை பழிசுமத்தி வந்தார் அவர். பிரிட்டிஷார் முக்கியமான அதிகாரங்களை இந்தியாவுக்கு விட்டுக் கொடுக்கவிரும்பவில்லை என்று கூறிவந்தார். ஆனால் இப்போது 'ஹிந்து—முஸ்லிம் பிளவுதான் அதிகார மாற்றத்துக்குப் பெரும் தடையாக உள்ளது' என்ற பிரிட்டிஷ் தரப்புக் குற்றச்சாட்டில் உண்மையும் இருக்கத்தான் செய்கிறதோ என்று சிந்தித்தார் ஸி. ஆர். காங்கிரஸும் லீகும் ஒன்றாக இணைந்து ஒரே குரலில் பேச முடிந்திருந்தால் கிரிப்ஸுடன் நடந்த பேச்சு வார்த்தைகளின் போக்கே வேறு விதமாக அமைந்திருக்குமோ? ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை இருந்திருந்தால் பேச்சு வார்த்தைகளின் முடிவு வேறாகத்தான் இருந்திருக்கும் என்று கணக்குப் போட்ட ஸி. ஆர். ஒரு சர்ச்சைக்குரிய தீர்மானத்துக்கு வந்தார்: இந்தியா சுயாட்சியை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் முஸ்லிம் லீக் முட்டுக்கட்டை போடுவதைத் தவிர்க்க வேண்டுமானால், லீகின் பெரும்பாலான கோரிக்கைகளுக்குக் காங்கிரஸ் விட்டுக் கொடுக்கத் தயாராகத்தான் வேண்டும். பிரிட்டன், லீக் ஆகிய இரண்டு எதிரிகளைச் சமாளிப்பது பெரிய பிரச்னை என்பது சமீப காலமாகத் தெளிவாகப் புரிய ஆரம்பித்திருந்தது. பேச்சு வார்த்தைகளின்போது ஒரு தரப்பில் வென்ற லாபங்களை மற்றொரு பக்கத்தில் அடைந்த நஷ்டங்கள் முறியடித்துக் கொண்டே இருந்தன. இப்போது, இவ்விருவரையும்விடப் பெரிய மூன்றாவது எதிரியாக ஜப்பான் கிளம்பியிருந்தது. யாரேனும் ஒரு எதிரியிடமாவது சமாதானம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் காங்கிரஸுக்கு ஏற்பட்டிருந்தது. இதைக் கருத்தில் கொண்டு இயங்கினார் ஸி. ஆர்.

ஸி. ஆர். வலியுறுத்தியதின் பேரில் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி, இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது

இவ்விரண்டு தீர்மானங்களும் அதி தீவிரமான சர்ச்சைக்கும் அதைத் தொடர்ந்து ஸி.ஆர். காங்கிரஸிலிருந்தே ராஜினாமா செய்துவிடவும் காரணமாக இருந்தன. முதல் தீர்மானத்தின்படி, அபாயகரமான இத் தருணத்தில் அனைத்திந்திய ரீதியில் ஒரு தேசிய அரசு அமைவதற்குத் தடையாக உள்ள மிகப் பெரிய முட்டுக்கட்டை நீக்கப்பட வேண்டும்; இதற்கு, 'சில பிரதேசங்களைப் பிரித்துத் தரவேண்டும்' என்ற லீகின் கோரிக்கைக்கு விட்டுக் கொடுக்கக் காங்கிரஸ் தயாராக வேண்டும் என்று சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டிக்குச் சிபாரிசு செய்தது. இரண்டாவது தீர்மானம், ஜப்பான் குண்டு போட்டோ, துருப்புக்களை அனுப்பியோ, தென்னகத்தைத் தாக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதால் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியானது, முஸ்லீம் லீகுடன் இணைந்து மக்களாட்சி அமைக்கவும் பொது மக்களைப் போருக்கும்,தியாகத்துக்கும்தயார்செய்யவும் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியிடம் அனுமதி கேட்டது.

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத் தொடர் நடப்பதற்குச் சற்று முன்பாக ஸி. ஆரால் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி கூட்டப்பட்டு இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியை இத்தீர்மானங்கள் கவரும் என்று அவர் போட்ட கணக்குத் தப்பாகிவிட்டது. ஆஜாத் தாம் பெரிதும் வியப்படைந்ததாகக் கூறினார். ஸி. ஆரின் இந்த நடவடிக்கை 'விரும்பத்தகாதது' 'விநோதமானது' என்றார் நேரு. படேல் மிகுந்த கோபம் அடைந்திருந்தார். மஹாத்மா தம் வழக்கப்படி வெளிப்படையாகப் பேசியபோதிலும் சகிப்புத் தன்மையும் காட்டினார். ஸி. ஆருடன் சேவா கிராமத்தில் இரண்டு மணி நேரம் உரையாடிய பிறகு அவர் கூறினார்:

"நான் ஸி. ஆரை முழுமையாக எதிர்க்கிறேன். ஆனால் அவர் முழுக்க முழுக்க சட்ட வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் நடந்து கொண்டிருக்கிறார். நான் தனி மனிதன் சுதந்திரத்தையும் தர்ம சங்கடமளிக்கக் கூடிய அபிப்ராயங்களைக்கூட வெளிப்படையாக உணர்த்தும் கருத்துச் சுதந்திரத்தையும் நேசிப்பவன். முக்கியமான விஷயங்களைப் பற்றித் தம் சகாக்களுடன் கலந்தாலோசிக்காமல் பேசியதில் ஸி. ஆர். அவசரப்பட்டுவிட்டார். ஆனால் இன்றைய நெருக்கடியான காலக் கட்டத்தில் யார்தான் அவசரப்படாமல் இருக்க முடியும்? அதுவும் மதிப்பு மிக்க ஒரு விஷயத்தை உணர்த்தப் போவதாக ஒருவர் நினைக்கையில் அவசரப்படாமல் என்ன செய்வார்?"

பாகிஸ்தான் பிரிவினைக் கருத்தை தீவிரமாக எதிர்த்த ஹிந்து மஹா சபையினர், ஸி.ஆர். அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி தொடரில் பங்கேற்க அலகாபாத் ரயில் நிலையத்தில் இறங்கியபோது அவருக்குக் கறுப்புக் கொடி காண்பித்தனர். 'மாகாண அளவில் ஒரு கூட்டத்தில் இதுபோன்ற பிரச்னைக்குரிய தீர்மானங்களை நிறைவேற்ற ஊக்குவிப்பதற்கு முன்னால் ஸி. ஆர். தேசிய அளவில் தன் சக தலைவர்களைக் கலந்தாலோசித்திருக்க வேண்டும்' என்று ஆஜாத் கூறியபோது ஸி.ஆர். அதை ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித்தார். காரியக் கமிட்டியிலிருந்து ராஜினாமா செய்தார்.

ஸி.ஆர். கூறினார்: "செயல்படாமல் அபாரத் திறமையுடன் ஒய்ந்து கிடப்பதற்கு இது தருணமல்ல. நாம் துணிந்து செயல்படுவோம். முஸ்லீம்கள் கேட்பதை அவர்களுக்குக் கொடுப்போம். சட்டைப் பையில் நாம் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் பொருளை எடுத்து மேஜையில் கண்ணெதிரே போட்டு விட்டால் அவர்களே அது தங்களுக்குத் தேவையில்லை என்று கூறி விடுவார்கள்."

ஒரு குரல்: "எல்லா முஸ்லிம்களும் பிரிவினையை விரும்புகிறார்களா, அல்லது முஸ்லிம் லீக் மட்டுமே அதைக் கேட்கிறதா?" ஸி.ஆர். "பெரும்பான்மை முஸ்லிம்களிடையே லீகுக்கு உள்ள செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் குறைப்பதென்பது நமக்கு மிகவும் கடினமாகவே இருந்து வந்திருக்கிறது." நேரு: "அப்படி இல்லை! இல்லவே இல்லை!" ஸி. ஆர். (நேருவை நோக்கி): "நான் உங்களுக்குச் சவால் விடுகிறேன். சாதித்துக் காட்டுங்கள்! பிராந்திய உணர்வுகளையும் மத வேறுபாடுகளையும் கடந்த ஒரு தீர்வை உருவாக்குங்கள். இதை உங்களால் சாதிக்க முடிந்தால் உங்கள் முன் மண்டியிட்டு வணங்குவேன்."

"ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்களை அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராக இந்தியயூனியனில் இருக்கவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவதைக் காங்கிரஸால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது" என்று கிரிப்ஸ்திட்டத்துக்குப் பதில் அளிக்கையில் காங்கிரஸ் காரிய கமிட்டி கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டினார் ஸி.ஆர். காரிய கமிட்டியின் இந்தக் கருத்துக்கு அதிகமாக எதையும் தான் வலியுறுத்தவோ, கேட்கவோ இல்லை என்றார். அவர் பேச்சின் முடிவில் எல்லோரும் நட்புணர்வோடு கைதட்டினாலும் 'கலகக்காரன்', 'பிரிவினைவாதி' என்ற முத்திரைகள் குத்தப்பட்டவராகிவிட்டார். காங்கிரஸ் பிரிவினையைச் சந்திக்கும் மனோநிலையில் இல்லை. ஸி. ஆரின் பாகிஸ்தான் தீர்மானம் 120—15 என்ற வோட்டு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. தமக்கிருந்த பேரும் புகழும் மிகவும் குறைந்து போவதாக இருந்தாலும் தமக்குச் சரி என்று நிச்சயமாகத் தோன்றிய விஷயத்தில் மன உறுதியோடு அமைதியாக இருக்கும் ஸி.ஆரின் குண நலன் இந்த விவாதத்திலிருந்து வெளிப்பட்டது எனில், வோட்டுக்களின் எண்ணிக்கையோ அவர் எவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுப் போனார் என்பதை உணர்த்தியது.

(தொடரும்)

தமிழாக்கம்: **சீதாரவி.**

மாதம் ஒரு மாவட்டம்

கல்கி ஏற்கும் சமுதாயப் பணி



தஞ்சை

மாவட்ட மக்களுக்கு...

மாதம் ஒரு மாவட்டம்' என்ற தலைப்பில் கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணி பற்றி அனைவருக்கும் தெரியும். அத்திட்டத்தின் கீழ் இந்த மாதம் தஞ்சை மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

நன்செயும், புன்செயும் கொஞ்சி விளையாடும் தஞ்சை மாவட்டத்தில் இப்போது காவிரி நீர்ப் பற்றாக்குறையால் எழும் விவசாயிகளின் வேதனைக் குரல்களைச் சொல்லி மாளாது. இந்த வேதனையோடு, உங்கள் ஊரில் அல்லது மாவட்டத்தில் ஆண்டாண்டு காலமாகத் தீர்க்கப்படாத பிரச்னைகளும் ஏராளமாய் இருக்கும்.

எத்தனையோ முறை மனுக்கள் எழுதி அதிகாரிகளிடம், எம்.எல்.ஏ.க்கள் அல்லது அமைச்சர்களிடம் முறையிட்டும் பொதுப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்றோ அல்லது தனி நபர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றோ வெறுப்பாய் மனம் கொதித்துக் கொண்டிருப்பீர்கள். அல்லது சரித்திரப் புகழ்பெற்ற உங்கள் மாவட்டத்தின் சிறப்பியல்புகள் பற்றியும், தனிமனித சாதனைகள் பற்றியும் வெளியுலகுக்குத் தெரியவில்லையே என்றும் நீங்கள் ஏங்கிக் கொண்டிருக்கலாம். இவை பற்றியெல்லாம் நன்கு சிந்தித்துச் சுருக்கமாகக் கல்கி அலுவலகத்திற்குக் கடிதம் எழுதுங்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரவர் ஊர்களிலுள்ள பொதுப் பிரச்னைகளையும், அமைச்சர்கள் அல்லது அரசு அதிகாரிகளின் மெத்தனப் போக்கையும் அநீதிகளையும் எழுதி தங்கள் முழு முகவரியோடு எங்களுக்கு அனுப்பலாம்.

உங்களுடைய கடிதங்களையெல்லாம் பரிசிலனை செய்த பிறகு, முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, ஏப்ரல் மாதம் இரண்டாவது வாரத்தில் கல்கி இதழின் பிரதிநிதிகள் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் உங்களைச் சந்திக்க வரும் தேதி அனைவருக்கும் தனித் தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும். அப்போது நீங்கள் அவர்களிடம் ஆதாரங்களைக் காட்டலாம்; பிரச்னைக்குரிய இடங்களுக்கு நேரில் அழைத்துச் சென்றும் காண்பிக்கலாம். பின்னர் நமது பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது அரசியல்வாதிகளைச் சந்திக்க, முயற்சி செய்வார்கள். அவையெல்லாம் 'மே' மாதக் கல்கி இதழ்களில் கட்டுரைகளாகவும், பேட்டிகளாகவும் புகைப்படங்களாகவும் வெளியாகும்.

எல்லாவற்றையும் பிரசுரித்துவிடவோ அல்லது எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வு கண்டுவிடவோ முடியாதுதான் என்றாலும் அவற்றையெல்லாம் வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதின் மூலம் அரசின் கவனத்தைத் திருப்புவதோடு, மக்களிடையிலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாமல்லவா! எனவே, உடனடியாக எழுதி அனுப்புங்கள்.

தஞ்சை மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், அநீதிகளும், வேதனைக் குரல்களும், சாதனைகளும் தாங்கிய உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 20.3.86. உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம் — தஞ்சை' என்று குறிப்பிட்டால் மிகவும் உதவியாய் இருக்கும்.

— ஆசிரியர்.

பி.கு: சென்ற மாதம் அறிவித்திருந்தபடி பெரியார் மாவட்டத்திலுள்ள குறைகளைக் கண்டறிவதற்காக மார்ச் இரண்டாவது வாரத்தில் நமது பிரதிநிதிகள் சுற்றுப் பயணம் செய்ய இருக்கிறார்கள். அது பற்றிய கட்டுரைகளும், புகைப்படங்களும் ஏப்ரல் மாதக் கல்கி இதழ்களில் வெளிவரும். நூற்றுக்கும் மேற்பட்ட கடிதங்களை எழுதி ஒத்துழைப்புத் தந்த பெரியார் மாவட்ட மக்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

எம்.ஜி.ஆரிடம் தெய்வசக்தி இருக்கிறதாமே?

* ராகவன், செங்கல்பட்டு

? பெட்ரோலியம் பொருள்கள் விலை உயர்வு பற்றிக் குறிப்பிடுகையில் நாம் சில தியாகங்களைச் செய்யத்தான் வேண்டும் என்று ராஜீவ் குறிப்பிட்டிருக்கிறாரே?

! சுதந்திரப் போராட்டத்துக்கு முன்பு தலைவர்கள், மக்கள் ஆகிய இருசாராரும் தியாகங்கள் புரிந்தார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு மக்கள் மட்டும் தியாகங்கள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்!

* இரா. சம்பத்குமார், இராசிபுரம்.

? அரசு ஊழியர்கள் அனைவரும் பணி நேரத்தில் பாட்ஜ் அணிய வேண்டும் என்ற உத்தரவால் பயன் என்ன?

! இதனால் லஞ்ச ஊழலில் இறங்க ஊழியர்கள் தயங்குவார்கள் என்று அரசு எதிர்பார்க்குமானால் ஏமாற்றமே ஏற்படும். உள்ளத் தூய்மை என்பது பாட்ஜ் குத்திக் கொள்வதால் ஏற்படுவதல்ல. இறைவனிடத்திலும் தலைவனிடத்திலும் பயபக்தி இருந்தால்தான் உண்டாகும். இதற்குத் தலைவர்கள் தங்கள் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் எழ இடமளிக்காதவகையில் முன்மாதிரியாக நடந்து கொண்டு வழிகாட்ட வேண்டும். இரண்டாவதாக எதற்கெடுத்தாலும் மக்கள் அரசை நாடி வர வேண்டிய அவசியமில்லாமல் சட்டதிட்டங்கள், விதிமுறைகள், கட்டுப்பாடுகளைத் தளர்த்திவிட வேண்டும். சலுகைகளை மிகக் குறைந்தபட்சமாக்க வேண்டும். இப்படி மக்கள் அனைவரையும் சமமாகப் பாவித்து, சுதந்திரமாக இயங்கச் செய்கிற ஆட்சியில் லஞ்ச ஊழல் மிகக் குறைந்தபட்சமாகிவிடும்.



* மோசடி தேர்தல்



* போப்புக்கு வியதி

* எச். கே. நாசர், தோப்புத்துறை.

? பிலிப்பைன்ஸ் நாட்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுக் குழப்பங்கள் குறித்து....?

! இன்றைய ஜனாதிபதி மார்கோஸ் தமது பதவியைத் தக்க வைத்துக் கொள்ளப் பகிரங்கமாகத் தேர்தலில் மோசடிகளைச் செய்ய வேண்டியிருந்ததே அவருக்கு மக்கள் ஆதரவில்லை என்பதை நிரூபிக்கிறது. எதிர்க் கட்சிகளை ஒடுக்கத் தமக்கு அதிகாரங்கள் இருப்பதாக அச்சுறுத்துவது தமது பதவிப் பீடம் ஆட்டம் கண்டுவிட்டதாக அவர் பயப்படுவதையே சுட்டிக்காட்டுகிறது. அங்கு மெய்யான ஜனநாயகம் மலருமா அல்லது உலகில் இன்று அதிகரித்துக் கொண்டே வருகிற போலி ஜனநாயகங்களுள் ஒன்றாக பிலிப்பைன்ஸும் விளங்குமா என்பது அந்நாட்டு மக்கள் எந்த அளவுக்குத் தீவிர ஜனநாயக வாதிகளாகவும் சுதந்திரப் பிரியர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைப் பொருத்த விஷயம்.

* ஆர். நாகராஜன், செம்பனார்கோயில் *

? நாடு இன்றுள்ள நிலையில் அமைச்சர்கள் சம்பளம் வாங்காமல் வேலை பார்த்தால் என்ன?

! தப்பு, தப்பு! அந்த எண்ணமே தப்பு. கிம்பளம் வாங்க அதுவே லைசென்ஸ் அளித்தது போலாகிவிடும். சம்பளத்தை மக்கள் கஞ்சத்தனம் பார்க்காமல் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தாராளமாகவே வழங்கிவிட வேண்டும். அப்போதுதான் கிம்பளம் வாங்குகிறவர்களைத் தட்டிக் கேட்க நமக்குத் தார்மீக பலம் இருக்கும்.

* கே. பிரதாப் சிங், அரகண்டநல்லூர்

? காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் சிவாஜியைக் கருவேப்பிலையாகத்தானே மதிக்கிறார்கள்?

! ம்....ம்.... சமயத்துக்குத் தக்கபடி அவரை வாழை இலையாகவும் வேப்பிலையாகவும் கூடப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் ஒன்று, உண்மையான தொண்டன் ஏதேனும் ஒருவிதத்தில் நாம் பயனாகிறோமே என்ற அளவிலேயே மகிழ்ச்சியும் நிறைவும் அடைவான்.

* ஈ. சோமசுந்தரம், திருச்செந்தூர்.

? கர்நாடக முதல்வர் ஹெக்டேயின் திடீர்

ராஜினாமா, பிரதமர் பதவி ஏற்பு எல்லாம் ஸ்டண்ட், நாடகம் என்று இ. காங்கிரஸ்காரர்களால் வர்ணிக்கப்படுகிறதே?

! நடந்த தவறுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்தபோது அவர் லால் பகதூர் சாஸ்திரியையும் ஓர் இக்கட்டான நிலையில் கட்சியும் மாநில ஆட்சியும் இருக்கும்போது 'எப்படியாவது போங்கள் எனக்கென்ன வந்தது' என்று ஒதுங்காமல் பொறுப்புணர்ந்து மறுபடி பாரங்களைச் சுமக்க முன் வந்தபோது அவர் ராஜாஜியையும் எனக்கு நினைவூட்டினார்.

* இரா. சுந்தையா, ஆலடியூர்

? ஜெயப்பிரகாஷை ஜாதி அபிமானி என்றும் எந்த சாதனையும் செய்யாதவர் என்றும் இல்லஸ்டிரேட்டட் வீக்லி பேட்டியில் மொரார்ஜி கூறியுள்ளாரே?

! அதே பேட்டியில் அவர் கூறியுள்ள வேறு பல அர்த்தமுள்ள கருத்துக்களை ஏற்றுக் கொண்டு இந்த அபத்தக் கூற்றை ஒதுக்கித் தள்ளிவிடுவோமே! ஜெ. பி. சுதந்திரப் போராட்ட வீரர். சுதந்திரத்துக்குப் பின் எதிர்க்கட்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட்டவர். கிருபளானி, ஜெ.பி.யின் சோஷலிஸ இயக்கம் அடைந்து வந்த பிராபல்யத்தைக் கண்டு அஞ்சித்தான்


* சரித்திரம் மறக்காது


* ஸ்டண்ட் நாடகமா?

அக்கொள்கையை காங்கிரஸ் சுவீகரித்துக் கொண்டுவிட்டது! அப்புறம் ஜெ.பி. வினோபாவின் பூதான இயக்க வெற்றிக்கு உதவியது; சம்பல் கொள்ளைக்காரர்களை அடிபணிய வைத்தது; எல்லாவற்றுக்கும் சிகரம் போல் இந்திராவின் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்து நடந்த கிளர்ச்சி; ஜனதா உருவானது; ஆட்சிக்கு வந்தது...... எல்லாவற்றையும் மொரார்ஜி மறந்தாலும் சரித்திரம் மறக்காதே!

* லலிதா ஸ்ரீனிவாசன், சென்னை—4

? எம்.ஜி. ஆரிடம் ஒரு தெய்வ சக்தி இருக்கிறதென்று நினைக்கிறேன்; நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

! தெய்வ சக்தி அவரிடம் மட்டுமா இருக்கிறது? மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனிடத்திலும் இருக்கிறது. கூடவே அசுர சக்தியும் இருக்கிறது. எதை, எந்த அளவில், எந்தெந்த சந்தர்ப்பத்தில் எப்படிப் பயன்படுத்துகிறோம்

* கருவேப்பிலையா?



* தெய்வ சக்தி



என்பதல்லவா முக்கியம்!

* வி. ஜி. சுவாமிநாதன், சென்னை.

? சின்மையானந்தாவை குறை கூறி நீங்கள் எழுதியுள்ள பதில் எனக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்துள்ளதே.....?

! அதை எழுத நேர்ந்தபோது எனக்கு ஏற்பட்ட மனவருத்தத்தைவிட உங்கள் வருத்தம் அதிகமானதாக இருக்க முடியாது. நான் விசுவ ஹிந்து பரிஷத்தின் விரோதி அல்ல. சுவாமி சின்மையானந்தாவை மிகவும் உயர்வாக மதிப்பவன். இதே சின்மையானந்தா உள்பட எத்தனையோ ஹிந்து மதத் தலைவர்கள் அயல்நாடுகளுக்குச் செல்லவில்லையா? ஹிந்து மதப் பிரசாரம் செய்யவில்லையா? கோயில்கள் கட்டவில்லையா? ஹரே கிருஷ்ணா போன்ற இயக்கங்கள் வளரவில்லையா? போப் இங்கு வந்து இந்நாட்டில் உள்ள லட்சோப லட்சம் கிறிஸ்தவர்களுக்குத் தரிசனம் தந்து மகிழ்வித்ததில் என்ன தவறு? இங்குள்ள கிறிஸ்தவர்கள் இந்தியர்கள் அல்லவா? நமது சகோதரர்கள்தானே? வோட்டுரிமை பெற்ற, இந்நாட்டு மன்னர்களான அவர்கள் சார்பில் நம் பிரதமர் போப்பை வரவேற்றதில் என்ன தவறு? மேலும் போப் மதத் தலைவர் மட்டுமல்ல, வாடிகன் நாட்டின் தலைவரும்கூட என்பதால் அவருக்கு அரசாங்க மரியாதை காட்டப்படுவதில் தவறில்லை என்று பல தடவை கூறியாகிவிட்டது. ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் PROTOCOL என்பதாக ஒன்றிருக்கிறது. அதன்படிதான் அந்தந்த நாட்டின் தலைவர்கள் நடந்து கொள்ள வேண்டும். நமது மனங்கள் விசாலமடையாது போனால் நமது ஹிந்து மதத்துக்குத் தீமைதான் ஏற்படும். தருமை ஆதீனம் சார்பில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் போப்பைச் சந்தித்ததையும் அவர் திருநீறு அணிவித்ததற்கு போப் மறுப்பேதும் கூறாததையும் எண்ணிப் பாருங்கள்.

---

* ரூ 10 பரிசு பெறுபவர்:


ஆர். நாகராஜன்,
3/65, மேலக்கட்டளை அக்ரஹாரம்,
செம்பனார்கோயில் 609 309.



நுழைவுக் கட்டணம்

பெண் பார்க்க
என்று
என்னைப் பார்க்க வரும்
மாப்பிள்ளைகளிடம்
நுழைவுக் கட்டணம்
வசூலித்திருந்தால்கூட
இன்னேரம்
என் திருமணத்திற்கு
அவர்கள் கேட்கும்
வரதட்சணைப் பணம்
சேர்ந்திருக்கும்.....

நா. மலையப்பன், முதலாண்டு,
பி. எஸ்ஸி வேதியல்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி
தேவகோட்டை.
இராமநாதபுர மாவட்டம்.



"டி.வி. நாடக நடிகர்; டி.வி. புகழ் வழங்கும் நாடகம் என்று விளம்பரப்படுத்த வேண்டாமெனக் கூறினேன், கேட்டீர்களா? இப்பொழுது டி.வி. மாதிரியே ஜனங்க இல்லாம நாம் மட்டும் நடிக்க வேண்டியதாயிட்டுது."

"..........? ....?"

எஸ். சரவணன்,
பி. காம் இரண்டாவது ஆண்டு,
யாதவ கல்லூரி, திருப்பாலை,
மதுரை—14.

வேலையில்லாத் திண்டாட்ட
அனல் தகிக்க
எதிர்காலப் பூஞ்சோலை
தென்படாமல்
வறுமைப் பாலைவனத்திற்கு
கல்லூரி வளரிலிருந்து
வெளியே அனுப்பும்
வாசலே
ரிசல்ட்.


– ப. குணசேகரன் பி.எஸ்ஸி



கி. பி. 1880 ல் முதன் முதலாக ஐரிஷ் நிலச்சுவான்தார் ஒருவருடைய காரியஸ்தரான, கேப்டன் சார்லஸ் கன்னிங்கம் பாய்காட் என்பவருக்கெதிராக, இந்தப் பகிஷ்கார முறை வழங்கப்பட்டதிலிருந்து இதற்குப் "பாய்காட்" (Boycott) அதாவது பகிஷ்காரம் என வழங்கப்படுகின்றது.

—இராமன் புதூர் ஜே. அருள்பிரகாஷ்,
இறுதியாண்டு கட்டிடப் பொறியியல்,
அரசு தொழில் நுட்பக் கல்லூரி,
நாகர்கோவில்—2.





பைசா நகரக் கோபுரத்தின் கதி என்ன?

சாய்ந்து கொண்டிருக்கும் பைசா நகர கோபுரத்தின் கதி என்ன? அதிகம் போனால் 80 ஆண்டுகள் கெடு வைத்திருக்கிறார்கள் கட்டிடக் கலை வல்லுனர்கள். 1911ம் ஆண்டிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 19ம் தேதி காலை 5 மணிக்கு அறிவியல் வல்லுனர்கள், ஆயுதங்களோடு இங்கு சுற்றுப் பயணம் செய்து, எத்தனை இன்ச் சாய்ந்துள்ளது என கணக்கிடுகிறார்கள். இதுவரை 14 அடி 10 இன்ச் அதுசாய்ந்துள்ளதாகக்கணக்கிட்டிருக்கிறார்கள். 12ம் நூற்றாண்டில் பொனானோ எனும் வல்லுனரால் துவக்கி வைக்கப்பட்ட இக்கோபுரம், நான்கு நபர் கைமாறி கடைசியாய் 1350ல் முடிக்கப்பட்டது. 29 டன் எடையுள்ள 7 ராட்சத மணிகள் இதன் உச்சியில் இருக்கின்றனவாம். இந்த மணிகளின் சப்தம் விஞ்ஞானிகளின் காதுகளில் பட, இந்த ஒலி அதிர்வினால் சாயும் விகிதம் அதிகரிக்கக் கூடுமென்ற பயத்தில், மணியோசைக்குத் தடை விதித்திருக்கிறார்கள். ஒலிச் சீர்கேடு (Noise Pollution) கூடுமானவரை தவிர்க்கப்படுகிறது.

பலர் பலவிதமான ஐடியாக்கள் அளித்தாலும், பெரும்பான்மையான முறைகளால் சாய்வு விகிதத்தைக் குறைக்க முடியவில்லை. சில ஐடியாக்கள் ரொம்பவும் வேடிக்கையானவை: கோபுரத்தைச் சுற்றி இரும்பால் கவசம் ஏற்படுத்தி, வலு பொருந்திய காந்தத்தைக் கவசத்திற்கு அருகில் பொருத்துவது என்பது அவற்றில் ஒன்று.

அமெரிக்க புரொபஸர் யாவோ டீலையர் சகா புரொபஸர் கொலோ நெட்டி போன்ற அறிஞர்கள் கூறிய நடவடிக்கைகளை எடுக்க இத்தாலி நாட்டு பொதுப் பணித்துறை தயங்கி வருகிறது. காரணம் சுற்றுலாப் பயணிகளால்வரும்அந்நியச்செலாவணியை இழக்க வேண்டி வருமோ என்ற பயம்தான். ஆண்டுதோறும் வரும் 4,00,000 சுற்றுலாப் பயணிகளை இழக்க,இத்தாலிய அரசு தயாராக இல்லை.

இதே நிலை தொடர்ந்தால் இத்தாலி பைசா நகர கோபுரத்தையே இழக்க வேண்டி வருமோ?

நன்றி: மிர்ரர்.

வெ. இராமசாமி, பி. காம்.
(அஞ்சல் வழி) (முதலாண்டு),
13, கந்தசாமித் தெரு
பண்ணுருட்டி—607 106.



"வரதட்சணை" "வேலை இல்லை"

வரதட்சணைப் பேய்
பிடித்ததால்
திருமணம் தடைபெற்ற
கன்னிகள்
விடும் கண்ணீர்
சமுத்திரமானாலும்
'வேலை இல்லை
போர்டைப் பார்த்துப் பார்த்து
இளைஞர்களின்
பெருமூச்சு
வெப்பத்தால்
ஆவியாக்கப்பட்டது.

ப. குணசேகரன், பி.எஸ்ஸி
இறுதி ஆண்டு (தாவரவியல்)
ஸ்காட் கிறித்தவ கல்லூரி,
நாகர்கோவில்—3.

எங்கள் கிராமத்து ஞானபீடம்!

—புதுக்கோட்டை
நா. முத்து பாஸ்கரன்.

எண்பத்தேழு பேர்களை
அட்டெண்டன்ஸ் எடுப்பதற்குள்
அவசரப்பட்டு —
மணியடித்துவிடும்!

அடுத்த வகுப்பு தொடங்கும்:—

உலக 'மேப்'பில் இல்லாத
மேரு மலையைத் தேடும்
இலக்கியம்!

கடன் வாங்க சொல்லித்தரும்
கணக்கு!

ஆண்டவனைக் காப்பாற்றும்
அறிவியல்!

ஆண்டவரைக் காப்பாற்றும்
வரலாறு!

வறுமைக் கோடுகளைக்
கண்டுகொள்ளாமல்,
வடஅட்சக்கோட்டை
வரையும் — புவியியல்!

அச்செழுத்துக்களை மேய்ந்த
அஜீரணத்தில் மாணவர்கள்!

வீட்டுக் கவலையோடு
வகுப்பில் சிரிக்கும்
ஆசிரியர்கள்!

இறந்த உலகமே
சிறந்த படிப்பாம் —
எங்கள் பள்ளிக்கு
கதவே கிடையாது,
கட்டடம் இருந்தால்தானே!

" எங்கள் பள்ளி நல்ல பள்ளி
கட்டடம் இரண்டு
பூங்கா ஒன்று" —
நடத்துவார் ஆசிரியர்!
" எங்கே சார் இருக்குது?" —
எறும்பு கடித்த
மரத்தடி மாணவன்
எழுந்து கேட்பான்!
" புத்தகத்தில் பார்'ரா" —
போடுவார் ஆசிரியர்.

போதி மரத்தடியில்
புத்தருக்கு ஞானம்!
புளிய மரத்தடியில்
மாணவர்க்குப் பாடம்!

இதுவே —
எங்கள் கிராமத்து
ஞானபீடம்!











Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.

REGISTERED No. M 6392
Registered as a Newspaper in Sri Lanka

V.V.D

தூரப்பனி பல சிறகடிக்க
இளமை ஊஞ்சலாடும் அழகி.
அவன் நெஞ்சைக் கவர்ந்தவைப் பல.
மெல்லத் தவழ்ந்து செல்லும் நீரோடை...
செல்லமாக வீசும் தென்றல்.
உள்ளம் கவர்ந்த கட்டழகன்.
கொள்ளை அழகு மலர்கள்.
பளபளப்பான நீண்ட கூந்தல்
அக்கூந்தலுக்கு
வி.வி.டி. தேங்காய் எண்ணெய்...





VVD-6/86

வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்

V.V.D